# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 317 புரட்டாதி 23ஆம் நாள் திங்கட்கிழமை 09 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


# ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு எந்தப் பிரச்சினைகளும் வராது

## அஸ்கிரிய பீட மகாநாயக்கரை சந்தித்த பின் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 9

"இடைக்கால அறிக்கையின் சிங்களப் பிரதியில் ஒற்றையாட்சி, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை என்ற அனைத்துமே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே எந்தப் பிரச்சினைகளும் ஏற்படப்போவதில்லை. இதனைத் தமிழர் தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளது" அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் பௌத்த மக்களின் உயர் பீடங்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்து இரண்டும் இருவேறு நிலைப்பாடுகளை இது வரை வெளிப்படுத்தியிருந்தன.

மல்வத்து பீடத்தினர், நாட்டைப் பிரிக்காத அதிகாரப் பகிர்வுக்கு இணக்கமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். அஸ்கிரிய பீடம் இதற்கு எதிரான நிலைப்பாட் டில் உள்ளது. ஒற்றையாட்சி தொடர வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அது இறுக்கமான நிலைப்பாட்டில் உள்ளது.

இலங்கையின் முக்கிய பௌத்த பீடங் >> 25

### உணவு ஒறுப்பில் உள்ள அரசியல் கைதிகளின் நிலை ஆபத்தில்

# வழக்கை இடம்மாற்ற சட்டமா அதிபர் மறுப்பு

## சுமந்திரன் எம்.பியிடம் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 9

சாட்சிகளின் பாதுகாப்பைக் காரணமாகக் கூறி அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு வழக்கை மீளவும் இடமாற்றமாட்டேன் என்று சட்டமா அதிபர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் உறுதியாகத் தெரிவித்தார்.

"சாட்சிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு. வழக்கை அதற்காக வவுனியாவிலிருந்து அநுராதபுரத்துக்கு இடமாற்றியதை ஏற்றுக் கொள்ள முடியாது. மீளவும் வவுனியாவுக்கு வழக்கை இடமாற்றவேண்டும்" என்று சட்டமா அதிபரிடம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

வவுனியாவில் 4 ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் மாற்றியுள்ளார். இதனை எதிர்த்து தமிழ் அரசியல் கைதிகள் மூவர் அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த இரண்டு வாரங்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சட்டமா அதிபருடன் அலைபேசியூடாக நேற்றுப் பேச்சு நடத்தினார்.

"வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு இதுவரை நடைபெற்றிருந்தாலும் அங்கு சென்று சாட்சியமளிப்பதற்கு சாட்சியாளர்கள் விரும்பவில்லை. அவர்கள் அநுராதபுர மேல் நீதிமன்றில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். வவுனியாவுக்குச் செல்வதற்குப் பாதுகாப்பு காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். தாம் அங்கு சாட்சியமளிக்கமாட்டோம் என்கின்றனர். அவர்களின் கோரிக்கையில் காணப்படும் நியாயத்தின் அடிப்படையில்தான் அந்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. மீண்டும் வவுனியாவுக்கு மாற்ற >> 25

# 14ஆவது நாள்

## அரசியல் கைதிகள் மூவரும் சிறை மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஒக். 9

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர்ந்து 14 நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகள் மூவரும் சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டனர். அநுராதபுரத்தில் இன்று நடைபெறவுள்ள அவர்களுக்கு எதிரான வழக் >> 25

## யாழ், வவுனியாவில் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்ட தமது வழக்கை மீளவும் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு வலியுறுத்தி அநுராதபுரம் சிறைச்சாலையில் செங்கன் எனப்படும் இராஜதுரை திருவருள், மதியழகன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகிய மூன்று தமிழ் அரசியல் கைதிகளும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ் அரசியல் கைதி >> 25

### சரத்தின் மனுவுக்கு எதிரான இடையீட்டு மனுக்கள் மீது இன்று விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 9

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்துக்கு எதிராக முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுக்கள் இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமானது, அரசமைப்புக்கு முரணான வகையிலேயே நிறைவேற்றப்பட்ட தாக சுட்டிக்காட்டப்பட்டு முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வாவால் கடந்த 28ஆம் திகதி அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அடிப்படை உரிமை மீறல் மனுவுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணி ரஜிக கொடித்துவக்கு, புரவெசி பலய அமைப்பின் >> 25

## 2018இல் வாகனங்களுக்கு டிஜிற்றல் இலக்கத் தகடுகள்

கொழும்பு, ஒக். 9

வாகனங்களுக்கு இலத்திரனியல் சமிக்ஞைகள் மூலம் இயங்கத்தக்க இலக்கத் தகடுகளை அடுத்த ஆண்டு தொடக்கம் விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜகத் சந்திரசிரி தெரிவித்தார்.

"இலத்திரனியல் சமிக்ஞைகள் மூலம் செயற்படும் இலக்கத் தகடுகள் வழங்கப்படவுள்ளன. >> 25

## மிளகாய்த் தூள் தூவிவிட்டு மாணவியிடம் சங்கிலி பறிப்பு

### புதுக்குடியிருப்பில் கும்பல் துணிகரம்

முல்லைத்தீவு, ஒக். 9

புதுக்குடியிருப்பில் மாணவி மீது மிளகாய்த்தூள் வீசிவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிஸில் முறையி >> 25

## மகசினில் தடுப்பிலுள்ளோர் அடையாள உணவு ஒறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

அநுராதபுரம் நீதிமன்றுக்கு வழக்கு இடமாற்றப்பட்டதற்கு எதிராக உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத் துள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவருக்கும் ஆதரவாக, மகசின் சிறைச்சாலையில் நேற்று அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளால் கடந்த வாரம் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்த நிலையில், மகசின் சிறைச்சாலை யில் நேற்று முழுவதும் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

(வ-31)

## வாழ்வாதாரம் தேடி சுவிஸுக்குச் சென்ற 2 பிள்ளைகளின் தந்தையே கொலை

### முல்லைத்தீவிலுள்ள உறவினர்கள் தவிப்பு கொழும்பு, பேர்ன் அரசுகள் மௌனம்



முல்லைத்தீவு, ஒக். 9

சுவிற்சர்லாந்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர், வறுமை காரணமாக வாழ்வாதாரத்தைத் தேடி முல்லைத்தீவிலிருந்து புலம்பெயர்ந்த 2 பிள்ளைகளின் தந்தை என்று அவரது உறவினர்கள் >> 25

### முச்சந்தி முரளி



கற்பூர வாசனை தெரியுமா? என சும்மாவா சொல்லியிருப்பினம் மூத்தோர்....

## அமைச்சர் சிவநேசனின் யோசனைக்கு இலங்கை ஆசிரியர் சங்கமும் கண்டனம்

### கல்வி வளர்ச்சிக்குப் போராட வேண்டியவர் அதனைப் பாழாக்க முயலக் கூடாது எனக் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 9

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் போராட வேண்டியவர், கிராமப்புற பாடசாலைகளை மூடுமாறு யோசனை முன்வைக்கக் கூடாது. வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் கருத்து பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வியைப் பாழாக்குவதாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

"ஆசிரியர்களை சமச்சீராகப் பங்கீடு செய்வதிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகள் அனைத்தையும் மூடிவிட்டு, அந்த பகுதி மாணவர்களை நகரப்புறப் பாடசா >> 25

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## வடக்கு ஓய்வூதியர் தினம் வவுனியாவில்

வவுனியா. ஒக்.9

வடமாகாண ஓய்வூதியர் தினம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் வவுனியா மாவட்ட செயலர் ரோகண புஸ்பகுமார தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் முதியோர்களுக்கான பேச்சுப போட்டி பரிசளிப்பு நிகழ்வு. முதியோர் கௌரவிப்பு. விருந்தினர்கள் உரை என்பன நடைபெற்றன.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா. வேதநாயகன் , கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் , ஓய்வூதிய திணைக்கள கணக்காளர், மன்னார் மாவட்ட பிரதம கணக்காளர் செல்வரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ரெனிநோட், வவுனியா மாவட்ட பிரதம கணக்காளர் பாலகுமார், வவுனியா மாவட்ட செயலக உதவி செயலாளர் கமலதாசன், ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர்கள், மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் இந்தமிழ் இனியன் செ.ஶ்ரீநிவாசன் , மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், ஓய்வூதியம் பெற்ற முதியோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி4)

## தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கருத்தரங்கு

வவுனியா.ஒக்.9

புதிய அரசமைப்பு வழிநடத்தற் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கட்சி உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு வவுனியா றோயல் கார்டன் மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் அரசதலைவர் சட்டத்தரணி எம்.சிற்றம்பலம், எஸ்.கந்தசாமி, இ.தம்பையா, என். சிறிகாந்தா. கட்சியின் உறுப்பினர் . அரசியல் ஆய்வாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அதில் அரசமைப்பு, வடமாகாண சபை தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# நிரந்தர செயலாளரை நியமிக்க முடியாது திணறும் அமைச்சர்

### மாவை எம்.பி. சாடல்

யாழ்ப்பாணம், ஒக். 9

வடக்கு மக்களை பொருத்து வீடு என்ற இரும்புக் கூட்டுக்குள் தள்ள மும்முரமாக நிற்கும் அமைச்சர் ஒருவர். தனக்கு என நிரந்தர செயலாளரையே நியமிக்க முடியாது திணறி வருகின்றார்.

இவ்வாறு சாடினார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் 5 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் உதவி வழங்கலும் நேற்று கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் போராடி வருகின்றனர். எமது மக்களின் வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற நாம் அரசுடன் பல முயற்சிகளை எடுத்துளளோம். அவற்றின் பயனாக நாம் மக்களுக்கான வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

வடக்கு மாகாண மக்களை இரும்புக் கூட்டுக்குள் அடைக்கும் திட்டத்தை இலங்கையின் மீள் குடியேற்ற அமைச்சர் முன்னெடுத்து வருகின்றார். ஆரம்பத்தில் 65 ஆயிரம் பேருக்கு பொருத்து வீடுகள் வழங்கப்படும் என்று முழங்கி வந்தார். இப்போது 6 ஆயிரம் பேருக்கு இரும்புக் கூடை அமைத்துக் கொடுக்கப்போகிறேன் என கூறி வருகின்றார். எமது மக்களை இரும்புக் கூட்டுக்குள் அமர்த்துவதற்கு மும்முரமாக நிற்கும் அந்த அமைச்சர் தனக்கு என செயலர் ஒருவரை நிரந்தரமாக நியமிக்க முடியாது திணறி வருகின்றார் .இது ஒரு வேடிக்கையாகும் - என்றார். (ற-8)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு. ஒக்.9

சிறிவஸ்திபுர. மொரகொடை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் 6 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதரம் பொலிஸ் நிலையை போதை ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் குழு ஒன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே அந்த நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## ஏழுமலையானை தரிசித்த மைத்திரிபால சிறிசேன

கொழும்பு. ஒக்.9

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் பெங்களூர் வழியாக திருப்பதி சென்றஅரச தலைவர், அவரது துணைவியார் ஜயந்தி புஸ்பாகுமாரி, மகன் தஹம் சிறிசேன ஆகியோர் பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தனர்.

நேற்று அதிகாலை அவர்கள் ஏழுமலையான் ஆலயத்தில் சுப்ரபாத சேவையின்போது வழிபாடுகளை மேற்கொண்டனர்.



திருப்பதி ஆலயத்தின் சார்பில், நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகளால் அரச தலைவர் கௌரவிக்கப்பட்டு, ஆலய பிரசாதமும் வழங்கப்பட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் மைத்திரிபால சிறிசேன, திருப்பதிக்குப் பயணம் மேற்கொண்ட மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2015 பெப்ரவரி மாதமும், கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதமும் திருப்பதிக்குப் பயணம் மேற்கொண்டு தரிசனம் செய்திருந்தார். (ற)

## வைத்தியசாலை தொடர்பில் விசமனத்தனமான பரப்புரை

### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

தனிப்பட்ட ஒருவரின் குறைகளை மறைப்பதற்காக வடக்கு மாகாணத்தின் உள்ள ஒரே ஒரு போதனா வைத்தியசாலை மீது அவதூறு பரப்பும் வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல குறைபாடுகள் உள்ளன என்றும், அவற்றைச் சீர் செய்யவேண்டும் என்றும் தெரிவித்து நேற்று மருத்துவமனையின் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது வைத்தியசாலைக்கு எதிராக விசமத்தனமான பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர் இந்தப் பகுதிக்கான திடீர் இறப்பு விசாரணை அதிகாரியாவார். தனது குறைகளை மறைக்கவே அவர் இதை ஏற்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவமனையில் சுகாதார அமைச்சின் செயலாளரால் விசாரணை ஒன்று நடத்தப்பட்டது. அதில் பங்குகொண்டு தகவல்களை வழங்க மறுத்த இந்தத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி போராட்டத்தை நடத்தியுள்ளார்.

மருத்துவமனை ஊழியர்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் எந்தவித அடிப்படையும் கிடையாது. வைத்தியசாலையில் உள்ள குறைகள் ஆராயப்படும் அதே வேளை, குறைபாடுகள் தொடர்பில் மக்கள் எழுத்தில் முறையிடலாம். அவை தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ற-101)

## மருத்துவமனை குறைபாடுகளை நீக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.போதனா மருத்துவமனையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று தெரிவித்து யாழ். நகரப் பகுதியில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

விசேட கவனிப்பு தேவைப்படும் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்துக்கு (பேபி றூம்) அருகேயுள்ள சுவாச நோய் சிகிச்சை நிலையத்தை உடனடியாக வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும், நோயாளர்களை வைத்தியசாலை ஊழியர்கள் அன்போடும் கனிவோடும் நடத்த வேண்டும், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை விடுதிகளை தனித் தனி கட்டடங்களில் அமைக்க வேண்டும் என்பன உட்படப் பல கோரிக்கைகள் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களால் முன்வைக்கப்பட்டன. ஏழை நோயாளி உயிருடன் விளையாடாதே, நீதி வேண்டும் நீதி வேண்டும் அநியாய மரணங்களுக்கு நீதி வேண்டும், மருத்துவ சேவையை வியாபாரமாக்கியது யார் போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ற)

## அரச அதிகாரிகளும் மோசடியாளர்களே

### முறி மோசடி தொடர்பில் பிமல் கடும் சாடல்

கொழும்பு,ஒக்.9

மத்திய வங்கியின் முறி மோசடி தொடர்பில் கோப் குழு விசாரணையில் வெளிப்படுத்தப்படாத பல்வேறு விடயங்கள் அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகளில் வெளியாகின்றன என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

மொரகஹஹேன பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார். கடந்த காலங்களில் இலங்கையின் முக்கிய அரச வங்கிகளின் உயர் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, மத்தியவங்கியின் முறி கொடுக்கல் வாங்கல்களின்போது மோசடிகள் இடம்பெறவில்லை என்பதைப் போன்று வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

தற்போது மத்திய வங்கியின் மோசடிகளுடன் தொடர்புபட்டுள்ளமை உறுதியாகிவருகின்றது. இலங்கையின் அரசியல்வாதிகள் மட்டுமல்லாது, அரச அதிகாரிகளும் மோசடிக்காரர்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி4)

# அரசியல் கைதிகள் விடுவிப்புக்கு அழுத்தமளிப்போம்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறையில் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ளனர். அரசியல் கைதிகளின் விடுதலைதொடர்பில்மக்கள்விடுதலைமுன்னணியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் அதில் கேள்வி எழுப்பினார்.

"அரசியல் கைதிகளின் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. மனிதநேயத்தின் பிரகாரம், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். கடந்த காலங்களில் ஒரு சிலரை விடுதலை செய்வதற்கும், வழக்குத் தாக்கல் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

இன்றும் சிறையில் இருப்பவர்கள் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பல ஆண்டுகளாகவும், சிறைக் கைதிகளாக இருக்கின்றார்கள். அவர்கள் அனுபவித்த துன்பங்கள் போதும், சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென அரசுக்கு அழுத்தங்கள் கொடுத்து வருகிறது. என்றார். (ந-106)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தொடர்பில் விளக்கமளிப்பு

மட்டக்களப்பு, ஒக்.9

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாகவும், காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு மட்டக்களப்பில் நேற்று முன்தினமும், நேற்றும் நடைபெற்றது. இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதயத்தில் இளைஞர் அகம் அமைப்பின் பணிப்பாளர் பீ.சச்சிவானந்தம் தலைமையில் செயலமர்வு நடைபெற்றது.

இதன்போது, வளவாளர்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை செயற்பாட்டு நிறுவகத்தின் செயற்பாட்டாளர் றுக்கி பெர்ணாண்டோ, சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை குறித்து தெளிவூட்டினர்.

செயலமர்வின்போது அகம் அமைப்பின் திட்ட முகாமையாளர் கே.லவகுசராசா, கிழக்கு மாகாண ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் எல்.தேவஅதிரன் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-ரி4)


யாழ்ப்பாணம், முனீஸ்வரன் வீதியை அகலித்துத் தார் ஊற்றிச் சீரமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. (ந-7)

# தீர்வுக்கான சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்த வேண்டும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரச தலைவர், தலைமை அமைச்சர், சபாநாயகர் ஆகியோர் ஆர்வமுடன் உள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

சூர்யா அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற அடிப்படைச் சிங்களக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எங்கள் பிரதேசங்களில் தற்போது போதைப் பொருள் பாவனை இளம் சமூகத்தினரிடையே வேகமாகப் பரவியுள்ளது. வித்தியா கொலைச் சம்பவத்துக்கும் போதைப் பொருள் பாவனையே காரணம்.

இன விடுதலைக்காக உயிரை நீத்த மக்கள் கொண்ட இந்த சமூகத்தில் இப்போது போதைப் பொருள், மதுப் பாவனையால் உயிரை விடும் நிலமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாற வேண்டும். இளம் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (ந)

# துப்பாக்கியுடன் மூவர் கைது

கொழும்பு, ஒக்.9

கலன்பிந்துனுவெவ பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது உந்துருளியில் பயணித்த மூவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இருவர் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் ஏதோவொரு குற்றச் செயலை மேற்கொள்வதற்காகச் சென்ற போது இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்றும், தப்பிச் சென்ற நபரைக் கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ரி-4)

# உலக உளநல தினம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஒக்.9

உலக உளநல தினத்தை முன்னிட்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனை மைதானத்தில் நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. மாவட்டத்தைச் சேர்ந்த 170 விசேட தேவையுடைய மாணவர்கள் அதில் கலந்து கொண்டனர்.

வேள்ட்விசன் நிறுவனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மத்திய சுகாதார அமைச்சின் உளநலப் பணிப்பாளர் மருத்துவர் சந்திரமாலி டி.சில்வா கலந்து கொண்டார்.

கிளிநொச்சிப் பொது மருத்துவமனை மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள், சிறுவர் இல்லப் பொறுப்பதிகாரிகள், சிறுவர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ந-101)

# கடல், நிலம், ஆகாயத்தை விற்றது ராஜபக்சக்களே

## சாடுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, ஒக்.9

நாட்டை கூட்டரசே விற்கின்றது என்று குற்றஞ் சாட்டப்பட்டாலும் கடல், நிலம், ஆகாயம் என்னும் மூன்றையும் ராஜபக்சக்களே விற்றுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தேசிய சுகவாழ்வு கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்களுடைய தேவை, நேரம், பண விரயம் கருதி அரசால் இந்த நடமாடும் சேவைத் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்றிட்டங்கள் இன, மத பேதம் இன்றி அனைத்து மக்களின் நலன் கருதி செயற்படுத்தப்படுகின்றன.

அம்பாந்தோட்டைப் பகுதியில் நாட்டின் வளங்களை நல்லாட்சி அரசு வேறு நாட்டுக்கு விற்றுள்ளதாகத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

உண்மையை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையாக நாட்டை விற்றது ராஜபக்சக்களே. வானத்தையும், கற்பிட்டியில் கடலையும், பொலன்னறுவையில் நிலத்தையும் ஏனைய நாடுகளுக்கு விற்றது ராஜபக்சக்களே. அவர்கள் விட்டுச் சென்ற கடனை அடைப்பதற்காவே இடங்களை நாங்கள் குத்தகைக்குத் தருகின்றோம். அவர்கள் நாட்டின் வளங்களை நாம் விற்பதாக அனைவருக்கும் தெரியப்படுத்த முனைகின்றனர் - என்றார்.

நிகழ்வில் அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-ரி4)



## நாடாளுமன்றத்துக்கு இன்று வருகிறது அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்ட விவகாரம்

கொழும்பு, ஒக். 9

அம்பாந்தோட்டையிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மகிந்த அணி உறுப்பினர்களைப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும், நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டும் கலைத்தடித்த சம்பவம் தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்றத்தில் இன்று கேள்வி எழுப்பவுள்ளது.

சனநாயகத்துக்கு விரோதமான முறையில் அரசு செயற்பட்டது குறித்தும், ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் செயற்பட்ட விதம் சம்பந்தமாகவுமே கேள்விகள் எழுப்பப்படவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு வழங்கும் அரசின் திட்டத்தை எதிர்த்தும், தேசிய வளங்களை அரசு தாரை வார்க்கக்கூடாது என்று வலியுறுத்தியும் மகிந்த அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை அம்பாந்தோட்டையில் பெரிய எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்ததால் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது உயர் பொலிஸ் அதிகாரியொருவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நபர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளது.

பொலிஸ் அதிகாரி அந்த நபரைத் தனது கையினால் தாக்குகின்ற காணொலி சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியுள்ளது. (5)

# புதிய அரசமைப்பை உருவாக்க இறுதிச் சந்தர்ப்பம் இதுதான்

*நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் பௌசி தெரிவிப்பு*



கொழும்பு, ஒக். 9

அரசமைப்பை எந்தவொரு குறைபாடும் இல்லாத வகையில் உருவாக்க வேண்டும். இதுதான் இறுதிச் சந்தர்ப்பம். இந்தச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் இனிமேல் சந்தர்ப்பம் எதுவும் கிடைக்காது. இவ்வாறு நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பை எந்தவொரு குறைபாடும் ஏற்படாத வகையில் உருவாக்க வேண்டும். இதுதான் இறுதிச் சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை கைவிட்டால் இனிமேல் சந்தர்ப்பம் கிடைக்காது. அனைத்து இனத்தவர்களும் இலங்கையர்களாக வாழும் வகையில் அரசமைப்பு உருவாக்க வேண்டும்.

இந்த விடயத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்குச் சரியான சந்தர்ப்பம் இதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்தை கைவிட்டால் இனிமேலும் எதுவுமே செய்ய முடியாமல் போய்விடும். அனைவரும் ஒத்துழைப்புத் தந்து புதிய அரசமைப்பை உருவாக்குதவதற்கு உதவி புரிய வேண்டும் -என்றார். (5,31)

## நாட்டின் ஓர் அங்குலத்தையேனும் தாரைவார்க்காது கூட்டு அரசு

*அயலுறவுத்துறை அமைச்சர் திட்டவட்டம்*

கொழும்பு, ஒக். 9

இலங்கையின் ஒரு சிறு அங்குலத்தையேனும் நாங்கள் எவருக்கும் தாரைவார்க்கப்போவதில்லை. அதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம். அப்படியிருக்கையில், நாங்கள் மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு விற்கப் போவதாக எதிர்க்கட்சிகள் பொய்ப் பரப்புரையை ஆரம்பித்திருக்கின்றன. அது தவறானது. சீனாவைப் போலவே எங்களுக்கு இந்தியாவும் முக்கியமானது என்பதை எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது. இவ்வாறு அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பன, 'உதயன் பத்திரிகையிடம்' தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் மகிந்த அணியின் ஆர்ப்பாட்டமொன்று இந்திய கொன்சியூலர் அலுவலகத்தின் முன்னால் நடைபெற்றமை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச வளங்களை நாங்கள் விற்கவில்லை. இனி விற்கப்போவதுமில்லை. நாட்டின் இறையாண்மைக்கு எதிராகச் சென்று நிலத்தின் ஓர் அங்குலத்தையேனும் நாம் எவருக்கும் விற்கப்போவதில்லை. எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல நாங்கள் மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவிடம் முழுமையாகத் தாரைவார்க்கவில்லை. குத்தகைக்கே வழங்குகின்றோம்.

இந்தியாவும் எமக்கு முக்கிய நாடு. அதை நாம் மறந்து செயற்படக்கூடாது. நாம் எமது தேசியக் கொள்கையில் அயலுறவுத்துறைக் கொள்கையில் தெளிவாக இருக்கின்றோம். எவரும் அதுபற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை - என்றார். (5)

## வடக்குக்கு பொலிஸ் அதிகாரம் தெற்கில் குண்டாந்தடிப் பிரயோகம்

கொழும்பு, ஒக். 9

வடக்குக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவரும் அதேநேரம் தெற்குக்கு குண்டாந்தடி நடத்த பொலிஸாருக்கு அரசு அனுமதி வழங்கி வருகின்றது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச வளங்களை விற்பனை செய்தல் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு தாரை வார்ப்பவர்களுக்கு எதிராகச் செயற்படவேண்டிய பொலிஸார், அதனைப் பாதுகாப்பதற்காக நிராயுதபாணிகளாக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்தப் போராட்டத்தை அறிக்கையிட வந்த ஊடகவியலாளர்கள் மீதும் பொலிஸார் எல்லை மீறி நடந்து கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நாம், பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதற்கு தீர்மானித்துள்ளோம். அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளமைக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் - என்றார். (5,31)

## போராட்டங்கள் தொடரும்

*நாமல் ராஜபக்ச சூளுரை*



யாழ்ப்பாணம், ஒக். 9

நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டனர்.

நாம் ஆர்ப்பாட்டத்தை அமைதியான முறையிலேயே முன்னெடுத்தோம். பொலிஸார் முதலில் தாக்க முற்பட்டனர். பொலிஸார் எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர் என்று எம்மால் கூற முடியாது. பொலிஸார் தான் கற்களால் எறியத் ஆரம்பித்தார்கள். நாங்கள் யாரையும் அடிக்கவில்லை என்பதை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். நாங்கள் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து பல கிலோ மீற்றர் தூரம் சென்றோம். கல் தடி போன்றவற்றை எடுத்துச் செல்லவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புப் பொலிஸாரும் இருந்தனர். இவற்றையெல்லாம் கவனத்திற் கொள்ளாது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அரச வளங்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை அரசு நிறுத்தும் வரை எமது போராட்டம் தொடரும் - என்றார். (5,31)

## தாய்வானிலுள்ள வங்கியில் திருடப்பட்ட பணம் இலங்கை வங்கிகளில் வைப்பு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 9

தாய்வானின் பா ஈஸ்டர்ன் பன்னாட்டு வங்கியின் கணினி கட்டமைப்புக்குள் ஊடுருவிக் திருடப்பட்ட பணம், இலங்கையிலுள்ள வங்கிகளிலும் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் லேய்ச்சின் டேயின் உத்தரவின் பேரில் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை, கம்போடியா, மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

பா ஈஸ்டன் வங்கியிடமிருந்து இலங்கை வங்கியின் தனியார் கணக்கில் வைப்பிலிடப்பட்ட 1.1 மில்லியன் அமெரிக்க டொலர் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பணத்தில் சுமார் 30 லட்சம் ரூபா கடந்த நான்காம் திகதி கணக்கின் உரிமையாளர் மீளப் பெற்றுள்ளதுடன் மீண்டும் 8 மில்லியன் ரூபாவைக் கடந்த ஆறாம் திகதி மீளப் பெறுவதற்கு முயன்றபோது அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் புதன்கிழமை வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன் பணத்தை மீளப் பெறுவதற்காக வங்கிக்கு வந்த மற்றுமொருவரை கைது செய்வதற்காக வங்கியின் மறைகாணி (சிசிரிவி) காணொலியை அடிப்படையாகக் கொண்டு விசாரணை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## உள்ளூராட்சிமன்றக் கட்டளை சட்டவரைவு நாடாளுமன்றுக்கு

புதிய முறையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடைமுறையில் உள்ள மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்கான திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றில் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய முறைமையின் கீழ் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. புதிய முறைமையில் தேர்தல் நடத்துவதற்கு, நடைமுறையில் உள்ள மாநகர, நகர மற்றும் பிரதேச சபை தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் இன்று முன்வைக்கப்படவுள்ளது. (5,31)

## போர் முடிவுக்கு வந்தும் ஆயுதக் கொள்வனவு நடக்கிறது

*ஜெட் வானூர்திகள் வாங்க அரசு திட்டம்*

ஜெட் போர் வானூர்திகள் உள்ளிட்ட 18 புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக வான்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் கிஹான் செனிவிரத்ன தெரிவித்ததாவது:

வான்படைக்கு ஜெட் போர் வானூர்திகள், போக்குவரத்து வானூர்திகள், பயணிகள் வானூர்திகள் உள்ளிட்ட 18 வானூர்திகள் கொள்வனவுசெய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக இருந்து வரும் வானூர்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய வானூர்திகள் கொள்வனவு செய்யப்படும்.

தற்போதுள்ள வயது முதிர்ந்த சில வானூர்திகளுக்குப் பதிலாக, நவீன காலத் தேவைகளுக்கு ஏற்ற வானூர்திகள் வாங்கப்படும்.

புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

சில வானூர்திகளுக்கு உதிரிப்பாகங்கள் தேவைப்படுகின்றன. இந்த உதிரிப் பாகங்களின் விலையும் மிக அதிகம்.

பாதுகாப்பு நிலைமைகளில் பிரதான மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடல்சார் கண்காணிப்பை மேற்கொள்வதற்கான வானூர்தி களும் தற்போது வான் படைக்குத் தேவைப்படுகிறது. வான்படைக்கு அமெரிக்கா, சீனா, பிரிட்டன், ரஷ்யா, உக்ரேன் ஆகிய நாடுகளிடம் இருந்து வானூர்திகள் கொள்வனவு செய்யப்பட்டன.

தற்போது கேள்விப்பத்திரங்களுக்கு அமைய சில நாடுகள் வானூர்திகளை வழங்க முன்வந்துள்ளன. இவற்றை கவனமாக ஆய்வு செய்த பின்னரே முடிவு எடுக்கப்படும் - என்றார். (5)

# ஜேர்மனியில் ஆயிரம் புலிகள் இன்றும் செயற்படுகின்றனர்

## ஜேர்மன் புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் இப்படிச் செய்தி வெளியிட்டுள்ளது

கொழும்பு, ஒக். 9
தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சுமார் ஆயிரம் பேர் ஜேர்மனியில் இன்னும் செயற்பாட்டில் உள்ளனர் என்று புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனிய தேசிய புலனாய்வு பிரிவினர் கடந்த வருடம் பெற்றுக்கொண்ட புள்ளி விவரங்களுக்கு அமைய வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகள் மற்றும் நபர்கள் உட்பட சுமார் 30 ஆயிரம் பேர் ஜேர்மனியில் இயங்கி வருகின்றனர். இதில் இஸ்லாமிய பயங்கரவாதிகளும் அடங்குவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜேர்மனியில் சுமார் 29 ஆயிரம் வெளிநாட்டு பயங்கரவாதிகள் இருந்துள்ளனர் என்று புலனாய்வுப் பிரிவின் அறிக்கை மூலமாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் ஜேர்மனிக்குள் செயற்பாட்டு பயங்கரவாதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது அவர்களின் இலக்காக மாறியுள்ள நாடுகளுக்கு கெடுதியான பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ஜேர்மனிய தேசிய புலனாய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் விடுதலைப் புலிகள் வெளிநாடுகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் பயங்கரவாத அமைப்பு அல்ல எனவும், அது குறிப்பிட்ட நாட்டில் மக்களின் உரிமைக்காக போராடும் அமைப்பு எனவும் சர்வதேச பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(4)

# மோ.சைக்கிளில் சென்றவர் மீது வாள்வெட்டு

## ஆனைக்கோட்டையில் நேற்றுமாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

மானிப்பாயைச் சேர்ந்த சுமார் 22 வயது மதிக்கத் தக்கவரே படுகாயமடைந்தார் என்று கூறப்பட்டது.

“ஆனைக்கோட்டை கூழாவடியில் நேற்றுமாலை 6.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரை வேறு சில மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வெட்டியுள்ளனர். வெட்டியவர்கள் தப்பிச்சென்றுவிட்டனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன” என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4)



கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாடசாலையின் ஆசிரியர் தின விழா பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாணவர்களால் நடத்தப்பட்டது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் கலந்து கொண்டார். நிகழ்வில் மாணவர்களால் விருந்தினர்களான அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.

*(4-9)*

# மருத்துவர் அம்பிகைபாகனின் உருவச்சிலை புதனன்று திறப்பு

சாவகச்சேரி ஒக். 9
அமரர் மருத்துவர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனின்(கடவுள்) நினைவாக சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக அமைக்கப்பட்ட அவரின் உருவச் சிலை நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப.3 மணிக்கு திறந்து வைக்கப்படுமென்று ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் கலாநிதி வை.சிவராசா அறிவித்தார்.

அமரர் ச.அம்பிகைபாகன் சிறந்த மருத்துவர். அவரால் பயனடைந்த மக்கள் ஒன்றிணைந்து அவரின் உருவச்சிலையை அமைக்க வேண்டுமென விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக பொதுமக்களின் பங்களிப்புடன் இது அமைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

(4 -9)

# குப்பைகள் சேகரிப்பு நிலையங்கள் அரியாலை, வண்ணார்பண்ணையில்

யாழ்.ஒக். 25
யாழ்ப்பாணம் மாநகர பிரதேசத்தில் மேலும் 2 திண்மக்கழிவுகளை சேகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அரியாலை, வண்ணார்பண்ணைப் பிரதேசங்களில் இந்த நிலையங்கள் விரைவில் அமைக்கப்படும் என மாநகர சபை ஆணையாளர் வாகீசன் தெரிவித்தார்.

“ஏற்கனவே பாசையூர், நல்லூர், சங்கிலியன் சாலை, மடத்தடிச் சந்தி ஆகிய இடங்களில் திண்மக்கழிவுகள் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் உக்கல், இலத்திரனியல் பழுதடைந்த பொருள்கள் மட்டுமே சேகரிக்கப்படும்.

குடியிருப்பாளர்கள் பழுதடைந்த இலத்திரனியல்பொருள்களைஇங்கு ஒப்படைக்க முடியும். அவற்றை ஏனைய திண்மக்கழிவுகளுடன் பொதியாக்கிவைப்பதைக் குடியிருப்பாளர்கள் தவிர்க்கவேண்டும்.

திண்மக்கழிவு சேகரிப்பு நிலையங்கள் ஏனைய பல பிரதேசங்களுக்கும் விரி வாக்கப்படும்” என யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(ய-17)

# வழுக்கையாற்றில் கட்டாக்காலிகளால் நெற்பயிர்கள் நாசம்

யாழ்ப்பாணம், ஒக்.9
நவாலி வழுக்கையாற்று வயல்காணிகளில் கட்டாக்காலி மாடுகள் நெற்பயிர்களை அழித்து வருகின்றன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் கமநலசேவைகள் நிலையத்துக்கு உட்பட்டது நவாலி வடக்கு, நவாலி தெற்கு ஆகிய இரு கமக்கார அமைப்புகளாகும். இதில் நவாலி ஈச்சந்தரவை என அழைக்கப்படும் நவாலி வழுக்கையாற்று வயல் காணிகளில் கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் நெல் விதைக்கப்பட்டு பயிர்கள் வளர்ந்துள்ளன.

விவசாயிகளால் பெரும்செலவில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களைக் கட்டாக்காலி மாடுகள் அழித்துவருகின்றன. இதுதொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோருகின்றனர்.

(ய-50)

# இறப்பர் பொருள்களை வீடுகளில் எரிக்கவோ புதைக்கவோ வேண்டாம்

## யாழ். மாநகரசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.7
குடியிருப்பாளர்கள் பழுதடைந்த இறப்பர் பொருள்களை எரியூட்டுவது மற்றும் நிலத்தில் புதைப்பது போன்ற நடவடிக்கைகளைத் தவிர்க்கவேண்டும் என யாழ்ப்பாணம் மாநகரசபை அறிவித்துள்ளது.

“இறப்பர் பொருள்களை எரியூட்டுவது மற்றும் நிலத்தில் புதைப்பதால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும். நிலத்தடி நீர்மாசடையும். அநேகமான குடியிருப்புகளில் இறப்பர் பொருள்களை எரியூட்டி வருகின்றனர்.

இவற்றை எரியூட்டுவதனால் சுவாசத்துக்குப் பாதிப்பு ஏற்படும்.

எனவே பொதுமக்கள் இறப்பர் பொருள்களை மாநகர கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் மாநகர ஆணையாளர் வாகீசன் கேட்டுள்ளார்.

(ய-17)

# பூம்பந்தைச் சாலையை சீரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.9
வடலியடைப்பு பூம்பந்தைச் சாலையில் கற்கள் பறிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்துவிட்டன. எனினும் சாலை சீரமைக்கப்படாத தால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

“கடந்த 30 வருடங்களாக மேற்படி சாலை சீரமைக்கப்படவில்லை. மக்களின் கோரிக்கைக்கு அமை வாக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை நிதி ஒதுக்கியது. சீரமைப்புக்காக கற்களும் பறிக்கப்பட்டன. கற்கள் பறிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்துவிட்டன.

இன்னும் சில வாரங்களில் மழை ஆரம்பித்துவிடும். கற்கள் குவிந்து கிடப்பதால் அதற்குள் பாம்பு, பூச்சிகள்பெருகும் அபாயமும் உள்ளது. எனவே உடனடியாக இந்தச் சாலையின் சீரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு சபை செயலாளர் நடவடிக்கைஎடுக்க வேண்டும்” என பூம்பந்தை வீதி மக்கள் கோரியுள்ளனர். (ய-50)

# உலக சமாதானத்துக்கான தூதுவர் விருது வழங்கப்பட்டது

உலக சமாதானத்துக்கான தூதுவர் - 2017 என்ற விருதை வரணி லயன்ஸ் கழகத்தின் அங்கத்துவப் பணிப்பாளர் பீதாம்பரம் ஜெயவிந்தன் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதற்கான விருது கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.

அரியாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், அகில இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன காங்கேசன்துறை ஊழியரும் சமூகசேவையாளருமாவார்,

(4)

# மருதங்கேணி மருத்துவமனைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்

கரணவாய், ஒக்.9
மருதங்கேணி பிரதேச மருத்துவமனைக்கு, ‘சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியம்’ குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

‘நோயாளர் விடுதிகளுக்குக்குழாய்பொருத்தப்பட்டு தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இதற்கென தனியான தண்ணீர்த் தாங்கியும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கம் விடுத்தவேண்டுகோளை அடுத்து சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் இந்தஉதவி வழங்கப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-108)

# மாணவர்களுக்கு மழை அங்கிகள்



*அச்செழு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விபயிலும் வறுமைக் கோட்டுக்கு உள்பட்ட 49 மாணவர்களுக்கு மழை அங்கிகள் வழங்கப்பட்டன. லயன்ஸ் கழகத்தின் திருநெல்வேலிக் கிளையினரால் நேற்றுமுன்தினம் இவை வழங்கப்பட்டன.*

*(ய-8)*



## மாரீசன்கூடல் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள் 22 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பாடாசலை அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்தக் கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள் என்பன வழங்கப்பட்டன. (ய)

## இந்துவின் உயிர்நீத்த மாணவர்கள் நினைவாக தருமபுரம் சைவநெறிக் கூடத்துக்கு உதவிகள்

கிளிநொச்சி, ஒக்.9

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1994 ஆண்டில் உயர்தரம், சாதாரணதரம் பயின்று உயிர்நீத்த மாணவர்கள் நினைவாக உப கர ணங்கள் வழங்கும் நிகழ்வும், குருதிக்கொடை நிகழ்வும் நேற்றுமுன்தினம் தருமபுரம் சைவநெறிக் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது சைவநெறிக் கூடத்தின் விழிப்புலனற்றோர் பயிற்சிக்காக எட்டு லட்சம் ரூபா பெறுமதியான பிறைலி இயந்திரங்களும், அதற்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.



நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்லூரி முதல்வர் ஐ.தயானந்தராஜாவும், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவரான மருத்துவர் வை.யோகேஸ்வரனும், மதிப்புறு விருந்தினர்களாக மானிடம் அறக்கட்டளையின் செயலாளர் மருத்துவர் ப.நந்தகுமார், அதன் அறங்காவலர் எஸ்.சண்முகநாதன், வாழ்வகம் நிறுவனத் தலைவர் கலாநிதி ரவீந்திரன், வன்னி விழிப்புலனற்றோர் சங்கத் தின் ஸ்தாபகரும், இனியவாழ்வு இல்லத்தின் உப தலைவருமாகிய ரூபன் மற்றும் ஆசிரியர் கே.குணசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ய)

## இளவாலையில் குருதிக்கொடை நிகழ்வு



யாழ்ப்பாணம் இளவாலை புனித யூதா ததேயு ஆலயத்தின் வருடாந்த குருதிக்கொடை நிகழ்வு நேற்று ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை குருதிவங்கிப் பொறுப்பதிகாரி மருத்துவர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினரால் குருதி சேகரிக்கப்பட்டது. (ய)

## மானிப்பாய் இந்துவில் இறுவட்டு வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக்.9

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் காண்பிய ஊடகக் கழகத்தால் "அகழ்வி" எனும் பாடல் இறுவட்டு வெளியிடப்பட்டது.

கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர் தினவிழாவின்போது இறுவெட்டு வெளியிடப்பட்டது.

நிகழ்வில் ஓய்வுநிலை முதல்வர் எஸ்.சிவநேஸ்வரன், விக்ரோரியாக் கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் வ.ஸ்ரீகாந்தன் உள்பட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (ய)

## மன்னிப்புச் சபையின் பணியகத்தை கொழும்பில் அமைக்க ஒழுங்குகள்

கொழும்பு, ஒக். 9

பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பிராந்திய அலுவலகம் கொழும்பில் அமைக்கப்படவுள்ளதாக ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல மனித உரிமை விவாதங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்தநிலையிலேயே, உலகின் முன்னணி மனித உரிமை அமைப்புகளின் பிராந்திய அலுவலகம் கொழும்பில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

பன்னாட்டு மன்னிப்புச் சபையின் தெற்காசிய குழு, கொழும்பில் தமது பிராந்தியப் அலுவலகத்தை அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

**உடுவில் மகளிர் கல்லூரி**

டறோசினி சிவகுமார் -184, சேந்தன் தயாபரன்-182, பாவுயன் விபூலன்-180, கேசவன் றவிந்திரராசா-179, ஆர்திகன் ஜெயராஜ்-179, வானுயன் கமலக்கண்ணன்-178, அக்ஷயா வசந்தரூபன்-178, வித்தகி தனேஸ்குமார்-177, ஜினோசன்பிரசன்னா-177, மேருசன் கிருஸ்ணகுமார்-177, தரன்யா கோபிநாத்-176, தாருலலன் கிருஷாகரன்-174, ஜஸ்மிகா ஆனந்தராஜ்-173, ஆர்திகா சிறிகமலநாதன் -170, நிந்துயா திலீபன்-170, ஓவியா சனன்ஸ்றோய் மதிவதனன்-168, பிருந்தாராகன் நாதசொரூபன்-168, கரிகரன்சி, றிஜெயந்தன்-168, தனலக்ஷன் சிவபாலன்-168, சங்கவி சிவபாலன்-165, டிறோசன் சிவகுமார்-165, தர்மிலன் கோகுலன்-164, தருணி மணிவண்ணன்-164, செரூபா ஜெதாசன்-163, கிருத்திகா சஜீசன்-162, அத்விகா சதீசன்-161, ஜஸ்மிதா பார்தீபன்-158, ஜோஸ்பேர்லின் மயூரன் -157, அநிசெரவீனா சந்திரகுமார்-157, பரிந்திகா மயில்வாகனம்-157

**மகாஜனக் கல்லூரி**

கணேசநாதன் கனிமொழி - 184, கௌரிகாந்தன் மாதுளன் -178, சிவனேசன் பிரகிதன் -174, யோகேந்திரன் ரேன்சனா -173, சிவகரன் அபிசாய்ராம் -171, கிருபாகரன் கௌதமன் -169, பிரதீபன் பாவலன் -169, கிருபாகரன்யதுசன் -167, ஜீட் வசந்தகுமார் வர்சிக்கா - 167, சிவகரன் கவியாளன் -166, கேதீஸ்வரன் லக்சிகா -161.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 60 | 60 |
| கத்தரி | 130 | 120 | 160 | 180 | 160 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 100 | 140 |
| பாகல் | 140 | 300 | 200 | 300 | 90 |
| க.கிழங்கு | 90 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 140 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 240 | 250 | 250 | 240 | 260 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 140 | 200 | 40 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 70 | 60 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 25 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 280 | 280 | 200 | 400 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | 120 | 100 | 140 | 140 |
| வெண்டி | 80 | 80 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 160 | 100 | 200 |
| லீக்ஸ் | 180 | 140 | 140 | 160 | 200 |
| தேங்காய் | 75 | 75 | 80 | 90 | 80 |
| உ.கிழங்கு | 90 | 120 | 120 | 110 | 120 |
| தேசிக்காய் | 300 | 100 | 260 | 250 | 220 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 140 | 140 | 180 | 180 |
| கரட் | 120 | 140 | 100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 220 | 120 | 140 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 1000 |
| நண்டு | 400 | 400 | 400 | 400 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 500 | – |
| சுறா | 600 | 700 | 700 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | 600 |
| விளை | 600 | 400 | 400 | 400 |
| | 350 | 350 | 350 | – |
| முரல் | 350 | 300 | 400 | 600 |
| கும்பிளா | 800 | – | 500 | – |
| கிளாக்கன் | 350 | 300 | 400 | 300 |
| ஓரா | 250 | 200 | 200 | 200 |
| திரளி | 250 | 150 | 400 | – |
| நகரை | 150 | 100 | 200 | 150 |
| சூடை | 200 | 200 | 300 | 300 |
| | 350 | 200 | 400 | – |
| ஒட்டி | 250 | 150 | 250 | – |
| திருக்கை | 150 | 70 | 50 | 100 |
| மதனம் | 150 | 200 | 400 | 400 |
| கொய் | 150 | 200 | 300 | 300 |

## மது வகைகளின் விலைக்குறைப்புக்கு எதிராக சங்கானையில் கவனவீர்ப்பு




மதுபான வகை களின் விலைக் குறைப் புக்கு எதிராக நேற்று சங்கானை பேருந்து நிலையத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்குப் பிராந்திய நல்லொழுக்க சம்மேளனத்தினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

'வரவு - செலவுத் திட்டத்தில் மதுபான வகைகளின் விலைக் குறைப்பு மற்றும் புதிய மதுபான நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பான அரசின் முயற்சிக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ய)

'ஐ ரோட்' திட்டம்:

## வடமாகாண சபையில் கவனவீர்ப்புப் பிரேரணை

யாழ்ப்பாணம், ஒக்.9
"ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு, கிழக்கில் 'ஐ ரோட்' திட்டங்கள் ஊடாக சாலைகளை சீரமைக்க கொழும்பு அமைச்சரவை அனுமதி கொடுத்துள்ளது. கிழக்கில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் வடக்கு மாகாணத்தில் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாக முதலமைச்சர் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என வடக்கு மாகாண சபையில் வலியுறுத்தப்பட்டது.

மாகாணசபையின் 107ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் சபை உறுப்பினர் சத்தியலிங்கம் இந்தக் கவனவீர்ப்புக் குறிப்பைக் கொண்டுவந்தார்.

அவர் தனது கவனவீர்ப்புக் குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:

'ஐ.ரோட்' எனப்படுகின்ற செயற்றிட்டத்தின் மூலம் எமது மாகாணத்திலுள்ள 1000கி.மீ. முதன்மை, உள்ளகச் சாலைகளை செப்பனிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இதன் மூலம் தலா 200கி.மீவரையான சாலைகளைத் திருத்துவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்கவேண்டிய முக்கியமான சாலைகளின் பட்டியலை மாகாணசாலைகள் அபிவிருத்தி திணைக்களத்துக்கு 2015ஆம் ஆண்டில் சமர்ப்பித்திருந்தோம். திருத்தப்படவுள்ள சாலைகளின் விவரமும் கடந்தவருடம் வெளியாகியிருந்தது.

வேலைகள் 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுவதாகவும், இதற்கு கொழும்பு அரசின் கீழ் இயங்கும் சாலைகள் அபிவிருத்தி அதிகாரசபையே பொறுப்பாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மேற்படி திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சாலைகள் தவிர்ந்த சில சாலைகள் தற்போது திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

'ஐரோட்' திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட சாலைகளின் திருத்த வேலைகள் 2019ஆம் ஆண்டளவிலேயே ஆரம்பிக்கவுள்ளதாக அறியமுடிகின்றது.

எனினும், இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட மீள்குடியேற்றப் பிரதேச சாலைகள் திருத்தப்படாது காணப்படுகின்றன. மக்கள் பெரும் போக்குவரத்துப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். சாலைகள் ஒழுங்கீனம் காரணமாக சில இடங்களில் போக்குவரத்துச் சேவைகளும் இடைநிறுத்தப் பட்டுள்ளன. இதன் வெளிப்பாடாக கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் மக்கள் சாலை மறியல் போராட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

கடந்தவருடமும் போராட்டம் நடத்தப்பட்டது. வீதிகள் சீரமைக்கப்படும் என வாக்குறுதி வழங்கியிருந்தோம். எனினும் தற்போதைய நிலையில் அடுத்து வரும் இரண்டு வருடங்களுக்கு இந்தச் சாலைகள் திருத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது புலனாகின்றது. அதேவேளை கிழக்கு மாகாணத்தில் 'ஐ.ரோட்' திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

எனவே, இதுதொடர்பில் மாகாண சபையால் தீர்மானமொன்று நிறை வேற்றப்பட்டு கொழும்பு போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பிவைக்க மாகாணசபையும், மாகாண போக்குவரத்து அமைச்சரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்" அதில் கோரப்பட்டுள்ளது.

"மாகாண போக்கு வரத்து அமைச்சரான முதல்வருக்கு இதனை அனுப்பி வைப்பதுடன், இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்க முதல்வர் ஆவன செய்யவேண்டும்" என மாகாண சபையால் வலியுறுத்தப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்தார். (ய-8)

# வடக்கில் பாவனையின்றியுள்ள புதிய கடைத் தொகுதிகளை குத்தகைக்கு விடப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9
வடக்கில் நெல்சிப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கடைத்தொகுதிகளை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என பிரதேசசபைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பல கடைத் தொகுதிகள் நெல்சிப் திட்டத்தில் அமைக்கப்பட்டன. அவற்றில் சில கடைகள் இன்னமும் பாவனைக்கு வரவில்லை. சில கடைகள் கேள்விகோரல் நடைபெற்றபோதும் அவற்றைப் பெற்றுக் கொள்ள எவரும் முன்வரவில்லை. வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட மகாகச்சக் கொடி சந்தை, ஈரப் பெரிய குளம் சந்தைக் கடைத்தொகுதி, மன்னார் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடைத்தொகுதி ஆகியன இன்னமும் பயன்பாட்டுக்கு வரவில்லை.

இவைதவிர 2014ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட கடைத் தொகுதிகளில் 8 கடைகள் இன்னும் திறக்கப்படவில்லை. இவ்வாறு நெல்சிப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கடைத் தொகுதிகள் ஏன் இன்னமும் பயன்பாட்டுக்கு வரவில்லை? என்பது தொடர்பாகக் கலந்துரையாடினோம்.

அதன்பின்னர் அந்தக் கடைத்தொகுதிகளைத் திறப்பதற்கு கேள்விகோரல் விடுமாறும் கோரியிருந்தோம். அதற்கமைவாக மன்னார் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடைத் தொகுதி தற்போது பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

மீதமாக உள்ள கடைத்தொகுதிகள் இரண்டாவது தடவையாகவும் கேள்விகோரலுக்கு விடப்பட்டுள்ளது. கடைகளைப் பாவனைக்கு ஏற்றவகையில் மாற்றுவதும், அதன் இலாபம் சார்ந்த அனைத்துப் பொறுப்புகளும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள சபைகளின் பொறுப்பு. ஆகவே கடைகளைப் பாவனைக்குக் கொண்டுவரும் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் சபைகளைப் பணித்திருக்கின்றோம் - என்றார். (ய-ரி)

## போர் பாதித்த பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெற்றோராக மாறவேண்டும்

*ஆசிரியர் தின விழாவில் ஐங்கரநேசன் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், ஒக்.9
"போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஆசிரியப்பணி அதி மகத்தானது. சமூகக் கட்டுமானங்கள் போரால் பாதித்துள்ள நிலையில் ஆசிரியர்கள் வகுப்பறையில் பெற்றோர்களாகவும் மாற வேண்டியுள்ளது.

மனப்பூர்வமாக இந்தப் புண்ணிய கைங்கரியத்தை நிறைவேற்றி வருகின்ற ஆசிரியர்கள் தெய்வத்துக்கு நிகராகப் போற்றப்படக் கூடியவர்கள்" என வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆசிரியர்தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் நடைபெற்ற பூமியில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பெற்றோர்களை இழந்துள்ளார்கள். பலர் பெற்றோர்கள் இருந்தும் கவனிப்புக் கிட்டாத சூழலிலேயே வாழ்கின்றனர்.

வறுமை காரணமாகக் கூலி வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள், பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்பாகவே வேலைக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுகின்றனர். அந்திசாயும்போதே வீட்டுக்குத் திரும்புகின்றனர். இதனால் பிள்ளைகளைக் கவனிக்க முடியாத நிலையில் உள்ளார்கள்.

கிராமப்புறங்களில் பெற்றோருக்கு ஒத்தாசையாக வேலைக்குப் போகும் பிள்ளைகளும் உள்ளார்கள். பாடசாலை மதிய உணவை நம்பியே பாடசாலைக்கு வரும் மாணவர்களும் இருக்கிறார்கள்.

வசதியுள்ள குடும்பங்களில் பெற்றோர்களின் கண்காணிப்பு இல்லாததால் நவீன தொடர்பாடல் சாதனங்களுக்கு அடிமையாகிச் சீரழியும் மாணவர்களும் உள்ளார்கள். மாணவர்கள் எந்த வகையில் பாதிக்கப்பட்டாலும் ஒட்டு மொத்த சமூகமுமே நாளை இருட்டுக்குள் தள்ளப்பட்டுவிடும்.

எனவே எமது ஆசிரியர்கள் பாடத்திட்டத்துக்கும் அப்பால் சென்று தமது பிள்ளைகளைப் போன்றே மாணவர்களையும் அன்பால் அரவணைத்துக் கவனிக்கவும், கண்காணிக்கவும் வேண்டும். தங்களை வகுப்பறையில் பெற்றோர்களாகவே உருவகிக்கும் நல்லாசிரியர்களின் பணி போருக்குப் பிந்திய கால கட்டத்தின் கட்டாய தேவையாக உள்ளது- என்றார். (ய-21)

## சங்கானை சந்தைக் கட்டடத்தை பார்வையிட்டார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம் சங்கானை நகர மத்தியில் 40 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுத்துவரும் சந்தை கடைத்தொகுதியின் உட்கட்டுமானங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேரில் சென்று பார்வையிட்டார்.

சங்கானை நகர மத்தியில் இருமாடி நவீன கடைத் தொகுதிக்கான முன்மொழிவை சமர்ப்பித்து 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை மீள்குடியேற்ற அமைச்சு ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பெற்றுக் கொண்டார். இதன் அடிப்படையில் 2017 இல் சந்தை யின் கீழ் தளக் கடைத் தொகுதிகளுக்காக 40 மில்லியன் ரூபாவும், 2018இல் இரண்டாவது மாடிக் கடைத்தொகுதிக்காக 40 மில்லியன் ரூபாவும் விடுவிக்கப்படும். இதேவேளை, சங்கானை மரக்கறிச்சந்தை மறுசீரமைப்புக்கான திட்ட முன்மொழிவை விரைவில் சமர்ப்பிக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நடவடிக்கை எடுத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (ய-50)

# இரணைதீவுக் காணி அளவீட்டுப் பணிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை

*பிரதேச மக்கள் பரிதவிப்பு*

கிளிநொச்சி, ஒக்.9
கிளிநொச்சி இரணைதீவுப் பகுதி மக்களின் காணிகளை அளவிடும் பணிகளில் ஈடுபடவுள்ள நிலஅளவைத்திணைக்கள ஊழியர்களுக்கு இன்னமும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது:

இரணைதீவில் வசித்த 167 குடும்பங்களும் 1991ஆம் ஆண்டு அங்கிருந்து இடம்பெயர்ந்து சிதறி வாழுகின்றன.

இன்றுவரையும் அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது.

தமது வாழ்விடங்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்த மக்கள் முழங்காவில் கடற்படைத் தளத்தின்முன்பாக தொடர் போராட்டம் நடத்தினர். இந்த நிலையில் அவர்களைச் சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு ஏதுவாக அவர்களின் குடியிருப்புப் பகுதிகளை இனங்கண்டு அளவீடுசெய்வதற்காக கடந்தமாதம் 14பேர் கொண்ட குழு கடற்படையினரால் இரணைதீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டது. அவ்வாறு சென்ற குழுவினர் , அங்கே மக்கள் வாழ்வதில் பெரும் இடர் இருப்பதாக தெரியவில்லை. அப்பகுதிகளைமுழுமையாக அளவீடு செய்து அவற்றை காணி உரிமையாளர்களுக்குப் பங்கீடு செய்து வழங்கினால் எஞ்சிய பணியைமேற்கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அளவீட்டுப் பணிகளுக்கு 15 தினங்கள் தேவையெனவும், அதற்குத் தீவிலேயே தங்கி நிற்பதற்கான அனுமதிதேவை எனவும் நில அளவைத்திணைக்களம் தெரிவித்திருந்தது.

இதற்கமைய இன்றிலிருந்து ஒருவாரம் தீவில் தங்கிப் பணிபுரிவதற்கான அனுமதியைக் கோரியது. திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகம் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர்.

எனினும் குறித்த அனுமதியானது இன்றுவரை கிடைக்கவில்லை என மாவட்டச் செயலக வட்டாரங்கள்தெரிவிக்கின்றன என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ய-101)

# குடி தண்ணீர் இல்லாமல் மக்களை சாகடிக்கப் பார்க்கிறார் ஐங்கரநேசன்

*வட மாகாணசபை எதிர்க்கட்சித்தலைவர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஒக்.9

மக்களை குடிதண்ணீர் இல்லாது சாகடிக்கும் செயலையே வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன் செய்துவருகிறார் எனக் குற்றம் சாட்டினார் சபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மருதங்கேணிப் பகுதியில் தனியார் ஒருவர் குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கின் முன்னாள் விவசாய அமைச்சர் ஆதாரமில்லாத பொய்யான குற்றச்சாட்டுக்களை பரப்பி வருகின்றார்.

இவ்வாறுதான் இரணைமடுதிட்டத்தை தனது சொந்த நலனுக்காக இடைநிறுத்தினார். இதனால் எத்தனையோ இலட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். அந்தத் திட்டத்தை நிறுத்திய அவர் இன்று வரை மாற்றுத் திட்டத்தை முன்வைக்கவேயில்லை. இப்போது அமைச்சுப் பதவியையும் இழந்து நிற்கின்றார்.

இதேபோல சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமை தொடர்பில் சம்பந்தமே இல்லாத ஒரு சிலரை வைத்து அங்கு எதுவுமே நடக்கவில்லை என்றார்.

ஆனால் முறையாக ஆய்வு செய்த குழு, அதில் கழிவு ஒயில் கலந்துள்ளமையை நிரூபித்துள்ளது. ஆனால் முன்னாள் அமைச்சரோ சுன்னாகம் நீரில் கழிவு ஒயில் கலக்கவில்லை என்ற எடுப்பில் கருத்துகளைக் கூறி மக்களை முட்டாள்களாக்கி வருகின்றார்.

இந்த நிலையில் மருதங்கேணியில் தனியார் ஒருவர் குடிதண்ணீர்த் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார் என அறியமுடிகின்றது. அந்தத் திட்டத்துக்கும் மகேஸ்வரி நிதியத்துக்கும் தொடர்பு இருப்பதாகப் பொய்யான கருத்துகளைக் கூறி வருகின்றார் - என்றார். (ய-8)

# கமால் குணரத்னவின் கருத்துக்கு சாள்ஸ் எம்.பி கடும் கண்டனம்

## சந்தேகம் வலுக்கிறது எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

"சரணடைந்தவர்கள் உயிரோடு உள்ளதற்கு சூசையின் மனைவியும் சாட்சியே. சாட்சியை அழிப்பதே குறிக்கோளாக இருந்திருப்பின் அவரையும் வெட்டிக் கடலில் வீசியிருப்போம் என இராணுவத்தின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்திருக்கிறார். அவரது நாகரிகமற்ற இந்தக் கருத்தை வன்மையாக கண்டிக்கிறேன்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப்போரின்போது சரணடைந்தவர்கள் எவரும் காணாமல் போகவில்லை. அதற்கு சூசையின் மனைவியும் சாட்சியாகவே உள்ளார். சரணடைந்தவர்களை அழிப்பதே குறிக்கோளாக இருந்திருப்பின் சூசையின் மனைவியையும் வெட்டிக் கடலில் வீசியிருப்போம் என இறுதிப்போரில் பங்கு கொண்டிருந்த இராணுவத்தின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன கூறியமை ஒரு நாகரிகமற்ற கருத்து.

குணரத்ன தெரிவித்த கருத்து பல ஐயங்களை ஏற்படுத்தி நிற்கின்றன. சரணடைந்த புலிகளில் 12 ஆயிரம் பேரை மறுவாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைத்துள்ளோம் என ஆளும் அரசுகள் மாறிமாறிப் பிதற்றுகின்றன. ஆனால் பல ஆயிரக்கணக்கான சரணடைந்தவர்கள் மற்றும் உறவுகளால் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என இந்த அரசோ படைகளோ இதுவரை உண்மையைத் தெரிவிக்கவே இல்லை.

இந்த நிலையில் இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில் இராணுவத்தில் ஓர் உயரதிகாரியாக இருந்த கமால் குணரத்ன இவ்வாறுதெரிவித்தது ஓர் நாகரிகமற்ற கருத்தாகும்.

பன்னாட்டுச் சமூகம் இந்தச் சொல்லை நன்கு கவனிக்க வேண்டும். ஏனெனில் இராணுவத்தினரிடம் உறவுகளால் ஒப்படைக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான போராளிகளும், வெள்ளைவான்கள் மூலம் அரசபடைகளால் கடத்தப்பட்டோரும் இன்று வரை வீடு திரும்பவில்லை. அதேநேரம் எந்தப்பகுதியில் எந்த முகாமிலும் எவரும் இரகசியமாகத் தடுப்பில் இல்லை என அரச தலைவர் கூறுகின்றார். அவ்வாறானால் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைப் பகிரங்கமாகக் கூற வேண்டும்.

இந்த குணரத்ன வாய் தடுமாறி உண்மையைக் கூறிவிட்டாரோ? என்ற அச்சமும் எம்மனதில் எழுகின்றது. அதாவது அவ்வாறுஎமது உறவுகளை வெட்டிக் கடலில் வீசியதையே கூறுகின்றாரா? என்பது தொடர்பிலும் ஆராய வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது - என்றார். (ய-101)

# கல்வியமைச்சை முடக்குவோம்!

## நிரந்தர நியமனத்துக்கான அனுமதி கிடைத்த தொண்டர் ஆசிரியர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.9

வடக்கு தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான சர்ச்சையில், அனுமதி கிடைத்தவர்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

நவம்பர் மாதத்துக்கு முன்னர் தமக்கான நியமனங்கள் வழங்கப்படாவிடின் வடக்கு மாகாணக் கல்வியமைச்சை முடக்கிப் போராடுவோம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சந்தர்ப்பம் கிடைக்காத வர்களுக்காக அனைவரது வாய்ப்பையும் தடுத்து நிறுத்துவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் தொண்டராசிரியர்கள் மேலும் தெரிவித்ததாவது:

2006ஆம் ஆண்டில் இருந்து முறைப்படியான சகல பதிவுகளுடன் தகவல் திரட்டுப் புத்தகம் பெறுபேற்றுத் தகுதியுடன் சம்பளமின்றி பணியாற்றினோம். 2013ஆம் ஆண்டின் நேர்முகத் தேர்விலும் தோற்றியிருந்தோம். ஆனால் நியமனம் வழங்கப்படாமையால் ஏமாற்றப்பட்டோம். தற்போது 642 பேருக்கு நியமனம் கிடைக்கும் என எதிர்வு கூறப்பட்ட நிலையில் 182 பேருக்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது. இதன்மூலம் தொண்டராசிரியர்கள் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட்டுள்ளனர்.

எனவே, இதற்கெதிராகப் போராடி ஏனையவர்களுக்கும் அனுமதியைப்பெற முயற்சிக்க வேண்டும். மாறாக அனுமதிகிடைத்த தொண்டர்களின் நியமனத்துக்குக் காலம் கடத்தக் கூடாது. எந்தவொரு கொடுப்பனவும் இன்றி 12ஆண்டுகள் பணியாற்றி எமது இளமைக்காலத்தையே தொலைத்து நிற்கின்றோம்.

எனவே, நவம்பர் மாதத்துக்கு முன்னர் எமக்கான நியமனங்கள் வழங்கப்படாவிடின் நாம் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சைமுடக்கிப் போராடுவதைத் தவிர மாற்றுவழிகள் தெரியவில்லை - என்றனர். (ய-101)

# உள்ளூராட்சி தேர்தல்களில் இளைஞர்களுக்கு இடம்வேண்டும்

## இளைஞர் நா.உ. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.9

"உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகளின் ஊடாக வேட்பாளர்களை தெரிவு செய்யும்போது இளைஞர்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும்" என வவுனியா மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகரன் கேசவன் கேட்டுள்ளார்.

வவுனியாவல் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வருடாந்தம் இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

அரசியலில் ஈடுபட விரும்பும் இளையோருக்கு வாய்ப்பளிக்கும் முகமாகவே இந்தத் தேர்தல் நடத்தப்பட்டு வருகின்றது.

2017 ஜீன் 2ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலம் இளைஞர் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றங்கள் ஊடாக இளையோர் அரசியலில் பிரவேசிக்கும் பாதை தடைப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆளும் தரப்பினருக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே, கட்சிகளின் ஊடாக வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் போது இளைஞர்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக தமிழ்த் தலைமைகள் இளையோருக்கு வாய்ப்பளித்து வினைத்திறனான சமூகத்தை உருவாக்குவதற்கு துணைநிற்கவேண்டும் - என்றார். (ய -21)

# இன்றைய போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வாருங்கள்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி இன்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் முன்னெடுக்கப்படும் கவனவீர்ப்புப் போராட்டங்களில் அனைவரையும் கலந்துகொண்டு வலுச்சேர்க்குமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் க. ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச.தனுஜன், அ.சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அநுராதபுரம் சிறைச்சாலை யில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தங்களின் வழக்குகளை அநுராதபுரத்துக்கு மாற்றியதைக் கண்டித்தும், மீண்டும் வவுனியாவுக்கு மாற்றுமாறு கோரியும் அவர்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். 14 நாள்களாகியும் அரசியல் கைதிகளான ம. சுலக்ஷன், க. தர்சன், இ.திருவருள் ஆகிய மூவரும் உணவு ஒறுப்பை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களின் நியாயமான கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் அரசு அவர்களின் உயிரைக் காப்பாற்றவேண்டும்.

அத்துடன், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுவிக்கவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். இதனை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

எனவே, நாம் இன்று யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் முன்னெடுக்கும் கவனவீர்ப்புப் போராட்டங்களில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

உணவு ஒறுப்பை முன்னெடுத்துள்ளவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகவும், அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டு வாழ்வுரிமை மறுக்கப்படும் சமூக அநீதிக்கு எதிராகவும் குரல்கொடுக்க அனைவரையும் அணிதிரளுமாறு அழைத்துநிற்கின்றோம் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய)

# மேலதிக ஆசிரியர்களை இடம்மாற்றுவதில் வடமாகாணக் கல்வி அமைச்சர் உறுதி

வடக்கு மாகாணத்தில் மேலதிகமாக சேவையாற்றி வரும் ஆசிரியர்களை உடனடியாக இடமாற்றம் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாணசபையின் 107ஆவது அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த அமர்வில் சபை உறுப்பினர் லிங்கநாதன் கல்வி பின்னடைவுக்குக் காரணங்கள் இருந்தாலும் சமச்சீரற்ற ஆளணிப் பங்கீடு என்பது மிக முக்கிய காரணியாகும் எனக் குறிப்பிட்டார். கிராமப்புறப் பாடசாலைகளில் சமச்சீரான ஆளணிப் பேணுகையை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரும் பிரேரணை யையும் அவர் முன்மொழிந்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பாகக் கருத்துகளை முன்வைக்கும் போதே மாகாணக் கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகரப்புறப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதாக பலரும் கூறி வருகின்றனர். நான்அமைச்சுப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் எங்கெங்கு மேலதிகமான ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனார் என்ற பட்டியலைத்தயாரித்து வருகின்றேன். முழுமையாக விவரங்கள் கிடைத்த பின்னர் அவர்கள் அனைவரையும் உடனடியாக இடமாற்றம் செய்யத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

இதேவேளை, ஆசிரியர்களின் வளப்பங்கீடு தொடர்பில் மாற்று முறை ஒன்றை வடக்கு மாகாண சபை கையாள வேண்டும். ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறப்புப் போக்குவரத்துச் சேவை நிறுத்தப்படவேண்டும். இந்தச் சேவையால்தான் கையொப்பமிடுவதும் வீட்டுக்கு வருவதுமாக ஆசிரியர்கள் உள்ளார்கள். பணியில் கவனம் செலுத்துவதில்லை என எதிர்க்கட்சிஉறுப்பினர் தவநாதன் குற்றஞ்சாட்டினார். அத்துடன் இடமாற்றங்கள் தொடர்பில் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் சில ஆணைக் குழுக்கள் இடையூறு செய்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (ய-8)

# புலிகளின் தலைவர் பிரபாகரனின் கனவு நிறைவேறப் போகின்றது

## சிங்கள மக்களே உஷார்! மகிந்த அணி அழைப்பு

கொழும்பு, ஒக். 9
புதிய அரசமைப்பின் ஊடாக இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை விடவும் அதிகமான அதிகாரங்கள் வடக்கு - கிழக்குக்கு வழங்கப்படவுள்ளது. அது முழுமையான கூட்டாட்சி அதிகாரமாக அமையப் போகின்றது. பிரபாகரனின் கனவை நிறைவேற்றப் போகின்றார்கள். இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பின் சட்டவரைவு பற்றி மக்கள் அறிந்திருக்க வேண்டியது கட்டாயமாகும். அரசமைப்பு திருத்தப்பட்டால் பரவாயில்லை. ஏன் புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்? நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்காகவே இது கொண்டு வரப்படுகிறது.
புதிய அரசமைப்பின் ஊடாக இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை விடவும் அதிகமான அதிகாரங்கள் வடக்கு - கிழக்குக்கு வழங்கப்படவுள்ளன. முழுமையான கூட்டாட்சி அதிகாரமாக அது அமையப் போகின்றது. இதைவிடப் பெரிய ஆபத்து இந்த நாட்டுக்கு இல்லை. புதிய அரசமைப்பின் சட்டவரைவை மக்கள் வாசித்துப் பார்த்தால் இந்த உண்மையை விளங்கிக்கொள்ள முடியும். சட்டவரைவை நீதிமன்றுக்குக் கொண்டு சென்றால் எப்படி அதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்? மக்கள் எப்படிப் பொது வாக்கெடுப்பின் ஊடாக இதை வெற்றி பெறச் செய்வர் என்ற கேள்வி எழுகிறது. மாகாண சபைத் தேர்தல் சட்டவரைவைக் குறுக்கு வழியில் நிறைவேற்றியதுபோல் இந்தச் சட்டவரைவையும் நிறைவேற்ற வாய்ப்புண்டு என்று நாம் நம்புகிறோம்.

> இதுவரை காலமும் அரசமைப்பில் இருந்து வரும் ஒற்றை ஆட்சி என்ற பதமும் கூட 'ஒருமித்த நாடு' என்று மாற்றப் பட்டுள்ளது. இது நாட்டைப் பிரிப்பதற்கான திட்டமிட்ட சதி என்றே நாம் பார்க்கின்றோம். இவ்வாறான ஒரு அரசமைப்பை மக்கள் தோற்கடித்தால் மாத்திரமே நாட்டைக் காப்பாற்ற முடியும்.

இது முழுமையாகப் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் பிரபாகரனின் கனவை நிறைவேற்றும் அரசமைப்பாகும்.
இந்தச் சட்டவரைவில் உள்ளடக்குவதற்காக நாம் முன்வைத்த 14 அம்சங்களில் ஒன்றேனும் உள்ளடக்கப்படவில்லை. முழுமையாக நிராகரிக்கப் பட்டுள்ளன. இதுவரை காலமும் அரசமைப்பில் இருந்து வரும் ஒற்றை ஆட்சி என்ற பதமும் கூட 'ஒருமித்த நாடு' என்று மாற்றப் பட்டுள்ளது. இது நாட்டைப் பிரிப்பதற்கான திட்டமிட்ட சதி என்றேநாம் பார்க்கின்றோம். இவ்வாறான ஒரு அரசமைப்பை மக்கள் தோற்கடித்தால்மாத்திரமேநாட்டைக்காப்பாற்ற முடியும் - என்றார். (5,3)

# புதிய அரசமைப்பில் பெயர் அவசியமல்ல விடயமே முக்கியம்

## கூட்டமைப்பின் வழியில் ஹெல உறுமய



கொழும்பு, ஒக். 9
புதிய அரசமைப்பின் ஊடாக நாடு பிரிக்கப்படப் போகின்றது என்று கூறுவதில் அர்த்தமில்லை. அரசமைப்புக்கு வைக்கப்படும் பெயர்களை வைத்தோ அல்லது அரசியல் தீர்வுக்கு வைக்கப்படும் பெயர்களை வைத்தோ நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது. அதில் அடங்கும் விடயங்களை வைத்தே முடிவுக்கு வர முடியும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜாதிக ஹெல உறுமய ரணிலுடனும், மைத்திரியுடனும் ஒப்பந்தம் செய்துள்ளது. இது எமக்கு அரசியல் சலுகைகளைப் பெறுவதற்காக அல்ல. நாட்டின் நலனுக்காகவே செய்துள்ளோம். அந்த அடிப்படையில்தான் புதிய அரசமைப்புத் தொடர்பான எமது செயற்பாடும் நிலைப்பாடும் அமைந்துள்ளன.
புதிய அரசமைப்பாக இருந்தாலும் சரி அரசமைப்புத் திருத்தமாக இருந்தாலும் சரி அவை நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் வகையாகத்தான் இருக்க வேண்டும் என்பது எமது முக்கிய நிலைப்பாடாகும். அடுத்தது சனநாயகம். இந்த இரண்டு விடயங்களையும் அடிப்படையாக வைத்தே அரசமைப்புக்கான எமது ஆதரவு அமைகிறது.
புதிய அரசமைப்புத் தொடர்பில் பல கட்சிகள் அவற்றின் நிலைப்பாட்டை தெரிவித்துள்ளன. அதை வைத்து நாடு பிரிக்கப்படப் போகின்றது என்று கூறுவதில் அர்த்தமில்லை. புதிய அரசமைப்பு நாட்டின் பாதுகாப்புக்கு சனநாயகத்துக்கு நாட்டின் உறுதிப்பாட்டுக்கு ஆபத்து ஏற்படுத்துமாக இருந்தால் அந்த அரசமைப்புக்கு நாம் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம்.
அரசமைப்புக்கு வைக்கப்படும் பெயர்களை வைத்தோ அல்லது அரசியல் தீர்வுக்கு வைக்கப்படும் பெயர்களை வைத்தோ நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது. அதில் அடங்கும் விடயங்களை வைத்தே முடிவுக்கு வர முடியும். சொற் பதங்களை வைத்து நாம் மக்களைப் பிழையாக வழி நடத்தக்கூடாது.
19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை போதுமான அளவு சனநாயகப்படுத்தப் பட்டுள்ளதால் அதை நீக்க வேண்டிய தேவை இனி இல்லை. இதனால் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப் படுவதை நாம் எதிர்க்கின்றோம் - என்றார். (5,3)



# எதிர்ப்புக்களுக்குப் பயந்து பாதையை மாற்றிய மைத்திரி

கொழும்பு, ஒக். 9
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழிபாடுகளில் பங்கேற்பதற்காகத் திருப்பதியை நேற்றுமுன்தினம் சென்றடைந்தார்.
அவரை மாவட்ட ஆட்சியர், திருப்பதி ஆலய நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் பொலிஸ் அதிகாரிகள் வரவேற்றனர்.
சென்னை - திருப்பதி நெடுஞ்சாலையைத் தவிர்த்து, பெங்களூர் - திருப்பதி நெடுஞ்சாலை வழியாகவே திருப்பதி வந்து சேர்ந்தார். தமிழ் அமைப்புகள், அரச தலைவருக்கு எதிராகப் போராட்டம் நடத்த வாய்ப்புள்ளதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து, அதனைத் தவிர்ப்பதற்காக பயணப்பாதை மாற்றப்பட்டதாக, உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.
திருப்பதி வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, திடீரென அங்கிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சிறி வாரி பாடாலுவுக்குச் சென்று தரிசனம் செய்தார்.
பயணத் திட்டத்தில் இது இடம்பெற்றிருக்கவில்லை.
திடீரென முடிவெடுத்தே அரச தலைவர் அங்கு சென்றிருந்தார்.
இது நாராயணகிரி மலைகளின் உச்சியில் உள்ள புராண காலத்து இடமாகும்.
திருப்பதியில் உள்ள ஏழு மலைகளிலும் மிகவும் உயரமானது இந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# மகிந்த அணியின் யோசனைகள் இடைக்கால அறிக்கையில் உள்ளன

## ஐ.தே.க. எம்.பி. ஆசுமாரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 9
புதிய அரசமைப்பில் சேர்த்துக் கொவதற்காக மகிந்த தரப்பால் முன்வைக்கப்பட்ட 14 நிபந்தனைகள் வழி நடத்தற் குழுவின் இடைக்கால அறிக்கைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது கடந்த தேர்தலில் எம்மால் வழங்கப்பட்ட வாக்குறுதியாகும். நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காண்பதே இந்த அரசமைப்பின் ஒரே நோக்கமாகும். நாட்டைப் பிரிப்பதோ பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதோ இதன் நோக்கம் அல்ல.
நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு எதிரான ஏற்பாடுகள் புதிய அரசமைப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்று வழி நடத்தற் குழுவின் இடைக்கால அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதை நாட்டைப் பிரிக்கும் அரசமைப்பு என்று கூறுவது மிகவும் பிழையாகும்.
கூட்டாட்சி என்ற சொல்லைக் கேட்டதும் தெற்கில் ஒரு வகையான பயம் உள்ளது. அது எதிர்க்கட்சிகள் குறிப்பாக, மகிந்த அணியினர் ஏற்படுத்திய பயமாகும். நாம் சிங்களத்திலும் தமிழிலும் ஒற்றை ஆட்சி என்ற சொல்லைப் புகுத்தியுள்ளோம். ஒற்றை ஆட்சியின் கீழ்தான் அரசமைப்பு அமைக்கப்படும் என்று மீண்டும் மீண்டும் கூறி வருகிறோம்.
ஒற்றை ஆட்சி என்ற சொல்லுக்கு வடக்கு மக்களின் எதிர்ப்பு உண்டு. அந்த எதிர்ப்பையும் நாம் வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் புகுத்தியுள்ளோம். அது மாத்திரமன்றி, புதிய அரசமைப்பில் சேர்த்துக்கொவதற்காக மகிந்த தரப்பால் முன்வைக்கப்பட்ட 14 நிபந்தனைகளும் வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
நாட்டுக்குத் தேவையான நல்ல அரச மைப்பு உருவாவதைக் குறுகிய அரசியல் இலாபத்துக்காகத் தடுத்துவிட வேண்டாம் என்று அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (5,3)

# இந்தியாவுக்கு எதிராக மகிந்த அணியின் போராட்டம் ஏன்?

## தீர்வு விடயத்துடன் தொடர்புபடுத்தி புதுக்கதை சொல்கிறார் கோவிந்தன் கருணாகரம்



மட்டக்களப்பு, ஒக். 9
இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்திய அரசு தமிழ் மக்களுக்கு உறுதுணையாக இருந்து தீர்வு பெற்றுக்கொடுக்கும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டுவிடும். இதை உணர்ந்துதான் மகிந்த அணியினர் மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவிற்கு வழங்குவதை எதிர்க்கின்றார்கள். இவ்வாறு கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு ஐயன் கேணி தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் மூலம் கூட்டாட்சித் தீர்வு ஏற்பட்டிருந்தால் அழிவுகள் ஏற்பட்டிருக்காது. கூட்டாட்சி தொடர்பாக பேச வேண்டிய அவசியம் எற்பட்டிருக்காது. இறுதிக்கட்டப் போரில் உயிரிழப்புகளுக்குத் துணைநின்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதை நாங்கள் மறந்துவிட மாட்டோம். நாங்கள் இன்று இருக்கும் நிலையில் எமது இனப்பிரச்சினைக்கு மேற்குலக நாடுகளின் முயற்சியில் தீர்வு கிடைக்க வேண்டுமானால் இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமாகும்.
இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கு உறுதுணையாக இந்தியா இருப்பதை மகிந்த அணி உணர்ந்துகொண்டு இந்தியாவை இந்த நாட்டில் அனுமதித்தால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைத்துவிடும் என்ற ஒரே நோக்கத்துக்காக அம்பாந்தோட்டை மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவிற்கு வழங்குவதை எதிர்க்கின்றார்கள். அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்கிறார்கள்.
தமிழ் மக்களுக்கு சனநாயக ரீதியாக பன்னாட்டுச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவருவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற ஒரே கட்சிதான் போராடிக் கொண்டிருக்கிறது - என்றார். (5)

# பல மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பெண் சிக்கினார்

ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் டுபாயில் இருந்து இலங்கை வந்த உகண்டா நாட்டுப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து ஆயப் பகுதியினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். பெண்ணின் பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 505 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக ஆயப் பகுதியின் பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள 43 வயதான பெண். விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (5-ரி4)

குருப்யோ நமஹ

எந்தரோ மகானுபாவலு அந்தரிஹி வந்தன முலு

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் முருகேசு
திருஞானசம்பந்தன்


தோற்றம் 18 . 03 . 1948

மறைவு 19 . 09 . 2016

திதி: புரட்டாதி சங்கடஹர சதுர்த்தி (09.10.2017)

திருச்சிற்றம்பலம்
அப்பன்நீ. அம்மைநீ. ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம் முத்து (ந்) நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 01 . 1946

இறப்பு 07 . 10 . 2017

### அருணாசலம் சுப்பிரமணியம்

யாழ்.சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும். கணேசபுரம். கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சுப்பிரமணியம் 07.10.2017 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற மந்துவில் கந்தையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும்; வேல்பதியின் அன்புக் கணவரும். சுதர்சன் (மோகன் - லண்டன்). சர்மிளா (றாஜி - லண்டன்). முகுந்தன் (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்ற வர்களான நடராசா. நல்லம்மா. முருகேசு மற்றும் பரமேஸ்வரி (பூநகரி). வீரசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். ஜெயரூபன் (லண்டன்). துர்க்காஜினி (லண்டன்). அருந்தா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும்.காவியா. சைனுஜா. ஜெனஜா. ஆர்வலன். ஆதிரன். அஸ்மினன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 02, கணேசபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 039 6513

# கிழக்கிலும் கூட்டமைப்பின் உள்வீட்டு மோதல் தொடர்கிறது

## முன்னாள் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணியை நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் சாடல்

கொழும்பு, ஒக். 9

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி தனது பதவிக் காலத்தில் பணிகளைச் சிறந்த முறையில் செய்துள்ளாரா என்பது என்னைப் பொறுத்தவரை கேள்விக் குறியாகவே உள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஐயன்கேணி தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் கல்வித்துறையில் நாங்கள் இறுதி நிலையில் உள்ளோம். கடந்த காலப் போர் கல்வி வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. போரினால் வட மாகாணத்தில் பல அழிவுகள் நடைபெற்றுள்ளன. அந்த மாகாணம் கல்வியில் பெருவாரியான வீழ்ச்சி யைக் காணவில்லை. கிழக்கு மாகாணத்தில்தமிழ்ப்பிரதேசங்களில் கல்வித்துறையில் மிகக்குறைவான வளத்துடன் காணப்படுகிறது.

கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் இணைந்த ஆட்சியில் முதலமைச்சர் பதவி கிடைக்காத நிலையில் இரண்டு அமைச்சுக்களையும் ஒரு பிரதி அவைத் தலைவர் பதவியையும் பெற்றோம். அதிலே கல்வி அமைச்சும் எமது கட்சி சார்பாகப் பெறப்பட்டது.


எனது பார்வையில் அவரது காலப் பகுதியில் தமிழ்ப் பிரதேசங்களில் சரியான முறையில் வளங்கள் பங்கீடு செய்யப்படவில்லை அதிகாரங்கள் பயன்படுத்தப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 10 தமிழ்ப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வறுமை அதிகம் காணப்படுகிறது. கிழக்கு மாகாண ஆட்சியில் தமிழ்ப் பிரதேசத்தின் அபிவிருத்திகள் வெறும் கண்துடைப்பாகவே அமைந்தன. கொழும்பிலும் நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நியாயமான முறையில் அணுகிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சில விடயங்களில் அரசுக்கு ஆதரவு வழங்குகிறோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் 74 சதவீதம் தமிழ் மக்கள் வாழ்கின்ற போதிலும் அபிவிருத்தியில் மற்றுமொரு சமூகம் முன்னேற்றமடைந்து கொண்டு செல்கிறது. நான் அவர்களைக் குறைகூறவில்லை. ஆனால் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை நாங்கள் தமிழ் பேசும் சமூகமாகவே அவர்களைப் பார்க்கிறோம். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று கிடைக்கும் போது அது தமிழ் பேசும் சமூகத்திற்கான தீர்வாக அமைய வேண்டும் -என்றார். (5.46)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
திருமதி யமுனா அருண்ராஜ்
(சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்) அவர்களின் அன்புத் தாயார்
திருமதி இரத்தினேஸ்வரி அருளம்பலம்
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மாணிக்கம் பூபாலசிங்கம்
(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - யாழ்ப்பாணம்)

மண்ணில் 31.10.1953

விண்ணில் 03.10.2012

திதி: அமரபக்க சதுர்த்தி (09.10.2017)

அகல் விளக்காய் ஒளிர்ந்து
அரவணைப்பால் எல்லோரையும் ஈர்த்து
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
வழிகாட்டிய எம் தெய்வத்துக்கு
ஐந்தாண்டு நிறைவதனில் எம் அஞ்சலிகள் பல
நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
சாந்தி!

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### குமாரசாமி ரவீந்திரகுமார் (ரவி)



சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும். ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ரவீந்திரகுமார் 03.10.2017 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் குமாரசுவாமி - துரையம்மா தம்பதிகளின் அன்பு மகனும். இராசதுரை - தெய்வேந்திரராணி தம்பதிகளின் மருமகனும். கிருபாலினியின் அன்புக் கணவரும். யசிந்தா. கிஷோன். நீனா ஆகியோரின் தந்தையும். விஜயகுமார். உதயகுமார். ஜெயக்குமார் (கனடா). சதீஸ்குமார் (ஜேர்மனி). சுதர்மினி (லண்டன்). றஜனகுமாரி (பிரான்ஸ்). ரமேஸ்குமார் (லண்டன்). ராஜகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2017 புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.C முன் ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
கு.உதயகுமார் (சின்னராஞ்சி)

077 610 8638

# தேசியப் பாதுகாப்புக்கே 2018இலும் அதிக நிதி!

## ஒதுக்கீட்டுச் சட்டவரைவு இன்று முன்வைப்பு

கொழும்பு, ஒக். 9
2018ஆம் ஆண்டுக்கான அரசின் உத்தேச செலவினங்களை உள்ளடக்கிய நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான சிறப்பு அமர்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெறும்.

நிதி அமைச்சர் மங்களசமரவீர மேற்படி ஒதுக்கீட்டுச் சட்டவரைவைச் சமர்ப்பிப்பார்.

இதில் அமைச்சுக்களுக்கான செலவின ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

அடுத்த ஆண்டிலும் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2018ஆம் நிதியாண்டுக்காக அரசின் மொத்தச் செலவு 3ஆயிரத்து 982 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.


(5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை




மாணவன் செல்வன்
வாசுதேவன் அநந்தன்
2017 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி பல்கலையும் கற்று, பலபட்டங்களைப் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
செ.இராசலிங்கம் குடும்பம்
(தாத்தா)
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
Congratulations

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை உடற்கல்வி ஆசிரியரான
பொ.சகிலன்
கல்வி நிர்வாக சேவை (SLEAS III)
நியமனம் பெற்றதை வாழ்த்தி நிற்பதோடு
மேலும் இவரது சேவை இன்னும் வளம் பெற
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.
கைதடி.
Congratulations

பாராட்டி வாழ்த்துகின்றோம்
துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த
தீபன் மதனா தம்பதிகளின்
செல்வப் புதல்வி
செல்வி தீபன் திரிசிகா
Congratulations





2017 ஆம் ஆண்டு நடைபெற்ற
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
யா/வதிரி திரு இருதய கல்லூரி
ஊடாக தோற்றி பாடசாலையில் அதி கூடிய புள்ளியான 177 புள்ளிகளைப் பெற்று சித்தியெத்தியமைக்காக அவரைப் பாராட்டி அவரது வெற்றிக்காக அயராது உழைத்த பாடசாலை அதிபர் திரு.இ.ராகவன் அவர்களுக்கும் வகுப்பு ஆசிரியர் திரு.சுபாஸ்கரன் மற்றும் அவரைக்கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து திரிசிகா மேலும் பல பட்டங்கள் பெற்று பார்போற்ற நீடூழிவாழவேண்டுமென கலிகைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்
அன்புடன் வாழ்த்துவோர்:
தீபன் - மதனா (பெற்றோர்), அப்ஷிகா (தங்கை), ஹிரிகணன் (தம்பி),
தெய்வலிங்கம் (அப்பப்பா), மகேந்திரன் (அம்மப்பா),
சுசியேந்திராணி (அப்பம்மா), தேவமலர் (அம்மம்மா),
யுகன் (பெரியப்பா - பின்லாண்ட்), மதன் (பெரியமாமா - லண்டன்),
சுதன் (சித்தப்பா - ஜேர்மன்), மோகன்ராஜ் (சின்னமாமா - லண்டன்),
சீவியா (அத்தை - சுவிஸ்), பிறேமன் (குட்டிமாமா),
தனுசியா (அத்தை),
முருகன் களஞ்சியம்
கொடிகாமம் றோட், கலிகை.

# இழுபறியில் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் நியமனம்

கொழும்பு, ஒக். 9

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான புதிய மாவட்டச்செயலர் நியமனம் தொடர்பாக அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலராகப் பணியாற்றிய பி.எம்.எஸ்.சார்ள்ஸ் அண்மையில் சுங்கப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து, மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பதவி வெற்றிடமாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பதவிக்கு நியமிப்பதற்கு நிர்வாக சேவை தரம் -1 ஐ சேர்ந்த மூன்று அதிகாரிகளின் பெயர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரை செய்திருந்தது. அவர்கள் முக்கிய அமைச்சுக்களில் பணியாற்றுகின்றனர்.

கிழக்கு மாகாணசபையில் உள்ள மற்றொரு நிர்வாக சேவை அதிகாரியை அந்தப் பதவிக்கு நியமிக்க அரசு திட்டமிட் டுள்ளது. அந்த அதிகாரியின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையிலேயே அவரை மட்டக்களப்பு மாவட்டச் செயலராக நியமிக்க சிறிலங்கா அரசு முயற்சித்து வருகிறது. கடந்தவாரம் மாவட்டச் செயலரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

அரசினால் முன்மொழியப்பட்டவர் உள்ளிட்ட இரண்டு மேலதிக நிர்வாக சேவை அதிகாரிகளும் நேர்காணல் செய்யப்பட்டனர். எனினும் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

கடந்த மாதம் 29ஆம் திகதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பதவி வெற்றிடமாக உள்ளது. (5)

## மன அழுத்தத்தைக் குறைக்க எல்லோராலும் பயிற்சி செய்யப்படக்கூடிய ஆதாரபூர்வமான வழிமுறைகள்

01. எளியமுறை யோகாசனம் :- பயிற்றுநர்களிடம் பழகுவது சிறந்தது.
02. சுவாசப் பயிற்சிகள்:-
    - சுகப் பிராணாயாமம்
    - நாடி சுத்தி பிராணாயாமம்
03. உணர்வுகளுடனான தியானம்:-
    - நான் இப்பொழுது இங்கே இருக்கிறேன்
    - என் தலையிலிருந்து கால்வரை ஒவ்வொரு உறுப்பும் நன்றாயிருக்கின்றன. சமாதானமான சந்தமாக இருக்கின்றன.

– சாந்திகம்.

## தவறிவிட்டது

சிவபாதம் சாஜித்தன் ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை, லைசன்ஸ், ரக்ஸ், இன்சூரன்ஸ் ஆகியன அடங்கிய பேர்ஸ் வரணியிலிருந்து நுணாவில் சந்தி, கோப்பாய் ஊடாக உரும்பிராய் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 570 8071, 076 637 3894

## காணி விற்பனைக்கு

அளவெட்டியில் அழகொல்லைப் பகுதியில் வயல் காணி ஒன்றும் மற்றும் அனிஞ்சிலடி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கிணற்றுடன் கூடிய இரு காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (பயன்தரு மரங்கள் மற்றும் வதிவிடத்துக்குரியது)

077 668 6086

# வடக்கு - கிழக்கு மாகாணங்களிடம் தமிழ்மொழி புத்தகங்கள் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படவேண்டும்

## கோரிக்கை விடுகிறார் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலர் தில்லை நடராஜா

கொழும்பு, ஒக். 9

தமிழ் மொழி மூலம் புத்தகங்களைத் தயாரிக்கும் பொறுப்பு வடக்கு - கிழக்கு மாகாண சபையிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று கல்வியமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலர் எஸ். தில்லை நடராஜா தெரிவித்தார்.

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுவாமி விபுலாநந்தர் மாநாடும் கலைவிழாவும் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு, மட்டக்களப்புக் கல்லடியிலுள்ள சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்திலே சில காலம் நான் மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலராகப் பணியாற்றியிருக்கின்றேன். கொழும்பு கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் பணியாற்றியிருக்கின்றேன்.

தமிழ் மொழிப் பாடப் புத்தக வெளியீடுகள் சம்பந்தமாகச் சில திட்டங்களை வரைந்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான வேலைத் திட்டங்களைச் செய்கின்றபோது அரசு மாறியதால் அவை பயனற்றுப் போயின. தமிழ் மொழி மூலம் புத்தகங்கள் தயாரிக்கின்ற பொறுப்பை வடக்கு-கிழக்கு மாகாண சபையிடம் கையளித்தால் அதில் தவறுகள், வழுக்கள் இடம்பெறாது என்பது எனது ஆய்வினடிப் படையில் தோன்றும் கருத்தாகும். தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும்வடக்கு - கிழக்கில் தமிழறிஞர்கள் உள்ளார்கள். அங்கு கொடுக்கப்படும்போதுதான் அவர்கள் அசிரத்தையில்லாமல் அர்ப்பணிப்போடும், உணர்வோடும் ஒன்றிப் போய் இந்தப் பணியைச் செவ்வனே செய்வார்கள்.

நான் ஜேர்மனிக்குப் போயிருந்தபோது அங்குள்ள தமிழ்ப் பற்றாளர்கள் புத்தகங்களை அச்சிடக் கூடிய சில அச்சியந்திரங்களைக் கூட வழங்க ஆயத்தமாக இருந்தார்கள். இங்கிருந்து இடம்பெயர்ந்த புலம்பெயர் உறவுகள் இங்குள்ள மாணவர்கள் கற்பதற்குப் பல வசதி வாய்ப்புகளைக் கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்களின் ஒத்துழைப்புடன் புதிய பாடப் புத்தகங்களை எங்களைச் சேர்ந்தவர்களே தயாரித்தால் அதில் எந்த வழுக்களும் வருவதற்கு இடமிருக்காது. இப்பொழுது நமக்குச் சாதகமான காற்று வீச ஆரம்பித்திருக்கின்றது.

எங்களுக்குரிய பாடப்புத்தகங்களை நாங்களே தயாரிப்பதற்கு அரசு அனுமதித்தால் எங்களிலுள்ள அனுபவம் வாய்ந்த, அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய பல பேராசிரியர்கள் கலாநிதிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்தால் அவை நிச்சயமாக நாளைய சமூகத்திற்கு நல்ல புத்தகங்களாகமலரும்-என்றார். (5,46)

## வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை
## இறைச்சிக் கடை/ மீன் கடை/ பொதுச் சந்தை நடத்துவதற்கான
## கேள்வி அறிவித்தல் - 2018

01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரையிலான காலப்பகுதிகளுக்கு கீழ்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி படிவங்கள் இணைப்பிரதிகளில் வழங்கப்படும். கேள்வி படிவங்களின் ஒரு பிரதி அரக்குமுத்திரை இடப்பட்டு செயலாளர், பிரதேசசபை, வெங்கலச் செட்டிகுளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் பிரதேசசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலோ 2017ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 25ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகச் சேர்க்கப்படல் வேண்டும்.

இரண்டாவது பிரதியினை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா்வீதி, வவுனியா** என்ற விலாசத்துக்கு குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் யாவும் **25.10.2017 ஆம் திகதிமு.ப 10.30 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.**

கேள்விப்பத்திரத்தை **09.10.2017–24.10.2017 திகதிவரை வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை அலுவலகத்தில் காலை 9.00 மணிதொடக்கம் பி.பகல் 3.00 மணிவரை** பெற்றுக்கொள்ளலாம். கேள்வி திறத்தலின் போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் கேள்விச்சபை கூட்டத்தில் பார்வையாளராகக் கலந்துகொள்ளமுடியும்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி தொடர்ச்சியாக 05 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் கேள்விப்படிவம் பெறப்படவேண்டும்.
2. ஏற்கனவே குத்தகை கேள்விகோரலில் பிரதேசசபை கறுப்புப்பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
3. சித்தியெய்தும் கேள்விதாரர் 25.10.2017இல் இருந்து 07 (ஏழு) நாள்களிற்குள் 1/3 வைப்புத் தொகையைச் செலுத்தத்தவறின் குத்தகை கேள்வி இரத்துச் செய்வதுடன் கேள்விவைப்பு மீளளிக்கப்படமாட்டாது.
4. கச்சேரி அல்லது பிரதேசசபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கமைவாக மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்படல் வேண்டும்.

| இல | கடை விவரம் | வருடாந்த குத்தகை | மீளளிக்கப் படும் வைப்பு | கேள்விப் படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | மாட்டிறைச்சிக் கடை ஆண்டியா புளியங்குளம் | 202,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை மாங்குளம் | 639,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 3 | மாட்டிறைச்சிக் கடை சின்னச்சிப்பிக்குளம் | 132,200.00 | 8,000.00 | 1,000.00 |
| 4 | மாட்டிறைச்சிக் கடை சூடுவெந்த புலவு | 550,022.40 | 8,000.00 | 1,000.00 |
| 5 | பொதுச் சந்தைமாங்குளம் | 180,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 6 | மாட்டிறைச்சிக் கடை செட்டிகுளம் | 351,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 7 | மாட்டிறைச்சிக் கடைபாவற்குளம் | 47,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 8 | மீன் கடைசெட்டிகுளம் | 113,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 9 | மீன் கடை சூடுவெந்தபுலவு | 19,325.00 | 8,000.00 | 1,000.00 |
| 10 | மீன் கடைமாங்குளம் | 223,200.00 | 8,000.00 | 1,000.00 |
| 11 | ஆட்டோதரிப்பிடம் (செட்டிகுளம், மாங்குளம், வீரபுரம், ஆண்டியா புளியங்குளம் சூடுவெந்தபுலவு) | 38,302.00 | 5,000.00 | 1,000.00 |
| 12 | அருவித்தோட்டம் சுற்றுலா மையம் | 17,000.00 | 5,000.00 | 1,000.00 |

**குறிப்பு: கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது**

**பிரதேசசபை,**
**வெங்கலச்செட்டிகுளம்.**
**09.10.2017**

**சுப்பிரமணியம் விஜயதாஸ்**
**செயலாளர்,பிரதேசசபை,**
**வெங்கலச் செட்டிகுளம்.**



இந்திய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் திருமதி சுமித்ரா மகாஜன் தலைமையிலான குழுவினர் நுவரெலியா சீத்தா எலிய சீதையம்மன் ஆலயத்திற்கு பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலயத்தின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையிலான நிர்வாக சபை உறுப்பினர்கள் அவர்களை வரவேற்றனர். நினைவுப் பரிசுகளையும் வழங்கி வைத்தனர். (5)

# யானைகள் ஊருக்குள் வராமல் தடுக்க அமைச்சரின் புதுயோசனை

யானைகள் பெருமளவில் காணப்படும் காடுகளில் அவை உணவாக உண்ணும் மரங்களைக் கூடுதலாக நடுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காடுகளில் நிலவும் உணவுப் பற்றாக்குறை காரணமாகவே யானைகள் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குள் ஊடுருவி வருகின்றன. மக்களின் உயிர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுகின்றது. வீடுகள், விவசாயப் பயிர்கள் போன்ற மக்களின் சொத்துக்களுக்கு பெரிய அழிவு ஏற்படுகின்றது.

வட மத்திய மாகாணங்களில் இருக்கின்ற எல்லைக் கிராமங்களில் இந்தப் பிரச்சினை பிரதானமாகக் காணப்படுகின்றது. காடுகளுக்குள்யானைகள்உண்ணும் உணவுப்பொருள்களை அதிகரிப்பதன் மூலம் யானைகள் மக்கள் வசிக்கும் பிரதேசங்களுக்குள் ஊடுருவுவதைத் தடுக்க முடியும்.

இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவொன்றினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன்படி யானைகள் பெருமளவில் வசிக்கும் காட்டு பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் வன விலங்குப் பாதுகாப்புத்திணைக்கள அதிகாரிகளினால் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (5)

# சமத்துவம் ஏற்படுத்தும் அரசமைப்புக்கு ஆதரவு

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9
தற்போதுள்ள அரசமைப்பை மாற்றி மக்களுக்கு ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தக் கூடிய புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவளிக்கும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் யாழ்ப்பாணம் புங்கன்குளத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

அரசமைப்புத் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு மிகத் தெளிவானது. அரசமைப்பு மாற்றப்பட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைக்கக் கூடிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் மக்கள் விடுதலை முன்னணி திடமாக உள்ளது.

முதலாளித்துவ புதிய அரசின் கீழ் உருவாக்கப்படும் அரசமைப்பு ஊடாக அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று நம்ப முடியவில்லை. மக்களுக்கு ஏதாவது உரிமைகள் பெற முடியுமாக இருந்தால் அவற்றுக்காகப் போராட வேண்டும். அனைத்துக் கட்சிகளும் அதற்காகச் செயற்பட வேண்டும்.

அரசமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டுப் புதிய அரசமைப்பு வரைவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அது இறுதி வடிவமல்ல. இந்தப் பின்னணியில் ராஜபக்ச இனவாதக் கும்பல் நாடு பிரிக்கப்படப் போகின்றது என்று கூறிப் பல போராட்டங்களை நடத்துகின்றது.

அரசு பௌத்த மதங்களுக்கு வழங்கும் இடத்தை மாற்றப்போவதில்லை. ஏனைய மதங்களுக்கு வழங்கும் உரிமைகளை நிறுத்தப் போவதும் இல்லை. ஒற்றையாட்சியா?, பிரிக்கப்படாத நாடா? என்ற கருத்தாடல்கள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றில் பேசப்பட்டு விவாதிக்கப்பட்ட, முதலாவது அரசமைப்பு இதுவாகும். இது நாட்டுக்கான அரசமைப்பு. இனவாதமல்லாத அனைத்து மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தக் கூடிய பொது நிலைப்பாட்டுக்கு அனைத்துக் கட்சிகளும், பொது அமைப்புக்களும் வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அரசு கூறும் வார்த்தைகளை வைத்துக்கொண்டு பேசுவது சிறந்ததல்ல. மக்களுக்கு எந்த வகையில் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன, அவற்றை எவ்வாறு வென்றெடுப்பது என்பதற்கான நடவடிக்கைளை எடுப்பது விசேட தேவையாகவுள்ளது.

மக்களுக்கான ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் வென்றெடுப்பதற்கான ஏற்ற நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு இணைய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

புதிய அரசமைப்பில் மூன்று விடயங்கள் ஆராயப்படுகின்றன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறையை நீக்குதல், புதிய தேர்தல் முறையைக் கொண்டு வருதல், அதிகாரப் பரவலாக்கம் உட்பட விசேடமாக வட பகுதியில் வாழும் தமிழர்களுக்கான உரிமைகளை நிலைநாட்டுதல் தொடர்பில் பேசப்படுகின்றது.

புதிய தேர்தல் முறை பற்றி விவாதங்கள் ஏற்படவில்லை. அது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகார முறையை அகற்றுவதற்கு மைத்திரிபால அணியினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இப்போது அரிய சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. ஜனநாயக ரீதியான உரிமைகளை நிலை நாட்டிக்கொள்வ தற்கு ஏதுவான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. புதிய திருத்தங்கள் உள்வாங்கப்படுமாக இருந்தால், அவை சிறந்தவை. அவற்றை மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுக்கொள்கின்றது - என்றார். (ற-106)

## மகிந்த மற்றும் சந்திரிகாவுக்கு துமிந்த திஸாநாயக்க அழைப்பு

கொழும்பு, ஒக்.9
அரசால் முன்னெடுக்கப்படும் தேசிய உணவு உற்பத்தி புரட்சி வேலைத் திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருக்கு சுதந்திரக் கடசியின் பொதுச்செயலர் துமிந்த திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற-ரி4)

## இலங்கை தமிழர் வரலாறு நூல் கையளிப்பு



கொழும்பு, ஒக்.9
இலங்கைத் தமிழர் வரலாறு என்ற நூலின் சிறப்புப் பிரதி நேற்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாருக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு கொழும்பு இந்து கலாசாரத் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இந்து கலாசார அலுவலகப் பணிப்பாளர் ஏ.உமா மகேஸ்வரனும் கலந்து கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதனின் எண்ணக் கருவில் இந்த நூல் உருவாக்கப்பட்டது. (ற)




பொருள் விலையேற்றத்தைக் கண்டித்து முன்னிலை சோசலிசக் கட்சியால் மட்டக்களப்பு நகரில் நேற்றுப் பரவலாக துண்டு அறிக்கைகள் ஒட்டப்பட்டிருந்தன. பொருள் விலையும் வரிச்சுமையும் தாங்க முடியவில்லை. மண்ணையா உண்பது ?, பொருள் விலையும் வரிச்சுமையும் கடன்களும் பில்லுகளும் தாங்க முடியவில்லை, அரிசி 100 ரூபா, தேங்காய் 100 ரூபா! அப்படி என்றால் நாங்கள் மண்ணையா உண்பது? என்பது போன்ற வாசகங்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டன. (ற)

## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

நுவரெலியா, ஒக்.9
பண்டாரவளையில் உள்ள வர்த்தகநிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்புப் பிரிவினரும், மின்சார சபை ஊழியர்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும், மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)



# நாடாளுமன்ற

## ச

## பயிலுநர்களுக்































நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் சாதனையாளர்கள் மதிப்புறுத்தலும், பயிலுநர்களுக்
அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. உதயன் நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவ
இ.விக்னேஸ்வரன் தலைமை விருந்தினராகவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளும

## ளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில்

# சாதனையாளர் கௌரவிப்பும்
# நக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் - 2017




















நர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வட்டுக்கோட்டையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
தை சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர்
நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## யார்க்கெடுத்துரைப்போம்

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாகக் கல்விநிலை வீழ்ச்சி அடைந்துள்ளது என்பது பரவலான குற்றச்சாட்டு. அதற்கான காரணத்தைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆய்வு மாநாடு ஒன்றையும் பெரும் பொருள்செலவில் நடத்தியது. அதன் பெறுபேறுகள் நூலுருவிலும் வெளியிடப்பட்டன. ஆனால், அதன் பின்னர் அந்த மாநாட்டின் கண்டடைவுகளின் அடிப்படையில் எந்த நடவடிக்கையாவது எடுக்கப்பட்டதா? என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

வடக்கின் கல்வி நிலை வீழ்ச்சிக்கு சமச்சீரற்ற ஆசிரியர் வளப் பங்கீடும் ஒரு காரணம் என்று எப்போதும் சுட்டிக்காட்டப்பட்டே வருகின்றது. நகரப் புறங்களில் இருக்கும் சில பாடசாலைகளில் சில பாடங்களுக்குத் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதேநேரம் பின்தங்கிய பகுதிகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய முக்கிய பாடங்களுக்கே கூட ஆசிரியர்கள் இல்லை என்பதே நிலைமை. வன்னிப் பகுதியில் இந்த நிலைமையை அதிகம் காணலாம்.

அனைவருக்கும் கல்வி சமமானது என்ற அடிப்படையிலேயே இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவச மதிய உணவு என்பன அரசால் வழங்கப்படுகின்றன. ஆனால், கல்வி அப்படி எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. நகரப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் வசதிகள் பெருகிக்கொண்டே போக கிராமங்களிலும் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளில் நிலைமை மோசமாகிக் கொண்டே செல்கின்றது.

இந்த நிலைமையால் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கித் தம் பிள்ளைகளை பெற்றோர் இழுத்துச் செல்கின்றனர். இலஞ்சம் கொடுத்தாவது பெரிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துவிட வேண்டும் என்கிற வெறி என்று சொல்லுமளவுக்கு இன்று இந்த நிலை வளர்ந்திருக்கிறது. இதன் விளைவாகப் போதிய மாணவர்கள் இல்லை என்ற காரணத்தால் வடக்கில் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனை நிவர்த்தி செய்து பின்தங்கிய பாடசாலைகளையும் நகரப் பாடசாலைகளுக்கு நிகராக வளர்த்துவிடுவதை நோக்காகக் கொண்டே 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்தை அரசு சில ஆண்டுகளின் முன்னர் அறிமுகப்படுத்தியது. அது முழு இறுக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற போதும்கூட அந்தத் திட்டத்தால் பயன் உண்டு என்பதைத் தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்கின்றபோது தெரிகிறது.

50 ஆண்டுகளின் பின்னர் முதற்றடவையாக புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் வெற்றிபெற்றமை போன்ற சம்பவங்கள் கடந்த சில ஆண்டுகளில் சாத்தியமாகி இருக்கின்றன. சிறிய பாடசாலைகளிலும் புலமைப் பரிசில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி கண்டிருக்கிறது. அருகிலுள்ள பாடசாலைத் திட்டத்தின் மூலம் பயன் உண்டு என்பது இந்தப் பெறுபேறுகளைப் பார்க்கின்றபோது தெரிகின்றது.

நிலைமை அப்படியிருக்க, ஆசிரியர்கள் செல்ல மறுக்கும் பின்தங்கிய பகுதிப் பாடசாலைகளை மூடிவிடுவதே இந்தப் பிரச்சினைக்கு மாற்று என்று வடக்கு மாகாணசபையின் அமைச்சர் ஒருவர் தெரிவித்திருப்பது அவர்களின் விடய ஞானம் பற்றிய தெளிவுக்கு மிகச் சிறந்த உதாரணம்.

ஆசிரியர் வளச் சமச்சீரின்மைக்கு கடந்த காலங்களில் தெற்கைச் சேர்ந்த அரசியல் கட்சிகளினதும் ஆளுநரினதும் தலையீடே காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டதுண்டு. ஆனால், வடக்கு மாகாணசபையின் ஆட்சியைத் தமிழர்கள் முற்றுமுழுதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னரும் அதனைத் தீர்ப்பதற்கு வினைத்திறனான வழிவகையை அவர்களால் காண முடியவில்லை. அதற்கும் அரசியல்தான் காரணம்.

ஆசிரியர்களை இடம்மாற்றினால் அவர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி உடனடியாகவே தமது இடமாற்றத்தை திரும்பப்பெற்றுக்கொள்கிறார்கள் அல்லது வேறு வசதியான பாடசாலைக்கு மாறிச்சென்றுவிடுகிறார்கள் என்பதையே தனது யோசனைக்கான அடித்தளமாக அந்த அமைச்சர் முன்வைத்திருக்கிறார் என்றால், மாகாணசபையின் நிர்வாகத் திறனின்மையைத் தானே இது பறைசாற்றுகின்றது.

இப்படி தமது நிர்வாகத்திறனின்மைக்கு, சளி இருந்தால் மூக்கை அறுத்துவிடு என்ற வகையில் சிகிச்சை தேடுவது எப்படிச் சரியாக முடியும்? அதனால்தான் இது ஒரு முட்டாள் தனமான யோசனை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டித்திருக்கிறது. அதன் துணிவு பாராட்டப்படவேண்டியது. உண்மையை நெற்றிக்கு நேரே சொல்வதற்கும் ஒரு துணிவு வேண்டும்.



# புதிய அரசமைப்பின் உருவாக்கம் கானல்நீர்தானா?

இந்துமதி

அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான அரசின் இடைக்கால அறிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முற்றாக நிராகரித்துள்ளதோடு, அது குறித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக் குற்றம்சாட்டவும் அவர் தவறவில்லை. தமிழ் மக்கள் பேரவையும் சமகாலத்தில் தனது அதிருப்தியை இது தொடர்பாக வெளியிட்டுள்ளது. சிங்கள இனவாதிகளும் புதிய அரசமைப்புத் தொடர்பாகத் தமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். கடைந்தெடுத்த இனவாதியென அடையாளப்படுத்தப்பட்டுள்ள விமல் வீரவன்ச ஒருபடி மேலேபோய் குருதி சிந்தித் தக்கவைத்த ஒற்றையாட்சியை புதிய அரசமைப்பின் மூலம் இல்லாதொழிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும், இதைத் தடுப்பதற்கு சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டுமெனவும் அறைகூவல் விடுத்துள்ளார். இதேவேளை சகல தரப்பினரதும் கருத்தைக் கோருவதென தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. மறுபக்கத்தில், நாட்டைப் பிளவடையாமல் பாதுகாக்க விகாரைகளில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை பிக்குகள் பாதுகாப்பு அமைப்பு மேற்கொண்டுள்ளது.

### புதிய அரசமைப்பின் நிறைவேற்றம் கேள்விக்குறியான ஒன்று

புதிய அரசமைப்பைத் தமிழர்களும் சிங்களவர்களும் எதிர்க்கின்ற நிலையில், அதன் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகி விட்டது. பெரும்பான்மையின மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்த நாட்டில் எதுவுமே நடந்து விடப் போவதில்லை. புதிய அரசமைப்பின் நிறைவேற்றத்திலும் இதுதான் நடக்கப் போகின்றது. ஆனால் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாத புதிய அரசமைப்பை இனவாதிகள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை.

தமிழ் மக்கள் போராடிப் போராடியே களைத்துப் போய் விட்டார்கள். போராட்டம் என்ற வார்த்தையை உச்சரிப்பதற்கே அவர்களது நாவுகள் தயங்குகின்றன. இந்த நிலையில் வடக்கு முதலமைச்சர், தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குப் போராட வேண்டுமென அடிக்கடி கூறி வருகின்றார். போராட்டம் என்பது ஒரு பொழுது போக்கான விடயமல்ல என்பதை அவர் புரிந்து கொள்ளத் தவறியதன் விளைவுதான் இது. அத்துடன் அவர் தமிழர்களின் போராட்டங்களில் எந்த விதமான தொடர்பும் இல்லாதவராகவே இதுவரைகாலமும் இருந்துள்ளார். இதனால் போராட்ட அனுபவங்களும் அவரிடம் இல்லை. இத்தகைய ஒருவர் தமிழர்கள் போராட வேண்டுமெனக் கூறுவது சிறுபிள்ளைத்தனமானது.

### நாடு பிளவுபட்டு விடுமோ என அச்சம்

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தாது எதையும் சாதித்துவிட முடியாது. நாடு பிளவு பட்டு விடுமோ என்ற அச்சம் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துவிட்டது. இதை அகற்றுவது எளிதான காரியமல்ல. இதேவேளை இங்



குள்ள சில தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களிடம் இனவாதக் கருத்துக்களைப் பரப்புவதில் ஈடுபடுகின்றனர். வடக்கு முதலமைச்சரும் இனவாதி என்ற முத்திரை குத்தப்பட்ட ஒருவராகவே தெற்கில் பார்க்கப்படுகின்றார். முதலில் இனவாதத்துக்கு சாவு மணி அடிக்கப்பட வேண்டும். இனவாதம் இருக்கும் வரையில் நாட்டில் எதையும் சாதித்துவிட முடியாது.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக இந்தியா உட்பட வேறு நாடுகளும் அதிக அக்கறை காண்பித்து வருகின்றன. போர் காரணமாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் பல்வேறு நிலைகளில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் ஈழத்தமிழர்களின் விடயத்தில் அந்த நாடுகள் அதிக அக்கறை காட்டி வருகின்றன.

புதிய அரசமைப்பு உருவாகுமேயானால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதோடு தமிழர்களின் பிரச்சினைகளும் தீர்ந்து விடுமென அந்த நாடுகள் நம்புகின்றன. ஆனால் புதிய அரசமைப்பு உருவாகுமா? அல்லது உருவானாலும் சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுமா? தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? என்ற கேள்விகள்தான் தற்போது எழுந்து நிற்கின்றன.

### நாட்டு மக்கள் மற்றொரு போரை விரும்பவில்லை

நாட்டில் இன்னுமொரு போர் இடம்பெறுவதை எவருமே விரும்பமாட்டார்கள். அந்த அளவுக்கு சகல இனமக்களும் போர் தந்த வலிகளை அனுபவித்து விட்டார்கள். இன்னுமொரு போர் ஆரம்பிக்குமானால் அதைத் தாங்கக் கூடிய ஆற்றல் மக்களிடமும் இல்லை. அரசிடமும் இல்லை. பிற நாடுகளும் உதவுவதற்கு முன்வராத நிலைதான் ஏற்பட்டு விடும். இறுதிப் போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையிலும் தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தாங்கியவர்களாகவே அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான தீர்வுகளை வழங்குவதில் இழுபறி நிலை காணப்படுகின்றது.

அரசு எதையாவது செய்வதற்கு முயற்சி செய்யும்போது இனவாதிகள், அதை எதிர்த்துப் போர்க்கொடி தூக்குகின்றனர். பெரும்பான்மையின மக்கள் மத்தியில் தவறான பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர். நாடு இரண்டாகப் பிளவுபடுமானால் சிங்கள மக்கள் கடலில் குதித்து இறப்பதைத் தவிர வேறு வழியொன்றும் இல்லையெனவும் தவறான பரப்புரைகள் இடம்பெறுவதால் சிங்கள மக்கள் குழம்பிய நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை தமிழ் மக்களும் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான இடைக்கால அறிக்கையால் திருப்தி அடைந்தவர்களாகக் காணப்படவில்லை. இதனால் புதிய அரசமைப்பின் உருவாக்கம் குறைப்பிரசவமாக முடிந்துவிடுமா என்ற ஐயமும் எழுந்துள்ளது.

பெரும்பான்மையினத் தலைவர்களும், ஏனைய இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தலைவர்களும் ஒரே மேசையில் அமர்ந்து ஆறுதலாக உரையாடி ஒரு தீர்க்கமான முடிவை எட்டவேண்டும்.

தமக்குள் உள்ள சந்தேகங்களைக் களைந்து விட வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்குவதால் ஏற்படக்கூடிய நன்மைகளை மக்களிடம் விளக்கிக் கூற வேண்டும்.

மக்கள் திருப்தியடையும் பட்சத்தில்தான், பொது அபிப்பிராய வாக்கெடுப்பில் அரசினால் வெற்றியை ஈட்டமுடியும். இதைவிடுத்து வெறும் கண்துடைப்புக்காகப் புதிய அரசமைப்புத் தொடர்பாக உச்சரித்துக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் கிடைக்காது.

# உலக தபால் தினம்

**1874 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் பன்னாட்டு தபால் ஒன்றியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதை நினைவுகூரும் முகமாகவே உலக தபால் தினம் ஒவ்வோர் ஆண்டும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி பன்னாட்டளவில் கொண்டாடப்பட்டு வருகிறது.**

ஹ.அஹலிஹா

சேவைத் துறை மனித வாழ்வியலின் அன்றாட நடத்தைக்கோலங்களின் செயலாற்றுகையில் முதன்மைப்பங்காற்றி வருகிறது. அந்தவகையிலே தகவல் பரிமாற்ற ஊடகமாகச் சிறந்து விளங்குகின்ற தபால் சேவை இன்றைய கால நகர்விலும் தனித்துவம் பெற்று விளங்குகிறது. அதன் முக்கியத்துவம் நவீன தொழில்நுட்ப தகவல் பரிமாற்றங்கள் இடையேயும் எப்போதும் தேவையோடு உணரப்படுகிறது.

**செய்திப் பரிமாற்றம்**


ஆரம்ப காலத்தில் மனிதன் செய்தியை அல்லது தகவல்களைத் தொலைவில் உள்ளோருக்குப் பரிமாறிக் கொள்ள புறாவைப் பயன்படுத்தினான். அதன் பின்பு ஊருக்கு ஊர் முரசு அடித்து அறிவித்தல்கள் கொடுத்த காலங்கள் தோன்றி மறைந்தன. இன்று முழு உலகமும் கணப் பொழுதில் தொடர்புறுகின்றன. நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப செயலிகளின் உதவி கொண்டு குறிப்பாக, மின்னஞ்சல், குறுஞ்செய்திப்பரிமாற்றம் எனத் தகவல் தொடர்புத்துறை அடைந்த மாற்றங்கள் ஏராளம். ஆனாலும் தகவல்பரிமாற்றங்களுக்குதபால்சேவை மிகவும் இன்றியமையாததொன்றாக இன்றும் காணப்படுகின்றது.

உத்தியோகபூர்வமான தகவல் பரிமாற்றங்களுக்கு இன்னும் அஞ்சல் முறைமை அவசியப்படவே செய்கின்றது. ஆரம்ப காலத்தில் தபால் நிலையங்கள் கடிதப் பரிமாற்றம், தபால் சேவை என்பவற்றுடன் இணைந்த வகையில் தந்தி சேவை, தொலைபேசி சேவை ஆகியவற்றை முக்கியமாகக் கொண்டிருந்தன. இன்றைய காலம் அதிலிருந்து மேம்பட்டுள்ளது. கடிதப் பரிமாற்ற சேவைக்கு அப்பால் நானாவித சேவைகளை வழங்கும் நிலையமாகவும் தபால்நிலையங்கள் மாற்றங் கண்டுள்ளன.

**உலக தபால் தின அறிவிப்பு**

உலக தபால் தின அறிவிப்பை நோக்கின், "உலகின்பல்வேறுநாடுகளுக்கே உரிய புவியியல், அரசியல், மதம் போன்ற பல்வேறு எல்லை மற்றும் தடைகளைத் தாண்டி எமது மக்களை முழு உலகுக்கும் இணைக்கின்றோம். மக்கள் அவர்களுக்குரிய பிரத்தியேகமானதும் மிகப்பெறுமதிவாய்ந்ததுமான தகவல்களையும் பொருள்களையும் எம்மிடம் ஒப்படைப்பது அவற்றைப் பாதுகாத்து மிக வேகமாகவும் மிகக் கவனத்துடனும் அதன் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பார்கள் என்ற எம்மீதுள்ள பெரு நம்பிக்கை என்பதை நாம் அறிந்துள்ளோம்.

அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உயர் செயற்றிறனுடனும், நேர்மையுடனும், பாதுகாப்புடனும் இரகசியத்தன்மையைப்பேணி அவர்களுடைய தகவல்களையும், பொருள்களையும், உரிமைகளையும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். நேற்றைய தினத்தை விட நன்றாக இன்றைய தினத்திலும் அதேபோன்று இன்றைய தினத்தை விட நாளைய தினத்தில் இன்னமும் சிறப்பாகவும் சேவையை மக்களுக்கு வழங்குவ அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்" என்பதாக அது அமைவு பெற்றிருக்கும்.



**தபால் சேகரிப்பும் முத்திரைப் பயன்பாடும்**

ஆரம்பகாலத்தில் தபால்களைப் போடுவதற்கு தபால்பெட்டிகள் பயன்படுத்தப்படவில்லை. கடிதங்களைக் கொண்டு செல்பவர்களே கடிதங்களைப் பெற்றும் வந்தனர். 1653 ஆம் ஆண்டு தபால்பெட்டிகளின் அறிமுகம் கண்டுகொள்ளப்பட்டது. சார்லஸ் ரீவ்ஸ் என்பவர் தபால்பெட்டிக்கு மாதிரி வடிவத்தை அமைத்துக் கொடுத்தார். தொடர்ந்து அதன் பயன்பாடும் பரம்பலும் நிலைநிறுத்தப்பட்டது.

தபால் சேவையுடன் ஒன்றிணைந்த வகையில் முத்திரைப் பயன்பாட்டின் செயல்வடிவங்களை நோக்கின் ஒட்டும் தன்மையுள்ள முத்திரைகளும், ஒரே அளவைக் கொண்ட தபால் கட்டணமும் 'ஜேம்ஸ் சாமேர்ஸ்' என்பவரால் 1834 ஆம் ஆண்டளவில் முன்வைக்கப்பட்டது.

**பன்னாட்டு தபால் ஒன்றியம்**

பன்னாட்டளவில்இயங்கும்பழைமை வாய்ந்த அமைப்புக்களில் ஒன்றான 'பன்னாட்டு தபால் ஒன்றியம்' உலக நாடுகளின் ஒத்துழைப்பின் பலனாக இன்றும் தனது நோக்கை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த ஒன்றியம் பற்றிய எண்ணக்கரு 1863 ஆம் ஆண்டுஐக்கிய அமெரிக்காவில் தபால் அதிபர் நாயகமாகவும், அரச தலைவர் ஆபிரகாம் லிங்கனின் மந்திரி சபை உறுப்பினராகவும் கடமையாற்றிய 'மொன்கெமேரி பிளேயரின்' எண்ணத்தில் வெளிப்பட்டது.

பின்னர் பரிஸ் நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பதினைந்து பிரதிநிதிகள் சந்தித்து பரஸ்பர நம்பிக்கையுடன் கூடிய பொதுவான அமைப்பினை ஏற்படுத்துவதற்கு இணக்கம் கண்டனர். இதன் பின் ஏறத்தாழ பதினொரு ஆண்டுகள் கடந்த நிலையில் ஜேர்மன் நாட்டின் தபால் பணிப்பாளர் நாயகத்தின் பெரு முயற்சியினால் 1874 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி சுவிட்சர்லாந்து நாட்டின் பெர்ன் நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில் இருபத்திரண்டு நாடுகளின் பிரதிநிதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு "அஞ்சல்பொதுஒன்றியம்" உருவாக்கப்பட்டது.

இப்பெயரானது 1878 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் "பன்னாட்டு தபால் ஒன்றியம்" எனப் பெயர் மாற்றம் பெற்றது. ஒன்றியம் அமைக்கப்பட்டதற்கான நோக்கத்திற்கு இணங்க உறுப்பு நாடுகள் அனைத்தும் தபால் பொருள்களை பரஸ்பர நம்பிக்கையுடன் கையாள்வதன் மூலம் அனைத்து உலக நாடுகளும் ஒரு தபால் வலயமாகக் கருதப்பட்டு நிர்ணயிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக உலகளாவிய ரீதியில் சுதந்திரமான தபால் போக்குவரத்துக்கு வழி திறந்ததுடன் ஒரு தபால் நிர்வாகத்தினால் இன்னொரு தபால் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் தபால் பொருள்கள் இடைநிலை தபால நிர்வாகத்தினால் பொறுப்புடன் கையாளப்படுகின்றமையை உறுதிப்படுத்தியது.

**தபால் சேவை**


பன்னாட்டு தபால் வலையமைப்பு மூலம் பின் தங்கிய கிராமங்கள் கூட தபால்சேவையினைப் பெறக்கூடியதாகவுள்ளது. தற்போது உலகில் அண்ணளவாக 6 இலட்சத்து 70 ஆயிரம் நிரந்தர அஞ்சல் அலுவலகங்கள் இயங்கி வருவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் ஆறு மில்லியன் ஊழியர்கள் வரையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் பன்னாட்டளவில் 4 இலட்சத்து 30 ஆயிரம் மில்லியன் தபால் பொருள்கள் வருடந்தோறும் பரிமாற்றப்படுகின்றன.

இந்தத் தபால்அலுவலகங்கள் அஞ்சல் சேவை யுடன் காசுக்கட்டளை, அஞ்சற்காசோலை, சேமிப்பு வங்கிக் கணக்கு போன்ற சேவைகளையும் தேசிய மற்றும் பன்னாட்டளவில் மேற்கொண்டு வருகின்றன. உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து இந்தியத் தபால்துறையிடம் மொத்தமாக ஒரு இலட்சத்து 54 ஆயிரம் தபால் அலுவலகங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. உலகிலே அதிக தபால் நிலையங்களைக் கொண்ட நாடாக இந்தியாவும், அதற்கடுத்ததாகச் சீனாவும் திகழ்கின்றன.

**தபால் முறைமையின் தேவைப்பாடு**

தற்போதைய தபால் தினங்கள் கலை விழாக்களுடனும், வரலாற்றைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகளுடனும் சுருங்கி விடுகின்றன. மாறாக இத்தினத்தில் தபால் குறியீட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அந்த வகையிலே தபால்துறை என்பது ஏனைய எல்லாத் துறைகளையும் விடச் சிறப்பான தொன்றாக விளங்குகிறது.



## ஆசிரியருக்கான கடிதம்

### அச்சத்தில் உலகின் பாதுகாப்பு

அமெரிக்காவின் 'லொஸ் வெகாஸ்' தாக்குதல் பெரும் அதிர்வலைகளை உலகெங்கம் ஏற்படுத்தியுள்ள நிலையில் எத்துணை நவீன தொழில்நுட்ப பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நம்ப இயலாத சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலானது 2011ஆம் ஆண்டு இரட்டைக் கோபுரத் தாக்குதலைப்போன்று எதிர்பாராத நிலையில்-எதிர்பாராத வித தாக்குதல் அல்ல. தலீபான்- அல்கெய்தா போன்ற தீவிரவாத இயக்கங்களின் செயற்பாடுகள் பின்லேடனின் மறைவுக்குப் பின் இல்லாது அல்லது குறைந்து போன நிலையிலும் அதைவிட பயங்கரமான சக்தியான ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் அதிவேக வளர்ச்சி அமெரிக்க உட்பட மேற்குல நாடுகளை பெரிதும் அச்சுறுத்தி வந்தது. எனினும் தற்போது ஈராக், சிரிய நாடுகளில் அவர்களின் ஆதிக்கம் வெகுவாகக் குறைந்துள்ள போதிலும்மேற்கு நாடுகளை தாக்கும்-அச்சுறுத்தும் பலத்தில் குறைவில்லை என்பதையேமேற்படிலொஸ்வெகாஸ் தாக்குதல் குறிப்புணர்த்தி நிற்கிறது.

ஏற்கனவே பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் பொதுமக்கள் பெருமளவில் கூடும் நிகழ்வுகளில் இதுபோன்ற துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ள நிலையில் புலனாய்வுத் திறன் மிக்க அமெரிக்க புலனாய்வுத்துறையின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று 400 இற்கும்மேற்பட்ட மக்களை காயப்படுத்துமளவிற்கு தமக்குப் பலம் உண்டென்பதை தாக்குதலாளிகள் நிரூபித்துள்ளனர். இந்தத் தாக்குதல்நிச்சயம்அமெரிக்கா உட்படமேற்குலக மக்களின் நிம்மதியை பெரிதும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அதே நேரம் வடகொரியாவினால் அமெரிக்காவுக்குப் பயங்கரவாத அச்சுறுத்தல் ஏதுமில்லை. எனவேவரட்டுப்பிடிவாத வரட்டுக் கௌரவ இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து ஒட்டு மொத்த உலகும் எதிர்கொள்ளும் ஐ.எஸ்.ஐ.எஸ். குழுவின் அச்சுறுத்தலை உலக நாடுகளின் அமைதியை கருத்திற்கொண்டு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அமெரிக்காதான் ஆயுதக்குழுக்களை உருவாக்கியதான குற்றச்சாட்டும் உண்டு. விதைத்தவனே அறுவடை செய்வான் என்ற கூற்றுப்படி சமீபத்திய நிகழ்வுகளை நோக்கினாலும் ஆயுததாரிகளின் அரசுகளின் ஏட்டிக்குப் போட்டியான தாக்குதல்களில் ஏதும் அறியா அப்பாவி மக்கள் சாவடைவது மிக வேதனைக்குரியது.

*வடபுலத்தான்.*

# வயோதிபம் மதிப்புக்குரியது





முன்னொரு காலத்தில் ஒரு அரசன் பெனாமஸ் என்ற நாட்டை ஆட்சி செய்து வந்தான். அவனிடம் வலிமையும் உறுதியும் மிக்க ஒரு ஒட்டகம் இருந்தது. அதிலே பயணம் செய்வதும் போர்க் காலங்களில் சண்டைக்குச் செல்வதும் அவனது வழக்கம் ஒட்டகத்தின் உதவியாலேயே அவன் பல நாட்டுப் போர்களிலும் வெற்றி பெற்றான். அதனால் அந்த ஒட்டகத்தை தனது செல்லப் பிராணியாகவும் தனக்கு உதவும் ஒரு தோழனாகவும் பாராட்டிச் சீராட்டி பாதுகாத்து வளர்த்தான்.

அது தனது வயது முதிர்ந்த நிலையில் உறுதி குலைந்து வலிமை குன்றிச் சோர்ந்த போது அதனைத் தனிமைப்படுத்தி ஒரு குடிலில் தங்க வைத்தான். ஒட்டகத்தைப் பார்த்துப் பராமரிக்க எவருமே இல்லாமல் போயினர். ஒரு நாள் அங்கே வந்த குயவன் அந்த ஒட்டகத்தைத் தனது பானை, சட்டிகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தலாம் என எண்ணித் தன்னுடன் அழைத்துச் செல்ல அரசனிடம் அனுமதி வேண்டினான். அதற்குச் சம்மதம் தெரிவித்த அரசன் ஒட்டகத்தைக் குயவனுடம் அனுப்பி வைத்தான். குயவன் மகிழ்ச்சியடைந்தான் தனது மண் பண்டங்கள் எல்லாவற்றையும் ஒட்டகத்தின் முதுகில் ஏற்றி அவற்றை விற்பனை செய்வதற்கு தான் விரும்பிய இடங்களுக்கெல்லாம் அதனை ஓட்டிச் சென்றான். அதனால் அது பாரம் சுமக்க முடயாமல் நடை தளர்ந்து நிலையில் சோர்ந்து படுத்து விடும் ஆனால் குயவனோ ஒட்டகத்தை ஓய்ந்திருக்க விடுவதில்லை.

அரசின் தலைமை அமைச்சர் ஒருநாள் குயவனின் வீட்டுக்கு வந்தார்..அங்கே அரசனின் ஒட்டகம் சோர்ந்தபடி நின்றிருந்தது. அது அரசனுடையது என்பதை அவர் அடையாளம் கண்டு கொண்டார். கண்களில் நீர் வடிய அது நின்ற நிலை அவர் மனதில் இரக்கத்தை ஏற்படுத்தியது.

உடனே அரசனைச் சந்தித்த அமைச்சர் "மகாராசாவே எங்களின் ஒட்டகம் அங்கே குயவனின் மண் பாத்திரங்களைச் சுமந்து களைத்துப் போகிறது. அழுது தூங்கி நிற்கிறது. அது நாட்டுக்கும் எங்களுக்கும் செய்த சேவைகளையும் அதன் வீரத்தையும் மறந்து விட்டீர்களே! அது தவறு உடனேயே அதனை அழைத்து வந்து எமது அரண் மனையில் சுகமாக வாழ வழி செய்ய வேண்டும் எமக்குச் சேவை செய்தவர்களை வருந்த விடக்கூடாது" என்றார். அமைச்சர் கூறியவற்றைப் பற்றி சிந்தித்த அரசன், தான் செய்த தவறை உணர்ந்து கொண்டார். உடனடியாகவே ஒட்டகத்தை மீண்டும் அரண்மனைக்கு கூட்டிவரச் சேவகனை அனுப்பினார். அரண்மனைக்கு கூட்டி வந்த ஒட்டகத்துக்குச் சகல அரச மரியாதைகளுடன் அதனைப் பராமரிக்க சேவகர்களுக்கு ஆணையிட்டார். ஒட்டகம் தான் செய்த சேவைக்கான மதிப்பும் அன்பும் கிடைத்ததை நினைத்து அரண்மனையின் அயலிலே மகிழ்ந்திருந்தது.

# தெரிந்து கொள்வோம்

- ஒரு சிசுவின் கையில் ரேகைகள் 3ஆவது மாதத்திலிருந்து உருவாகின்றன.
- கை, கால்கள் நகங்களின் அடிப்பகுதியிலிருந்து அவற்றின் மேல் பாகம் வரை வளர்வதற்கு 6 மாதங்கள் ஆகின்றன. கால் நகங்களை விட கைவிரல் நகங்கள் வேகமாக வளர்கின்றன.
- ஒரு மனிதனுக்கு சரியாக தினமும் 40 முதல் 100 தலைமுடிகள் உதிர்ந்து விடுகின்றன.
- சிரிப்பது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. 6வயது வரை குழந்தைகள் ஒரு நாளைக்கு சராசரியாக 300 தடவைகள் சிரிக்கின்றன. 18வயதைக் கடந்தவர்கள் ஒரு நாளைக்கு 100 தடவை மட்டுமே சிரிக்கிறார்கள்.
- 60வயதாகும் போது நாக்கின் சுவை மொட்டுக்களின் பெரும்பகுதி அழிந்து போய் விடுகின்றன.
- கணினியில் சில மணி நேரங்கள் பணிபுரிந்து விட்டு பார்வையை சில நொடிகள் வெள்ளை நிறக் காகிதத்தில் செலுத்தினால் அந்தக் காகிதம் இளஞ்சிவப்பு நிறமாகத் தெரியும்.
- இருமலின் வேகம் மணிக்கு 100 கிலோ மீற்றர்.

# சொற்றொடர்களை ஆக்குவோம்

## கீழ்வரும் எழுத்துக்களைச் சரியாகச் சேர்த்து சொற்றொடர்களை ஆக்குவோம்

1. மி/து/ல்/நி/நி/ர்/ந்/ணி/து/து/ண/ந்/ல்/செ ஆகிய எழுத்துக்களில் மறந்துள்ள சொற்றொடரை எழுதுக.

-----------------------------------------------


2. மு/தெ/அ/அ/தி/க/தி/க/தி/க/ம்/ல்/யு/ரி/த்/கு/ழ/த்/ன் மறைந்துள்ள பழமொழியை எழுதுக.

-----------------------------------------------

3. த்/த/ம்/சு/ம்/த/சு/க/ரு/ம் பழமொழியை எழுதுக.

-----------------------------------------------





## புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்




# உயர வைக்கும் ஏணிப்படிகள்

அறிவுப் பூக்கள் மலர்ந்திடும் பூங்காவை
ஆக்கித் தருபவர் ஆசிரியர்

உயிர்ப்பைத் தந்தவர் பெற்றோர்
உணர்வை விதைப்பவர் ஆசிரியர்

எதிர்கால வளத்துக்கு எரு
என்றைக்கும் அதன் (அவர்) பெயர் குரு

கல்வித் தாகம் தணித்திடும்
ஊருணி நீரே ஆசிரியர்

எண்ணும் எழுத்தும் இரு விழிகள்
விழியின் பார்வை குரு மொழிகள்

அறிவெனும் மலையில் இளைக்காது ஏற
அதி சக்தியாய் ஒளிர்பவர் ஆசிரியர்

அள்ள அள்ள ஊறிடும் கேணி
ஆசிரியர்தான் உலக அச்சாணி

எழுத்தறிவிப்பவன் சமுதாய ஏணி
எவரையும் கரை சேர்க்கின்ற தோணி

# அவன் தான் மனிதன்

- தவிர்க்க முடியாததை துணிச்சலோடு ஏற்றுக் கொள்வதோடு அதை விருப்பத்துடன் பொறுத்துக் கொள்கிறவன்தான் மனிதன்.
- போதுமென்ற மனம் உனக்கு இல்லாது விட்டால் உலகம் முழுவதும் உனது வசமாக இருந்தாலும் துன்பப்படுவாய்.
- இலட்சிய மனிதன் பிறருக்கு நன்மை செய்தில் மகிழ்ச்சி அடைகிறான். பிறர் தனக்கு உதவுவதைப் பார்த்து நாணுகிறான்.
- அரசனாக இருந்தாலும் உழவனாக இருந்தாலும் யார் தன்னுடைய இல்லத்தில் அமைதியையும் ஆனந்தத்தையும் காண்கிறானோ அவனே மிகவும் மகிழ்ச்சியானவன்.



# கங்காரு - எனக்குத் தெரியாது



வெள்ளைக்காரர் ஒருவர் ஆஸ்திரேலியப் பழங்குடியினன் ஒருவனை சந்தித்தார். அவனிடம் அங்கே வாழும் ஒரு விலங்கினைக் கண்டு பெயரை அறிய விரும்பி அதன் பெயரை விசாரித்தார். அதற்கு அவன் "எனக்குத் தெரியாது" எனத் தனது மொழியில் பதில் சொன்னான். அதைக் கேட்ட வெள்ளையர் அதுவே அதன் பெயர் என எண்ணி அதனைக் 'கங்காரு' என்று அழைத்தார். கங்காரு என்பதற்கு அந்தப் பழங்குடி மக்களின் மொழியில் 'எனக்குத் தெரியாது' என்பதே பொருளாகும்.


கங்காரு இனம் ஆஸ்திரேலியாவிலும் பசுபிக் கடற்தீவுகள் சிலவற்றிலும் காணப்படுகின்றன. இவற்றில் 30 வகையான இனங்கள் உள்ளன. ஆண் கங்காரு ஆறடி வரையான உயரமுடையது. பெண் கங்காருகள் நான்கு அடி முதல் ஐந்து அடி வரையான உயரமுடையவை. இவற்றின் முன்னங்கால்கள் குறுகியும் பின்னங்கால்கள் நீண்டும் காணப்படுகின்றன. இவற்றுக்கு நீண்ட வாலும் உண்டு. இவை10முதல் 20 வரையான தூரத்தைத் தாவிப் பாய்ந்து கடந்து செல்லும் திறனுடையவை. பெண் கங்காருவின் வயிற்றின் அடியில் பாற்பை உண்டு.



# ஏன் பறதி...

அ.வேணி

வீதி விபத்தால் உயிரிழப்புக்கள் வியப்போடு பார்க்கப்பட்ட காலம் மாறி, அவை மிகச் சாதாரண சம்பவங்களாக, பத்தோடு பதினொன்றாகக் கருதிக் கடந்து விட்டுப் போகும் நிலைக்கு நாம் வந்துள்ளோம். இந்தத் தசாப்தத்தில் வெளிவரும் பத்திரிகைகளில், வீதி விபத்தால் உயிரிழப்பு போன்ற செய்திகள் வராத நாளொன்றைக் குறிப்பிட்டுக் கூட முடியாது. அந்தளவுக்கு சாதாரண சம்பவங்களாக அவை அமைந்து விட்டன.



[illegible] வீதி விபத்துக்கள் இலங்கை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த உலகமுமே எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. அதிலும் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியன ஆகப்பெரும் இழப்புக்களைச் சந்திக்கின்றன. இந்தியாவில் ஒவ்வொரு 5 நிமிடத்துக்கும் ஒருவர் வீதி விபத்தால் இறக்கிறார். அமெரிக்காவில் ஒவ்வொரு மூன்று நிமிடத்துக்கும் ஒருவர் வீதி விபத்தால் உயிரிழந்கிறார். 2040ஆம் ஆண்டில் இந்தியா அமெரிக்காவைப் பின்தள்ளும் என்கிறது இந்திய நிறுவனத்தின் ஆய்வொன்று. ஒட்டுமொத்த உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு ஐந்து செக்கன்களுக்கும் ஒருவர் வீதிவிபத்தில் தனது இன்னுயிரை பறிகொடுக்கிறார். எனின் நீங்கள் இந்தக் கட்டுரையை முழுமையாக வாசித்து முடிப்பதுக்குள் குறைந்தது 50 பேர் வீதியில் விதியை முடித்துக் கொண்டிருப்பர். குறைந்தது 80 பேர் அங்கவீனர்களாக ஆகியிருப்பார்கள்.

### இலங்கைத் தீவிலும் இழப்புக்கள் அதிகம்

உலக அளவில் வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்கள் தலைசுற்ற வைக்கின்றன என்றால், உலக வரைபடத்தில் சிறு துரும்பாக உள்ள இலங்கையும் தனது நிலப்பரப்பு மற்றும் சனத்தொகைக்கு ஏற்ப விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்பை உலக நாடுகளுக்கு இணையாகவே பேணி வருவது கவலைக்குரியதொன்று. இலங்கையில், கடந்த வருடம் மட்டும் சுமார் 3 ஆயிரம் பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். இந்தத் தொகையை பகுப்பாய்வுக்கு உட்படுத்தினால் மாதத்துக்கு சுமார் 245, நாளுக்கு சுமார் 8 என்றவாறாக அது அமையும்.

### போர் போதாதா?

கடந்த 30 வருடகாலமாக போர் சூழ்ந்திருந்து பொருளாதார ரீதியில் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளது இந்த நாடு. பொருளாதாரத்தை மீண்டும் கண்டமைக்க இந்தியா, சீனா போன்ற ஆசிய ஜாம்பவான்களுக்கு எமது நாட்டின் ஒவ்வொரு பகுதியாக குத்தகைக்கு விடப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் போர் போதாதென்று விபத்துக்களை நாம் ஏன் தேடிப்போக வேண்டும். விபத்தில் உயிரிழக்கும் பெரும்பான்மையினர் இளைஞர்களாகவே உள்ளனர். இளைஞர்களுக்கு 'உழைக்கும் வர்க்கத்தினர்' என்று முக்கிய அடையாளத்தைக் கொடுத்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை. ஒரு குடும்பத்தின், நிறுவனத்தின், சமூகத்தின், நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் பெரும்பாலும் இளைஞர்களைச் சுற்றியதாகவே அமைவுறுகின்றன. இதனால்தான் ஐக்கிய நாடுகள் சபை 'உழைக்கும் வர்க்கத்தினர்' என்ற அடையாளத்தை இளைஞர்களுக்கு வழங்கியுள்ளது. ஒவ்வொரு விபத்தின் பின்னாலும் மேற்குறித்த அத்தனை கட்டமைப்புக்களும் தவிடு பொடியாகின்றன என்பதை அனைவரும் புரிந்துகொள்வோம்.

> உலக அளவில் வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்கள் தலைசுற்ற வைக்கின்றன என்றால், உலக வரைபடத்தில் சிறு துரும்பாக உள்ள இலங்கையும் தனது நிலப்பரப்பு மற்றும் சனத் தொகைக்கு ஏற்ப விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்பை உலக நாடுகளுக்கு இணையாகவே பேணி வருவது கவலைக்குரியதொன்று.

### மேலும் அதிகரித்துள்ளது

கடந்த வருடம் நடைபெற்றுள்ள வீதி விபத்துக்களை யும், அதன் விளைவாக ஏற்பட்ட உயிரிழப்புக்களையும், அது தொடர்பான புள்ளிவிவரங்களையும் பார்த்து திகைத்துப்போயுள்ள எமக்கு இந்த வருடத்தில் வீதி விபத்துக்களால் ஏற்பட்ட, ஏற்படப் போகின்ற உயிரிழப்புக்கள் தொடர்பிலான புள்ளிவிவரங் கள் மேலும் அதிர்ச்சியை அள்ளிக்கொடுக்க அதிக வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. இது தொடர்பான சமிக்ஞைகளை இலங்கை போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளிப்படுத்தியுள்ளார். அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் 'வீதி விபத்துக் கள் தொடர்ந்தும் அதிகரித்தே உள்ளன. மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் போன்றனவே அதிகம் விபத்துக் குள்ளாகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் முச்சக்கர வண்டிகளிலேயே அதிகளவான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன' என்று அவர் தெரிவித்தார். இவரின் இந்தக் கருத்து இந்த வருடமும் விபத்துக்கள் தாராள அளவில் ஏற்பட்டுள்ளன என்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.

### வேகம் என்னும் வெறி

கடந்த சில வருடங்களாகவே இயந்திரவலு அதிகமுள்ள மோட்டார் சைக்கிள்கள் எமது இளைஞர்கள் விழுந்துள்ள மிகப்பெரும் மாஜையாக, பொறியாக உள்ளது. அதின நவீன மோட்டார் சைக்கிள்களை வைத்திருப்பதில் தவறில்லை. அதை விரைவாக இயக்குதலும் தவறில்லை. ஆனால் அவ்வாறு அதிவேகம் பின்பற்றப்பட வேண்டிய இடத்தில்தான் அது பிற்பற்றப்படுகிறதா என்பதை எமது இளைஞர்கள் ஆய்ந்தறிந்து பார்த்தலும் உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் காலத்தின் கட்டாயம். அதி நவீன மோட்டார் சைக்கிள் என்ற எண்ணம் ஒருவனிடத்தில் உதிக்கின்ற போது, அதற்கு செயல்வடிவம் கொடுக்க 'லீசிங்' நிறுவனங்கள் தயாராகவுள்ளன. இன்று யாழ். குடாநாட்டில் எங்கு பார்த்தாலும் நவீனரக மோட்டார் சைக்கிள்கள் நிரம்பி வழிவதற்குக் காரணம் அதன் பின்னணியில் இருக்கும் இலகுக் கொள்வனவே.

இயந்திரவலு மிக்க மோட்டார் சைக்கிள்களுக்கான விளம்பரப்படுத்தல்கள்கூட வேகத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

தொலைக்காட்சியாக இருக்கட்டும், சமூக வலைத்தளங்களாக இருக்கட்டும் அல்லது மோட்டார் சைக்கிள் காட்சி அறைகளாக இருக்கட்டும் நவீனரக மோட்டார் சைக்கிள்களின் விளம்பரப்படுத்தல்களை உற்றுநோக்கினால் அவை வேகத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பது அப்பட்டமாகத் தெரியும். மோட்டார் சைக்கிள் சாகசங்கள் மூலம் இளைஞர்கள் கொள்வனவுக்குத் தூண்டப்படுகின்றனர். இத்தகைய பின்னணியில் மேற்கொள்ளப்படும் இந்தக் கொள்வனவு, விபத்து என்ற பெயரில் இளைஞர்கள் தமது உயிரைத் தாமே மாய்த்துக் கொள்தலுக்கு வழிசமைத்து விடுகிறது.

### விதிமுறையை மீறுவதால் ஏற்படும் விபத்துக்கள் கொலைக் குற்றங்களே

விபத்தில் ஏற்படும் உயிரிழப்புக்கள் அனைத்திலும் வீதி ஒழுங்கை மீறுபவர் மட்டுமே உயிரிழந்து விடுவதில்லை. முதியவர்கள், சிறுவர்கள் என்று எண்ணற்ற அப்பாவிகளும் தமது இன்னுயிரைப் பறிகொடுக்கின்றனர். இத்தகைய விபத்துக்கள் அனைத்தும் கொலைக் குற்றங்களாகக் கருதப்பட வேண்டும். அவ்வாறு கொலைக் குற்றங்களாகக் கருதப்பட்டு வழங்கப்படும் கடும் தண்டனைகளே குற்றங்களை ஓரளவாவது கட்டுப்படுத்த சிறு வாய்ப்பையேனும் வழங்கும்.

### நிதானம் அவதானம்

உலகில் பிறப்புக்கு ஏற்ப இறப்பும் இருத்தல் அவசியம். அப்போதுதான் உலகில் உயிர்ச்சமநிலை நிலை பெறும். உயிர்ச் சமநிலையைப் பேணக்கூடிய வகையில், மூப்பால் வரும் இறப்புக்களும், இயற்கை இடர்களான நிலநடுக்கம், சுனாமி, மண்சரிவு, காட்டுத்தீ, எரிமலை வெடிப்பு, புயல், சூறாவளி ஆகியவற்றால் வரும் இறப்புக்களும் இருந்தால் போதும். அதி வேகத்தால் வரும் இறப்புக்களைத் தவிர்ப்போம், மூப்பின் மூலம் எமது வாழ்க்கையை முடித்துக் கொள்வோம். நிதானம் அவதானம்.



# விரதம் இருப்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை..!



- விரதங்கள் எல்லாவற்றிற்கும் கூடுதலான விதிமுறைகள் பொதுவானதாகவே இருக்கும். விரதத்துக்கு முதல் நாளன்றே வீட்டினைக் கழுவி சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளித்தல் அவசியம். விரத நாளன்று அதிகாலையில் துயிலெழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடை களை அணிந்து, காலையும் மாலையும் வீட்டின் சுவாமி அறையில் விளக்கேற்றி, வீபூதி பூசி, தேவராங்கள் பாடுதல் வேண்டும் அத்துடன் கோயில் வழிபாடு செய்தல் மிகவும் நன்று.

- ஒவ்வொருவிரதத்திற்கும்வித்தியாசமான உணவு முறைக் கட்டுப்பாடுகள் உள்ளன. அதற்கு ஏற்றபடி உணவினை உட்கொள்ளுதல் நன்று. பாரணை நாளன்று உரிய நேரத்தில் சமைத்துச் சாப்பிடுதல் வேண்டும்.

- நோயாளர்களும், அசௌகரியமுடையோரும், பாலகர்களும், மாதவிலக்கான பெண்களும் விரதம் இருப்பதற்கு தகுதி இல்லாதவர்கள். பெண்கள் மாத விலக்காகி ஏழு தினங்கள் ஆன பின்பே விரதம் மேற் கொள்ளலாம்.

- மேலும் குழந்தை பிறந்து நாற்பத்து எட்டு தினங்களுக்குப் பிறகே குழந்தை பெற்ற பெண்கள் விரதம் கடைப்பிடிக்கலாம். குடும்ப உறுப்பினர் எவரேனும் இறந்தால், அவர்கள் இறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகே குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்கள் விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- விரதங்கள் இருப்பவர்கள் ஆணாக இருந்தால் முதலில் குடும்பத்தாரின் அனுமதி பெற்றே விரதம் இருக்க வேண்டும். கன்னிப் பெண்களாயின் பெற்றோரின் அனுமதியுடனும், மணமான பெண்கள் கணவனின் தாயாரான மாமியாரின் அனுமதி பெற்ற பின்னும் விரதம் இருக்க வேண்டும். பிறருக்கு உடன்பாடு இல்லாத சூழ்நிலையில் இருக்கும் விரதங்கள் முழுப்பலனைப் பெறமுடியாது.

- விரதம் இருப்பவர்கள் பிறர் மீது கோபப்படுதல், பிறரைப்பற்றி தவறாகப் பேசுதல், பிறர் மனம் புண்படும்படி கேலி செய்தல், பிறரிடம் பேசாதிருத்தல், அதிகமாகப்பேசுதல்ஆகியஎதுவுமேசெய்யக்கூடாது.

- விரதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு அடிக்கடி நீராகாரம் சாப்பிடக்கூடாது. ஓய்வு தேவை என்று பகலில் படுத்துத் தூங்கக்கூடாது. நாம் விழித்திருந்து இறைவழிபாட்டில் எமது சிந்தனையைச் செலுத்த வேண்டும். விரதம் இருப்போர் தாம்பத்திய உறவில் ஈடுபடுதல், தவறான உணர்ச்சிகளை உருவாக்கும் நிகழ்ச்சிகளை பார்த்தல், கேட்டல் கூடாது. விரதத்தின் போது அசைவ உணவுகளை சாப்பிடுதல், பிறருக்கு சமைத்துக் கொடுப்பது கூட தவறாகும். வெற்றிலை பாக்கு போடுதல், புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாடுதல் ஆகியவையும் கூடாது.

## வரலாற்றில் இன்றைய தினம் 09.10.2017



1967 - மாக்சிசப் புரட்சியாளர் சேகுவேரா, புரட்சியை ஏற்படுத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் சாவுத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

1760 - ஜேன்மனியத் தலைநகர் பேர்லினில்ரஷ்யப்படைகள்நிலைகொண்டன.

1790 - வட அல்ஜீரியாவில் ஏற்பட்ட சுனாமியால் 3 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

1799 - 240 மனிதர்களுடனும் இரண்டு லட்சம் பவுண்ஸ் பெறுமதியான பொருள்களுடனும் எச்.எம்.எக்ஸ் லூற்றின் கப்பல் மூழ்கியது.

1824 - கொஸ்டாரிக்காவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது.

1900 - கூக் தீவுகள் பிரிட்டனின் ஆட்சிக்குள் வந்தன.

1962 - உகண்டா பொதுநலவாயத்தில் உள்ளடங்கியது.

1963 - வடகிழக்கு இத்தாலியில் வயோன்ற் அணையின் பின்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் 2 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

1981 - பிரான்சில் தூக்குத் தண்டனை இல்லாமல் செய்யப்பட்டது.

2007 - முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா யாழ்ப்பாண மாவட்ட நிலைமையை ஆராய்ந்தார்.

### நாளை

**10.10.2017**
செவ்வாய்க்கிழமை

**புரட்டாதி 24**

திதி: பஞ்சமி பி.ப. 03.20 வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.ப. 04.19 வரை
சுபநேரம்: 10.32–12.02 வரை
ராகுகாலம்: 03.02–04.32 வரை

## பத்தி எழுத்து

### மாணவர்கள் சவாரி மாடுகளல்ல!

மாணவர்களும், பெற்றோர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சிறியதொகையினர் வெட்டுப்புள்ளியை எட்டிப்பிடித்து பரீட்சையில் சித்தி பெற ஏனையவர்களால் தோல்வியைத்தழுவவே முடிந்துள்ளது.

இன்றைய நிலையில் பெற்றோர்களின் சுயமதிப்புக்குரிய ஒன்றாகவே புலமைப் பரிசில் பரீட்சை பார்க்கப்படுகின்றது. பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் துள்ளிக் குதிப்பதும் வெற்றி பெறாத மாணவர்களின் பெற்றோர்கள் துவண்டு கிடப்பதும் வாடிக்கையாகிவிட்டது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் ஒன்றுமறியாத இளம் பிஞ்சுகள் என்பதை நாம் மறந்து விடல் ஆகாது. வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவமும் இவர்களிடமில்லை. இவர்களின் விடயத்தில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். குறிப்பாக ஆசிரியர் சமூகம் இதில் அதிக அக்கறை காட்டுதல் வேண்டும். பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டுவிழா நடக்கும் போது சித்திபெறாத மாணவர்கள் ஓரமாக அமர்ந்து அதை அவதானிக்கின்றனர்.

தாம் அனைவராலும் புறக்கணிக்கப்பட்டு விட்டோம் என்றே இவர்கள் நினைக்கின்றனர். இவர்களது உள்ளங்கள் நொருங்கிப் போய் விடுகின்றன. இந்தப் பாதிப்பிலிருந்து இவர்கள் விடுபடுவதற்கு நீண்ட நாள்கள் தேவைப்படும். இதுமட்டுமல்லாது வீட்டிலும் இவர்கள் பல்வேறு நெருக்குதல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறாத மாணவர்கள் உயர்கல்வி கற்று பொறியியலாளர்களாகவும் மருத்துவர்களாகவும் பணிபுரிவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அத்துடன் மேற்படி பரீட்சையில் சித்திபெற்ற பலர் பல்கலைக்கழக அனுமதி காணக்கிடைக்காத நிலையில் உள்ளதையும் அறியக்கூடியதாக உள்ளது. ஆகவே இந்தப் பரீட்சையை மட்டும் வைத்துக் கொண்டு மாணவர்களின் கல்வியை அளவீடு செய்யக்கூடாது. வசதி குறைந்த பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நகர்ப் புறங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கிடைக்கின்ற வசதிகள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இவர்களுக்கும் வசதிகளை ஏற்படுத்திவிட்டுப்பரீட்சை முடிவுகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது தான் நியாயமானது.

மாணவர்களின் கல்வியை அளவீடு செய்வதற்குப் பரீட்சைகள் அவசியமானவைதான். ஆனால் சவாரி மாடுகளைப் போன்று மாணவர்கள் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

நாமெல்லாம் நல்லாவே இருக்கக் கூடாதெண்டு வெள்ளைக்காரன் கண்டுபிடிச்ச நவீன ஆயுதம்தான்




பேஸ்புக்...

உழைக்கத் தெரிஞ்சவன் வாழ்றான்....



உழைக்கிற மாதிரி நடிக்கத் தெரிஞ்சவன் இன்னும் நல்லா வாழ்றான்...

ஏண்டா சுகர் டப்பால மசாலான்னு எழுதி வைச்ச




எறும்ப ஏமாத்த அண்ணே!

இறுதியில் மிஞ்சுவது வருடங்களின் எண்ணிக்கை அல்ல, அதில் வாழ்ந்த வாழ்க்கை மட்டுமே!



# ‘நெஞ்சம் மறப்பதில்லை’ அடுத்த மாதம் ‘ரிலீஸ்’



செல்வராகவன் இயக்கத்தில் எஸ்.ஜே. சூர்யா, நந்திதா, ரெஜினா நடிப்பில் உருவாகியுள்ள நெஞ்சம் மறப்பதில்லை படம் அடுத்த மாதம் 3ஆம் திகதி திரைக்குவர வாய்ப்புள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

செல்வராகவன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் இந்தப்படம், திரைக்கு வெளியாகும் திகதிகள் குறிக்கப்பட்டு பின்னர் தொடர்ந்து பிற்போடப்பட்டு வந்தது. இந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யாவின் மனைவியாக நந்திதா ஸ்வேதா நடித்திருக்கிறார். திகில் படமாக உருவாகியுள்ள இந்தப் படத்தில் ரெஜினா பேயாக நடித்திருக்கிறார்.

யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்திருக்கும் ‘நெஞ்சம் மறப்பதில்லை’ படத்துக்கு, அரவிந்த கிருஷ்ணா ஒளிப்பதிவுப் பணிகளை மேற்கொண்டுள்ளார். (ம)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் வந்து விலகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணிகளை நிறைவேற்றுவது நல்லது, இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்;** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் உண்டாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** சிலர் சுயநலத்துடன் உங்களை அணுகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** உங்கள் பேச்சில் வசீகரம் உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும்.

**துலாம்:** பேச்சு, செயலில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனடியாகச் சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும். வருமானம் உயரும்.

**தனுசு:** சவால்களை ஏற்று தடைகளை தகர்த்தெறிய முயல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** மனதில் அதிருப்தி உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மீனம்:** புத்தி சாதுர்யத்தால் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பெண்களால் குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும்.

உணவு
என்பது மருந்து,
ஆடை
என்பது மானம்,
பணம்
என்பது தேவை,
ஆங்கிலம்
என்பது மொழி,
தமிழ்
என்பது உயிர்,
அம்மா
என்பது பாசம்,
அப்பா
என்பது ஆசான்,
ஆனந்தம்
என்பது ஆயுள்,
சினம்
என்பது நோய்,
துன்பம்
என்பது பரீட்சை,
தோல்வி
என்பது பாடம்,
வெற்றி
என்பது தற்காலிகம்,
நட்பு
என்பது இளமை,
குடும்பம்
என்பது பற்று,
கர்மா
என்பது தொடரும்,
எண்ணம்
என்பது வாழ்க்கை,
உலகம்
என்பது மாயை,
நான்
என்பது அறியாமை

இதை உணர்ந்து
கொண்டால்
மனிதன்



**கண்டெக்டர் :** டிக்கெட் எடு..

**பயணி:** பின்னால எடுப்பாங்க...

**கண்டெக்டர் :** பின்னால யாரும் எடுக்கல...

**பயணி:** அப்ப முன்னாடி எடுப்பாங்க.

**கண்டெக்டர் :** முன்னாடியும் யாரும் எடுக்கல.

**பயணி:** அப்போ நான் மட்டும் டிக்கெட் எடுக்க இளிச்சவாயனா? போய்யா...

சாதி மத பேதமின்றி அனைவரும் தமது பெற்றோர்களை கூட்டிச்செல்லுமிடம் முதியோர் இல்லமே! அவர்கள் அறிவதில்லை தமது பிள்ளைகளும் தம்மைக் கவனிக்கின்றனர் என...



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9 | | | | 5 |
| | 5 | | 4 | | | | 3 | |
| | | 2 | 5 | 7 | | | | 8 |
| 1 | | | | | 9 | 2 | | |
| | | 6 | | | | 1 | | |
| | | 4 | 6 | | | | | 9 |
| 7 | | | | 6 | 5 | 4 | | |
| | 3 | | | | 4 | | 9 | |
| 6 | 4 | | | 8 | | | | |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 5 | 6 | 8 | 9 | 7 | 4 | 3 |
| 7 | 4 | 6 | 3 | 1 | 5 | 9 | 2 | 8 |
| 9 | 8 | 3 | 7 | 4 | 2 | 6 | 1 | 5 |
| 6 | 9 | 8 | 1 | 2 | 7 | 3 | 5 | 4 |
| 3 | 5 | 7 | 8 | 6 | 4 | 2 | 9 | 1 |
| 2 | 1 | 4 | 5 | 9 | 3 | 8 | 6 | 7 |
| 4 | 3 | 9 | 2 | 5 | 8 | 1 | 7 | 6 |
| 8 | 6 | 2 | 4 | 7 | 1 | 5 | 3 | 9 |
| 5 | 7 | 1 | 9 | 3 | 6 | 4 | 8 | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

# ஈராக்கில் பரவலாக கொண்டாட்டங்கள்

பக்தாத், ஒக். 9

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின்பிடியில் இருந்து நூறு சதவீதம் விடுபட்டுள்ளதை அடுத்து ஈராக் எங்கும் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

ஈராக், சிரியநாடுகளின்சிலநகர்களைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்ததுஐ.எஸ்.ஐ.எஸ்அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்த ஈராக்கின் முக்கிய நகரங்கள் இந்த வருடத்தின் மத்திய பகுதியில் மீட்கப்பட்டிருந்தன. ஈராக்கின் ஹவியா நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருர் தது. இந்த நகரை மீட்கும் போரை கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் கடும் முனைப்புடன் ஆரம்பித்தது ஈராக்.

இந்தநிலையில்ஹவியாநேற்று முன்தினம் முற்றுமுழுது மாக ஈராக் படையின் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஹவியா மீட்கப்பட்டதை அடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது.

இந்த வெற்றியை அடுத்து, பக்தாத், மோசூல் உள்ளிட்ட பல நகரங்களில் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈராக்கிய மக்கள் ஈடுபட்டுவருகின்றனர். (ம)



# அணுவாயுதங்களின் உக்கிரத்தன்மையை உணர்ந்துகொள்ளவும்

## அமெரிக்கா, வடகொரியாவுக்கு 'ஐ கான்' அமைப்பு எச்சரிக்கை

ஜெனிவா, ஒக். 9

"அணு ஆயுதங்கள் சட்டவிரோதமானவை என்பதை உணர வேண்டும்" என்று அமைதிக்கான நோபல் பரிசு வென்ற 'ஐகான்' அமைப்புத் தலைவர், அமெரிக்க மற்றும்வடகொரிய அதிபர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

நடப்பு வருடத்துக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு 'ஐ கான்' அமைப்பு தெரிவாகியுள்ளது.

அணு ஆயுதங்களை ஒழிப்பதற்காக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கடந்த 2007ஆம் ஆண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.




தற்போது உலகில் உள்ள 101 நாடுகளை சேர்ந்த 468 அமைப்புகள் இணைந்து சுவிட்சர்லாந்தின் தலைநகரான ஜெனிவாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்த 'ஐ கான்' அமைப்புடன் உலக நாடுகளில் அணு ஆயுதங்களை ஒழிக்கவும், அணு ஆயுதங்களால் ஏற்படும் மிகப்பெரிய பேரழிவைச் சுட்டிக் காட்டியும் விழிப்புணர்வுப் பரப்புரைகளில் ஈடுபட்டுவருகிறது.

இந்த நிலையில், இந்த அமைப்பின் தலைவர் பிட்ரைஸ், அமெரிக்கா மற்றும் வடகொரியாவின் சமீபகால நகர்வுகளைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். "அணு ஆயுதங்கள் சட்டவிரோதமானவை. அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம் என மிரட்டுவதும் சட்டவிரோதமானது. அணு ஆயுதங்களைச் சொந்தமாக வைத்துக்கொள்வதும், புதிதாக உருவாக்குவதும் சட்டவிரோதமானவைதான். அவற்றை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும்", என அவர்மேலும்தெரிவித்தார். (ம)

பல்வேறு போர்களில் சிக்கி

# 8 ஆயிரம் சிறுவர்கள் கடந்த வருடம் சாவு



நியூயோர்க், ஒக். 9

"உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வந்த போர்களில் சிக்கி கடந்த வருடம் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறார்கள் உயிரிழந்தனர்" என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் குத்தேரஸ் தெரிவித்தார். உலகின் பல்வேறு நாடுகளில் உள்நாட்டுப் போர் நடைபெற்றுவரும் நிலையில், இந்தப் போர்களால் உயிரிழந்த சிறுவர்கள் தொடர்பான தகவல்களை குத்தேரஸ் அண்மையில் வெளியிட்டுள்ளார். அதில், கடந்த வருடம் மட்டும் சுமார் 8 ஆயிரம் சிறுவர்கள் போர்களால் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஆப்கானிஸ்தானில் மட்டும் சுமார் 3 ஆயிரத்து 500 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானின் வரலாற்றில், ஒரு வருடத்தில் அதிக சிறுவர்கள் உயிரிழந்த ஆண்டாக கடந்த வருடமே பதிவாகியுள்ளது. (ம)



மியன்மாரின் இனச்சுத்திகரிப்பில் இருந்து தப்பித்து, பங்களாதேஷின் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ளார் குல்தாஸ் என்ற பெண். தானும், தனது கணவரும், தமது ஏழு குழந்தைகளும் மியன்மார் இராணுவத்தால் கடுமையாகத் தாக்கப்பட்டோம் என்றும், தனது கணவர் மியன்மார் இராணுவத்தால் எரியூட்டப்பட்டுக் கொல்லப்பட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார் குல்தாஸ். (ம)

## ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் அதிரடிக் கைது

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாகமீட்கப்பட்டுள்ளநிலையில், சுமார் 200 ஆயுததாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள்செய்திவெளியிட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த இறுதி ஈராக்கிய நகரமான ஹவியா கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டது. மக்களுடன் மக்களாக ஆயுததாரிகள் கலக்கக் கூடும் என்பதால் தேடுதல் பணிகளும் கண்காணிப்புப் பணிகளும்தீவிரமாக்கப்பட்டுள்ளன. சுமார் 200 ஆயுததாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# றொஹிங்யர்களுக்கு தொடர்ந்து உதவிசெய்வோம்

## பங்களாதேஷின் தலைமை அமைச்சர் அறிவிப்பு

டாக்கா, ஒக். 9

"மியன்மாரில் இருந்துதப்பித்து, பங்களாதேஷுக்கு வரும் றொஹிங்யர்களை தொடர்ந்தும் பராமரிப்பதற்கு பங்களாதேஷ் தயாராகவே உள்ளது" என்று தெரிவித்தார் பங்களாதேஷின்தலைமைஅமைச்சர்ஷேக்ஹசீனா.

பௌத்த பேரினவாத நாடான மியன்மார் சிறுபான்மை மக்களான றொஹிங்யர்களை இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று காலாகாலமாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த மாதம் இறுதிப் பகுதியில் இருந்து மியன்மார் அரசின் இந்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால்




லட்சக் கணக்கான றொஹிங்கர்கள் அயல் நாடான பங்களாதேஷுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். இதுவரை சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் றொஹிங்யர்கள் பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ள நிலையில், றொஹிங் யர்களைத் தாம் தொடர்ந்தும் ஆதரிக்கத் தயார் என்று பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

"றொஹிங்ய முஸ்லிம்களுக்கு தொடர்ந்து உதவ பங்களாதேஷ் அரசு தயாராக உள்ளது. அவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பும்வரை பன்னாட்டு நிறு வனங்களின் உதவியுடன் தற்காலிகமான முகாம்களை அமைக்கும் திட்டத்தை தொடர்ந்து வருகிறோம். 10 லட்சத்துக்கும் அதிகமான றொஹிங்ய முஸ்லிம்கள் மியான்மரில் 'நிறவெறி' காலக்கட்டத்தில் வாழ்வது போல் வாழ்ந்து வருகின்றனர்" என்று ஹசீனா மேலும்தெரிவித்தார். (ம)

# அறிவாற்றல்

## மரபணுக்கள் வழியான பொதுப் பண்புச் சூழ்நிலையின் கூறு



தமிழ்நம்பி

உலகின் எல்லாப் பகுதிகளிலும் அறிவாற்றல் உட்பட பல்வேறு பண்புகளும் ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ அல்லது இனக்குழுவுக்கோ மரபார்ந்தவை, தலைமுறைகளாக வருபவை என்ற கருத்து பொதுவாக இருந்தது. பின்னர் சமூக பண்பாட்டு வளர்ச்சியின் நிலையில் அறிவாற்றல் என்பது ஒரு மரபுப் பண்போ அல்லது பாரம்பரியமானதோ அல்ல அதனை ஒரு பொதுப் பண்புச் சூழ்நிலையும். வாழ்நிலையுமே தீர்மானிக்கிறது என்றனர். தகுந்த சூழ்நிலை அமைந்தால் எல்லோராலும் அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டனர். வாதிட்டனர் எனலாம்.

**மரபணு**

மரபணுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு உயிரியின் உடற்கூற்றியல் (Anatomy) மற்றும் உயிர்ச்செயற்பாட்டியல் (Physiology) ரீதியான எல்லாப் பண்புகளையும் மரபணுக்களே தீர்மானிக்கின்றன. தவிர அடுத்த தலைமுறைக்கும் கடத்துகின்றன என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டது. அதுவரை வெளிப்படுத்தப்பட்ட உயிரியல் பண்புகளையே (Phenotype) ஆராய்ந்து கொண்டிருந்த உயிர் அறிவியல் அப்பண்புகளைக் குறிக்கும் மூலமாகிய மரபணுத்தொகையின் (Genotype) கட்டமைப்பை ஆராயும் மூலக்கூற்று உயிரியல் தொழில்நுட்பங்களின் வழியாக புதுப்பாய்ச்சல் பெற்றது. மரபுப் பண்புகளையும், அதன் மூலமாகிய மரபணுக்களின் பங்களிப்பையும் பற்றிய ஆய்வு எல்லாத் துறைகளிலும் குறிப்பாக பரிணாமவியல், மரபியல், உயிர்வேதியல், நரம்பியல், உளவியல், நோய்க்கூற்றியல், நடத்தை மரபியல் என வேகம் பெற்றது.

அறிவாற்றலை மரபியல், நரம்பியல் மற்றும் நடத்தை மரபியல் (Behavioural genetics) ஆகிய துறைகளின் வாயிலாக உயிரியல் ரீதியாக அணுகலாம். இந்தத் துறைகள் அறிவாற்றலைப் பற்றிப் பலவாறாகச் சொல்கின்றன.


**அறிவாற்றல்**

அறிவாற்றல் (Intelligence) என்பது அறிதல் திறன் (Cognition), சிந்தித்தல், சமயோசிதம், கற்றல், வெளிப்படுத்துதல், தொடர்புகொள்ளல், திட்டமிடுதல், முடிவெடுத்தல் போன்ற சிந்தனைச் செயற்பாடுகளை ஒட்டுமொத்தமாகக் குறிப்பது.

உளவியலில் பொதுவான அறிவாற்றல், பாய்ம மற்றும் படிகமாக்கப்பட்ட அறிவாற்றல் (Fluid and Crystallized Intelligence) என இரண்டாக வகுக்கப்படுகிறது. இதில் பாய்ம அறிவாற்றல் என்பது பெற்றுக்கொண்ட அறிவாக அல்லாது புதிய சூழ்நிலைக்கும், சிக்கலுக்கும் ஏற்றவாறு தர்க்கபூர்வமாக சிந்தித்து செயற்படுதலாகும். கணித, அறிவியல், தொழில்நுட்பச் சிக்கல்களை தீர்ப்பதில் திறன் பெற இது மிகவும் முக்கியம். படிகமாக்கப்பட்ட அறிவாற்றல் என்பது திறமையையும், அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தும் ஆற்றல் எனப் பொருள்படும். ஆழ்ந்து அகன்ற பொது அறிவு, பரந்த சொல்வங்கி (Vocabulary), தகவல்களை நினைவிலிருந்து மீட்டுப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இதன் பங்கு அதிகமாகக் காணப்படும்.

> உளவியலில் பொதுவான அறிவாற்றல், பாய்ம மற்றும் படிகமாக்கப்பட்ட அறிவாற்றல் (Fluid and Crystallized Intelligence) என இரண்டாக வகுக்கப்படுகிறது. இதில் பாய்ம அறிவாற்றல் என்பது பெற்றுக்கொண்ட அறிவாக அல்லாது புதிய சூழ்நிலைக்கும், சிக்கலுக்கும் ஏற்றவாறு தர்க்கபூர்வமாகச் சிந்தித்து செயற்படுதலாகும். கணித, அறிவியல், தொழில்நுட்பச் சிக்கல்களை தீர்ப்பதில் திறன்பெற இது மிகவும் முக்கியம். படிகமாக்கப்பட்ட அறிவாற்றல் என்பது திறமையையும், அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தும் ஆற்றல் எனப் பொருள்படும்.

நரம்பு மண்டலத்தின் தலைமையகமான மூளை என்னும் உயிரியல் உறுப்புத்தான் அறிவாற்றலின் மையம். தத்துவஞானி 'பிளாடோ' மூளையே அறிவாற்றலின் மையம் என்று ஊகித்தார். ஆனால் அவரது மாணவனான அரிஸ்டோட்டில் இதயமே அதன் மையம் என்று கருதினார். 'காலன்' (Galen) என்கிற கிரேக்க ஹிப்போகிராட்டெஸ் வழி மருத்துவர் தான் சண்டையில் அடிபட்டு மூளை சிதைந்த போர்வீரர்களின் சிந்தனைப் புலம் பாதிக்கப்படுவதை கவனித்தார். அதன்வழி அறிவுச் செயற்பாடுகளில் மூளையின் முக்கியத்துவத்தை முதலில் உறுதி செய்தார்.




**பரிணாமப் பாதை**

பரிணாமத்தின் மிக நீண்ட பாதையில் மனிதனுக்கும் சிம்பன்ஸிகளுக்கும் பொது மூதாதையான ஒரு பேரினக் குரங்கிலிருந்து மனிதன் தன் நெருங்கிய இனமான சிம்பன்ஸிகளிடம் விடைபெற்றுப் பிரிந்து, தனியாகத் தன் பயணத்தைத் தொடங்கி அண்ணளவாக 5 தொடக்கம் 7 மில்லியன் ஆண்டுகள் ஆகிறது. இந்த நீண்ட பரிணாமப் பயணத்தில் இதுவரை மனிதனின் மரபணுத் தொடர் (DNA sequence) சிம்பன்ஸிகளிடமிருந்து சற்றேறக்குறைய அண்ணளவாக 1.5 வீதம் மட்டுமே வேறுபடுகிறது. மரபணு வேறுபாடு எப்படிக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதை வைத்து கருத்து வேறுபாடுகள் சிலவும் இது குறித்து முன்வைக்கப்படுகின்றன.

மரபணுத் தொடரில் 99 வீத ஒற்றுமை இருந்தாலும் எது மனிதனை மனிதனாகவும், குரங்கைக் குரங்காவும் வைத்திருக்கிறது என்ற கேள்விக்கு 2002 ஆம் ஆண்டு வெளிவந்த ஆய்வு முடிவு கூறிய பதில் மிக முக்கியமானது. மனித மூளையில் உள்ள மரபணுச் செயற்பாடு (Gene activity) தான் இத்தனைக்கும் மனிதனுக்கும், சிம்பன்ஸிக்கும் மூளையில் வெளிப்படும் மரபணுக்களில் (Gene expression) உள்ள வித்தியாசம் மற்ற உள்ளுடல் அங்கங்களிலும் அதாவது இதயத்திலோ, கல்லீரலிலோ, சிறுநீரகத்திலோ வெளிப்படும் மரபணுக்களை விடக் குறைவாகக் காணப்படுகிறது. ஆனால் இதுவே மனிதனின் அறிவாற்றல் சார்ந்த பரிணாமவளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் குறிப்பிடப்படுகின்றது.

**ஆர்.என்.ஏ படியாக்கல்**

மரபணுக்களின் பண்பு வெளிப்பாட்டில் 'ஆர்.என்.ஏ' படியாக்கல் (Transcription) என்ற இடைநிலை உள்ளது. இதைக் கட்டுப்படுத்தும் சில காரணிகள் ஆர்.என்.ஏ படியாக்கல் காரணிகள் (Transcription factors) என்று குறிக்கப்படும். இவற்றின் பங்கும் மனிதப் பரிணாம வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது என்று நிறுவப்பட்டுள்ளது. உதாரணமாக, 'ப்ரோடோகாதெரின்' (Protocadherin) என்கிற புரதத்தின் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தும் காரணியைச் சொல்லலாம். இந்த 'ப்ரோடோகாதெரின்' மூளை வளர்ச்சிக்கும், அதன் செயற்பாட்டிற்கும் மிகவும் அவசியமானது.

பெருமூளை அரைக்கோளங்களைச் (Cerebral hemisphere) சுற்றியுள்ள மடிப்புகள் நிறைந்த சாம்பல் நிறப் பொருள் (Grey matter) என்றழைக்கப்படும் புறணி (Cerebral cortex) ஏனைய பேரினக்குரங்குகளை விட மனிதனுக்கு மூன்று மடங்கு அளவில் பெரியதாகக் காணப்படுகிறது. இதனால் மூன்று மடங்கு நரம்பணுக்களும் (நியூரான்கள்) அதிகம் காணப்படும். மனிதனின் மொத்த உடலுக்குத் தேவைப்படும் ஆற்றலில் ஐந்தில் ஒரு பங்கு இப்பெரிய மூளையின் இயக்கத்திற்குத் தேவைப்படுகிறது. மூளையின் மிகுதியான ஆற்றல் தேவையை ஈடுகட்டும் நோக்கம் மறைமுகமாக மனிதனின் அறிவாற்றலை பெருக்க உதவியது. அதாவது அத்தகைய அதிக ஆற்றலைத் தரும் மாமிசத்தை வேட்டையாடவே ஆதிமனிதன் கற்களை செதுக்கி ஆயுதமாகப் பயன்படுத்த பரிணாமத்தால் உந்தப்பட்டான் என்னும் ஒரு 'வேட்டைக் கருதுகோளும்' (Hunting hypothesis) உண்டு.

**கருவளர்ச்சி**

இந்தச் சாம்பல்நிறப் பகுதிதான் சிந்தனை, விழிப்புணர்வு, மொழி, கற்றறிதல், பகுத்தறிதல் போன்ற மனிதனை மற்ற விலங்குகளிலிருந்து வேறுபடுத்தும் முக்கியப் பண்புகளை நிர்ணயிக்கிறது. இங்கே மரபணுக்களுக்கு என்ன முக்கியத்துவம் என்று நோக்கின் பதில் 'மிக முக்கியமான பங்கு மரபணுக்களுக்கு உண்டு' என்பதாக அமையும். உதாரணமாக HAR1F என்னும் ஒரு மரபணு மனிதக் கருவளர்ச்சியின் ஏழாவது வாரத்தில் மிக அதிகமாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்த மரபணு நேரடியாக எந்தப் புரதத்தையும் குறிப்பதில்லை. பதிலாக மூளைப் புறணியில் (Cortex) நியூரான் அடுக்குகளை உண்டாக்குவதிலும், மூளையின் வடிவமைப்பைக் கட்டமைப்பதிலும் பங்குபெறும் இதர புரதங்களுக்கான மரபணுக்களின் வெளிப்பாட்டை மேம்படுத்துகிறது.

மொத்தம் 49 மரபணுப் பகுதிகள் இவ்வாறு மனிதர்களில் சிம்பன்ஸிக்களை விட மிக வேகமாக பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று தான் மேற்கண்ட HAR1F. அதாவது மனிதர்களில் முடுக்கிவிடப்பட்ட பகுதி (Human Accelerated Region HAR) மரபணு எனக் குறிப்பிடுகின்றனர். மீதமுள்ள 48 பகுதிகளையும் அவற்றின் பண்புகளையும் கண்டறியும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

## காணி வீட்டுடன் விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் ஆறுகால்மடப் பகுதியில் ஒரு பரப்பு விஸ்திரண முள்ள காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 076 980 3935

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வரணி லயன்ஸ் கழகத்தின் அங்கத்துவப் பணிப்பாளரும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன காங்கேசன்துறை ஊழியரும் சிறந்த சமூக சேவையாளருமான தேசமானி, தேச கீர்த்தி, கீர்த்தி ஸ்ரீ, தேசபந்து, வாழ்நாள் சாதனையாளர், தேசஷக்தி, சமூகஜோதி

**லயன் பீதாம்பரம் ஜெயவிந்தன் [J.P]**

அகில இலங்கை சமாதான நீதிவான் அவர்கள் கடந்த 04.10.2017 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் [B.M.I.C.H] நடைபெற்ற "உலக சமாதானத்திற்கான தூதுவர் 2017" விருதினைப் பெற்றமைக்காக மனதாரப் பாராட்டி வாழ்த்துவ தோடு இவர் பணி தொடரவும் பல்லாண்டு காலம் நீடூழி வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: லயன்ஸ் கழகம், சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு திவச அழைப்பு

**நவரத்தினம் செல்வநாயகம்**



தோற்றம் 07.03.1958 மறைவு 20.09.2016

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இன்று (09.10.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. குடும்பத்தினர்.


**கோவிசெத சவிதா**

சீட்டிழுப்பு வாரம்: 199
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 08.10.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 104,565,936/-
E 20 46 52 66

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 39
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.10.08
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 60,860,930/-
வெற்றி இலக்கங்கள்
05 06 12 63 J

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 08.10.2017 | 2195 | ஊதா |

கன்னி
வெற்றி இலக்கங்கள் 03 15 49 56
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 22, 32, 092/=
10.10.2017ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## 100% புலமைப் பரிசில்

முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிநெறி!

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?
அல்லது
ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

Apply Now For Batch 2

தகைமை : க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளைப் பெற்றிருத்தல் [வயது எல்லை 23 வயதுக்குட்பட்டோர்]
பயிற்சி நிலையம் : யாழ்ப்பாணம்
பயிற்சிக் காலம் : 6 மாதங்கள் (நவம்பர் 2017 – ஏப்ரல் 2018)
விண்ணப்பிக்கும் முறை : www.uki.life/apply
விண்ணப்ப இறுதித்திகதி : 14 October 2017

உள்ளடக்கம்
Software Development | Business English
Business Management | Personal Coaching

UKi www.uki.life 0775694587 info@uki.life



**Galaxy Star**

வெற்றி வாரம் 201 திகதி 08.10.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 06 09 23 38
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 862, 820/-


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்





| நடராஜா கஜன் | | விஜயகுமார் சூலக்சன் | |
|---|---|---|---|
| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
| 24.01.1993 | 20.10.2016 | 08.03.1992 | 20.10.2016 |

கள்ளங்கபடமற்ற எங்கள் கண்மணிகளே
கஜன் மற்றும் சுலக்சனே!
காலம் ஓர் ஆண்டு கணப்பொழுதில் ஓடியதேன்?
எம் உள்ளக்கோயிலிலே உம்நினைவுகள் தானிருக்க
உங்கள் உடலைவிட்டு உயிரோ மாயமாய் மறைந்ததுவோ?
பாரினிலே எம்மைத் தலிக்கவிட்டு
கஜன், சுலக்சன் பல்கலையில் பட்டம்வெற்று
பேறறிஞர்களாக வருவீர்கள் என்று
நாம் கோட்டை கட்டினோம்
எல்லாம் கனவாகிப் போயிருக்க
இனி நாம் இவ்வுலகில்
எப்போது உம் இருவரையும் காண்போமோ?

பெற்றோர்.

## மரண அறிவித்தல்

திருமதி
**ஜோசப்பின் சூசைப்பிள்ளை**
(அன்னக்கிளி)



பாஷையூரைப்பிறப்பிடமாகவும்,இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோசப்பின் சூசைப்பிள்ளை(06.10.2017) அன்று பாஷையூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் சூசைப்பிள்ளை (அழகையா மாஸ்ரர்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான அருட்தந்தை L.B இராயப்பு அ.ம.தி, L.B பிலிப் மற்றும் திருமதி செபஸ்ரியம்மா பாலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி பிலோமினா பிலிப், அன்ரனி பாலதாஸ் (அண்ணாவியார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்திருமதிடினா ஆனந்தன் (ராஜினி), றொபேட், றொசாய்றோ (குணம்), ஜெயம், தனம், அருள் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜோக்கிம் இருதயானந்தன், அனஸ்ரி, Dr.சாந்தினி, ஜஸ்மின், றேணுகா, விஜி ஆகியோரின் அன்புமாமியும் அருட்தந்தை பாலதாஸ் பிறையன் அவர்களின் பெரியம்மாவும் அருட்சகோதரி பவுலா அன்ரனியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு எதிர்வரும் (11.10.2017)புதன்கிழமை பி.ப 3 .30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

795, பீச்றோட் பாஷையூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், குடும்பத்தினர்
077 780 2433

## கணினியில் அதிக நேரம் வேலை செய்பவரா?

இன்றைய கால ஓட்டத்தில், அலுவலகங்க ளில் கணினி முன்பு மணிக்கணக்கில் அமர்ந்து வேலை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் தேவையான உடல் உழைப்பு இல்லாமல் போகிறது.

அழுத்தம், முதுகு வலி, சமிபாட்டுப் பிரச்சினை கள் என பல இடை யூறுகள்ஏற்படுகின் றன. அவற்றைத் தீர்க்கும் வழி முறைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

காலையில் அலு வலகத்துக்குவந்து உங்கள் இடத்தில் அமர்ந்ததும், வேலையைத் தொடங்குவதற்கு முன் ஒரு நிமிடம் கண்களை மூடி அமர்ந்து மனதை அமைதிப் படுத்திக் கொள்ளுங்கள். அதன்பிறகுவேலை யைத் தொடங்கி னால் புத்துணர்வு கிடைக்கும். பதற றமும் குறையும்.

மணிக் கணக்கில் நாற்காலியில் அம ரும் போது முதுகு வலி ஏற்படுகிறது. இதனை தவிர்க்க முதுகைவளைத்து, கூன் போட்டு உட் காராமல், நன்கு நிமிர்ந்து நாற்கா லியில் முதுகு படும்படி அமர்ந்து கொள்ள வேண் டும். கால்களை தரையில் வைப்ப தைவிட, சற்று உயரமான ஒரு தொடுகை யைக் கொடுத்து வைத் துக் கொண்டால், முதுகுவலி ஏற்படு வதைத் தவிர்க்க லாம்.

பல மணி நேரம் தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்தி ருப்பதால் தசைப் பிடிப்பு ஏற்படும். எனவேதண்ணீர் குடிப்பது முகத் தைக் கழுவுவது, அருகில் சிறிது தூரம்நடந்துவிட்டு வருவது என்று ஒரு மணி நேரத் திற்கு ஒருமுறை உடலுக்கு ஏதா வது இயக்கம் கொடுங்கள். தின மும் உடற்பயிற்சி செய்யும் பழக் கத்தைக் கடைப் பிடியுங்கள்.

கணினியை உற் றுப் பார்த்துக் கொண்டிருப்ப தால் கண்களில் எரிச்சல் ஏற்படும். இதைத் தவிர்க்க சில விநாடிகள் கண்களை மூடி கொள்ளுங்கள். இதனால் கண்க ளுக்கு சில நொடி கள் அடர்ந்த இருட் டுக் கிடைக்கும். இது, அதிக ஒளியி னால் ஏற்படும் சோர்வை விலக் கும்.

# ஊடகவியலாளரைத் தாக்கிய ஏ.எஸ்.பிக்கு தண்டனை உறுதி

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 9
அம்பாந்தோட்டையில் சுதந்திர ஊடகவியலாளர் ஒருவரை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தாக்கிய சம்பவம் தொடர்பில் தார்மீகப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன். இது தொடர்பில் கடும் கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது அம்பாந்தோட்டை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துசார தளுவத்த, சுதந்திர ஊடகவியலாளர் சுசந்த பண்டார கருணாரட்னவை கன்னத்தில் அறைந்திருந்தார். இது பல்வேறு மட்டங்களில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பில் நேற்று வினவிய போதே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் சிறப்புக் குழுவொன்று இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றது. விசாரணை முடிவில் தாக்குதலை நடத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான செயற்பாடுகளை நான் பதவியில் இருக்கும்வரை அனுமதிக்க மாட்டேன். சீருடையணிந்த பொலிஸார் மக்களைப் பாதுகாக்க வேண்டும். தவறு யார் செய்தாலும் தவறு தான்.

இவ்வாறான சம்பவம் ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒன்று. நீதியைப் பாதிக்கப்பட்டவருக்கு பெற்றுக்கொடுப் போம், என்றும் குறிப்பிட்டார். (வ 5,31)

# 'எக்கிய' அல்ல 'எக்சத்' என்றே புதிய அரசமைப்பில்வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 9
புதிய அரசமைப்பில், இலங்கையை ஒற்றையாட்சி நாடு 'ஏக்கிய (யுனிற்றரி)' என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக ஐக்கிய நாடு 'எக்சத் (யுனைட்டட்)' என்றே அழைக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏகிய ராஜ்ய (யுனிற்றரி அரசு) என்ற சிங்களச் சொல், எக்சத் ராஜ்ய என்று புதிய அரசமைப்பில் மாற்றப்பட வேண்டும். இலங்கை ஒருபோதும் ஒற்றையாட்சி நாடாக இருந்ததில்லை.

தனித்தனியாக வாழ்ந்த பல மக்கள் குழுமங்கள் பிரிட்டிஷரால் ஒன்றாக கொண்டு வரப்பட்டன. பின்னர் பெரும்பான்மை சமூகத்தினரால் ஒற்றையாட்சி திணிக்கப்பட்டது. எனவே, அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசமைப்பை உருவாக்கும் போது, இந்த நாட்டில் வித்தியாசமான அலகுகள் பிரிட்டிஷாரால் ஐக்கியப்படுத்தப்பட்டன என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதனால்தான், ஐக்கியம் அல்லது எக்சத் (யுனைட்டட்) என்ற சொல்லை நாம் பயன்படுத்த வேண்டும். இத்தகைய மாற்றம் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கும். ஐக்கிய (எக்சத்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டால், சிங்களத் தலைவர்களின் இதயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும் - என்றார். (வ-5)

### 87 கிலோ மாட்டிறைச்சி தனியார் பேருந்தில் மீட்பு மூன்று பேர் கைது

பருத்தித்துறையிலிருந்து வவுனியாவுக்குப் பயணித்த தனியார் பேருந்திலிருந்து 87 கிலோகிராம் மாட்டிறைச்சியைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த பேருந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தாண்டிக்குளத்தில் நேற்றுமாலை இடம்பெற்றது.

"பருத்தித்துறையிலிருந்து வவுனியாவுக்கு பேருந்தில் மாட்டிறைச்சி கடத்துவதாகத் தகவல் கிடைத்தது. தாண்டிக்குளம் பகுதியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் வைத்து பொலிஸார் குறித்த பேருந்தை மறித்துச் சோதனையிட்டபோது இரண்டு பொதிகளாக்கப்பட்ட நிலையில் இறைச்சி காணப்பட்டது" என்று தாண்டிக்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-101)

### ஒற்றையாட்சி...

கள் இணைந்து இடைக்கால அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாடுகளை எதிர்வரும் வியாழக் கிழமை வெளியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளன. இதற்கு முன்னதாக, அஸ்கிரிய பீடத்தினரைச் சமாளித்து இடைக்கால அறிக்கையுடன் இணங்கச் செய்யும் முயற்சிகளை முன்னெடுக்க அரசு திட்டமிட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல அஸ்கிரிய பீடத்தினரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். பேச்சின் முடிவில் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு முழுமைப்படுத்தப்படவில்லை. நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் யோசனைகளே உள்ளடக்கப்பட்டுள்ளன.

பரந்த விவாதத்தை நாம் நாடாளுமன்றத்தில் முன்னெடுப்போம். சகல கட்சிகளினதும் ஆதரவுடன் மாத்திரமே இதனை தடைகளின்றி முன்னெடுக்க முடியும். நாடாளுமன்றத்தில் சகல தரப்பினரும் ஆதரித்தால் மட்டுமே மக்களின் முழுமையான ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு முன்னர் அரசமைப்பு உருவாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு இருக்கவில்லை. இப்போது அவ்வாறு அல்லாது தமிழர் தரப்பினர் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கி புதிய அரசமைப்பை ஆதரிக்கும் நிலமை காணப்படுகின்றது.

பௌத்தம் தொடர்பிலும், ஒற்றையாட்சி என்ற விடயத்திலும் மாற்றுச் சிந்தனையை முன்னெடுக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. இவை தொடர்பில் விவாதிக்கவே தேவையில்லை. போரின் பின்னர் இந்த நாடு புதிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. புதிய ஆரம்பம் ஒன்று அவசியம் என்று மக்கள் எதிர்பார்த்து செயற்படும் நிலையில் இதுவரையில் அவ்வாறான ஒரு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இனங்களுக்கு இடையேயான அவநம்பிக்கை இன்றும் உள்ளது. தமிழர் சிங்களவரை நம்புவதில்லை, சிங்களவர் முஸ்லிம்களை நம்புவதில்லை என்று இனங்களுக்கு இடையிலான குழப்பங்கள் இன்றும் தொடர்கின்றது.

சகல மக்களின் அரசியல் பிரதிநிதிகளும் சகல கட்சிகளும் இணைந்து நாட்டுக்கு தேவையான வகையில் புதிய அரசமைப்பை உருவாக்க முடியுமாயின் அதுவே நல்லிணக்கத்தை வெற்றி கொள்ளும் முக்கிய வழியாகும். புதிய ஆரம்பம் ஒன்றை உருவாக்க புதிய அரசமைப்பு அவசியமாகும்.

மகாநாயக்க தேரர்களை நிராகரித்து எந்தச் செயற்பாட்டையும் முன்னெடுக்க முடியாது. சிங்கள மொழியில் ஒரு வகையிலும் ஆங்கிலத்தில் வேறு விதமாகும் அரசமைப்பு உள்ளதாகக் கூறுகின்றனர். நீதிமன்றத்தில் சிங்களப் பிரதியையே அங்கீகரிப்பார்கள். சிங்களப் பிரதியில் ஒற்றையாட்சி, பௌத்த முன்னுரிமை என்ற அனைத்துமே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தப் பிரச்சினைகளும் ஏற்படப்போவதில்லை. பிரச்சினையை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலையில் சிலர் முயற்சிகளை முன்னெடுத்து வரும் நிலையில் அதனை நாம் பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை -என்றார். (வ-5,31)

### மிளகாய்...

டப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்திருந்த 4 பேர் அடங்கிய கொள்ளைக் கும்பலே இந்தக் கைவரிசையில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

சம்பவம் புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரப்பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்றது. தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சம்பவம் இடம்பெற்றது. கொள்ளையர்கள் மிளகாய்த் தூள் தூவியதால் மாணவி பாதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

"மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் இருவர் மாணவி மீது மிளகாய்த்தூளை வீசியுள்ளனர். அதனைத தொடர்ந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், நிலை தடுமாறி நின்ற மாணவியிடம் சங்கிலியைக் கொள்ளையடித்துச் சென்றனர்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

"புதுக்குடியிருப்பில் இரவு நேரங்களில் கும்பல்கள் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தநிலையில் தற்போது பகலிலும் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டு கொள்ளைக் கும்பல்கள் பொதுமக்களுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றன" என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-4-ரி3)

### வாழ்வாதாரம்...

தெரிவித்தனர்.

சுப்பிரமணியம் கரன் (வயது - 38) என்பவரே சுவிற்சர்லாந்தில் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டார்.

அவர் கொல்லப்பட்ட தகவலை அந்த நாட்டிலுள்ள அவரது நண்பர்கள் மூலமாகவே முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு அனந்தபுரத்திலுள்ள குடும்பத்தினர் அறிந்துகொண்டுள்ளனர். இது தொடர்பில் இலங்கை அரசின் அயலுறவு அமைச்சிடமிருந்தோ சுவிற்சர்லாந்து தூதரகத்திடமி ருந்தோ எதுவித தகவலும் கிடைக்க வில்லை என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

"அவருக்கு 4 பெண்கள் உள்பட 9 சகோதரர்கள் உள்ளனர். இவரது பெற்றோர் போரின் போது எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்து விட்டனர். அவர் திருமணம் செய்து 2 பிள்ளைகளின் தந்தை.

வறுமையிலிருந்து அவரால் மீளமுடியவில்லை. வீட்டுக் காணியை ஈடு வைத்தும், தம்மிடம் இருந்த கால்நடைகளை விற்றும் சிரமத்தின் மத்தியில் கடன்பெற்று 2015ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்துக்குச் சென்றுள்ளார். அங்கு தஞ்மடைந்தோர் முகாமில் இருந்து வேலைக்கு சென்றுவந்த நிலையில் அவர் கொல்லப்பட்டிருக்கிறார்" என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

சுவிஸின், டிசினோ மாகாணத்தில் உள்ள பிரிஸ்ஸாகோ நகரில் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸார் அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் இருவரை குறித்த சந்தேகநபர் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயற்சித்தார் என்று அவர் மீது அந்த நாட்டுப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (வ-4-ரி3)

### அமைச்சர்...

லைகளில் கற்க ஏதுவான வழிகளை மாகாணக் கல்வி அமைச்சு செய்ய வேண்டும்" என்று வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் க.சிவநேசன், மாகாண சபையின் கடந்த வார அமர்வில் யோசனை முன்வைத்திருந்தார்.

அவரது யோசனை தொடர்பில் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் வெளியிட்டிருந்த நிலையில் இலங்கை ஆசிரியர் சங்கமும் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, தீவகம் போன்ற பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் நகரப்பகுதியிலும் ஏனைய வசதியான இடங்களிலுமே புதிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில் பின்தங்கிய பாடசாலைகளை மூடுங்கள் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கூறுவது எந்தளவுக்கு நியாயமானது?

மாகாணத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய மக்கள் பிரதிநிதி இவ்வாறு தெரிவித்திருப்பது வேடிக்கையாகவும் கவலையான விடயமாகவும் இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக ஆசிரியர் நியமனத்தில் குளறுபடிகள் இடம்பெற்று வருகின்றன. ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்போது பொதுவாக அவர்களின் முதல் நியமனம் பின்தங்கிய பாடசாலைகளுக்கு வழங்கப்படுவது வழமை. ஆனால் மாகாணக் கல்வி அமைச்சு ஒரு பகுதியினருக்கு மட்டும் கிராமங்களில் நியமனம் வழங்கிவிட்டு மிகுதிப் பேருக்கு நகர்ப்பகுதி பாடசாலைகளில் நியமனம் வழங்குகின்றது. கிராமப் பகுதி மாணவர்களின் கல்விநிலை மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது - என்றார். (வ-48)

### வழக்கை...

முடியாது" என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "நீங்கள் (சட்டமா அதிபர்) கூறும் காரணத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. எட்டு வருடங்களுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளாக வழக்கு நடைபெற்று வருகின்றது. சாட்சியாளர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்புக் கூறவேண்டியது அரசுதான். சாட்சியாளர்களின் பாதுகாப்பைக் காரணம் காட்டி வழக்கை மாற்றியமையை ஏற்றுக்கொள்ள முடியாது. சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களின் சட்டத்தரணிகள் அநுராதபுரத்துக்கு வருகை தருவதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன. இவற்றோடு தடுப்பிலுள்ளவர்களுக்கும் மொழி சார்ந்த பிரச்சினையும் காணப்படுகின்றது. கட்டாயமாக வவுனியா மேல் நீதிமன்றத் துக்கே அவர்களின் வழக்குகள் மீளவும் மாற்றப்படவேண்டியது அவசியம்" என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், சட்டமா அதிபர் இதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் வழக்கை வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றும் முயற்சிகள் இடம்பெற்ற போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்துமாறு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவிடம் கடிதம் மூலம் கோரியிருந்தார். அவர்கள் மூவருக்கும் எதிரான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றிலேயே தொடர்ந்து நடத்தப்படும் என அரச தலைவரின் செயலாளரால் பதில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5,31,101)

### 14 ஆவது...

குக்கு மூவரும் அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மேல் நீதிமன்றில் 4 ஆண்டுகளாக இடம்பெற்ற வழக்கை சட்டமா அதிபர் அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றியுள்ளார். இதனை எதிர்த்து கடந்த இரு வாரங்களான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ம.சுலக்சன், இ.திருவருள். ரி.தர்சன் ஆகிய மூன்று அரசியல் கைதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-5,31)

### யாழ்...

கள் எல்லோரையும் விடுவிக்கக் கோரியும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் கவனவீர்ப்பு போராட்டங்கள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் காலை 9மணி முதல் 12மணி வரையில் யாழ். நகர் மையப் பேருந்து நிலையத்துக்கு முன்னால் நடைபெறவுள்ளதோடு, வவுனியாவில் முற்பகல் 10 மணிக்கு வவுனியா மையப் பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ளது. (வ-5,31)

### சரத்தின்...

இணைப்பாளர் காமினி வியாங்கொட ஆகியோர் தனித்தனியாக நான்கு மனுக்களை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5,31)

### 2018 இல்...

வாகனங் களை இதன்மூலம் கண்காணிக்க முடியும். தொலைத் தொடர்புக் கோபுரங்கள் ஊடாக அலைபேசிகள் எங்கிருந்து இயங்குகின்றன என்பதைக் கண்டறிவதைப் போன்றதொரு தொழில் நுட்பமே இதில் பயன்படுத்தப்படவுள்ளது" என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வ-5,31)

## மைலோ கிண்ண கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், ஒக். 9
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில், கிளிநொச்சி மாவட்ட கழகங்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள்.
உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கைப் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் உழவர் ஒன்றிய அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற உதயதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும், வட்டக்கச்சி யுனைற்ரெட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
பிறிதொரு ஆட்டத்தில் சந்திரோதயா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சந்திரோதயா விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
மற்றொரு ஆட்டத்தில், பரந்தன் வட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிறைட் விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில், ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

## வெளியேறியது யாழ். மத்தி

யாழ்ப்பாணம், ஒக். 9
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப் பந்தாட்டத் தொடரில், 20வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெளியேற்றப்பட்டது.
டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 47:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடித் தோல்வியடைந்தது.
(ம-23)



## பளுதூக்கல் தொடரில் யாழ். இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 9
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சம்பியனாகவும், 20 வயது ஆண்கள் பிரிவில் இரண்டாவது இடத்தையும், ஒட்டுமொத்த ஆண்கள் பிரிவில் சம்பியனாகவும் வந்தது.
20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 62 கிலோ எடைப் பிரிவில் யு.சுஜந்தன் 195 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 85 கிலோ எடைப் பிரிவில் ஏ.எட்வின் 200 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 56 கிலோ எடைப் பிரிவில் பி.அபிநயன் 174 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 105 கிலோ எடைப் பிரிவில் எஸ். மிதுன் 173 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 105 கிலோவுக்கு மேற்பட்ட பிரிவில் ரி.கிரிசான் 176 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒட்டு மொத்தமாக 3 தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப்பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.
(ம-422)

## அண்ணா, நீக்கிலஸ் அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 9
உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அண்ணா, சென். நீக்கிலஸ் அணிகள் வெற்றி பெற்றன.
சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் அண்ணா அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சிறப்புத் தேவையுடையோரின் விளையாட்டுப்போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஒக். 9
தென்மராட்சி பிரதேசத்தில் சிறப்புத் தேவையுடையோர் விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிமுதல் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினத்தையொட்டி இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
(ம-ய-9)

## வயாவிளான் மத்திக்குத் தங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 9
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவி கே.ரஜீனா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் தொடர் கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது. இதில் 75 கிலோ எடைப் பிரிவில் கே.ரஜீனா 107 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (ம-422)

## றேஞ்சர்ஸ் காலிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 9
திக்கம் சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
திக்கம் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸின் முதல் கோல் பதிவானது. இரண்டாம் பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய றேஞ்சர்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-422)

## கலைமதி சேவியர் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஒக். 9
மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கலைமதி, சென். சேவியர் அணிகள் வெற்றிபெற்றன.
சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில், சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் கழகம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடித் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற இளவாலை கன்னியர்மட அணி. (ம-422)

## பாண்டியன்குளம் ம.வித்திக்கு பளுதூக்கலில் வெண்கலங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 9
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கலில் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் இரண்டு வெண்கலப் பதக்கங்களைச் சுவீகரித்தது.
கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 69 கிலோ எடைப் பிரிவில் ஞா.நிருசா 77 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 63 கிலோ எடைப் பிரிவில் ம.கஜனி 76 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# தென்னாபிரிக்கா இமாலய வெற்றி

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், இன்னிங்ஸாலும் 254 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று தொடரை 2:0 என்று கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி. இரண்டரை நாள்களில் இந்த ஆட்டம் முடிவுக்கு வந்துள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முன்வரிசை வீரர்களின் சிறந்த ஆட்டத்தின் மூலம் 4 இலக்குகளை இழந்து 573 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. மார்க்ரம் 143 ஓட்டங்களையும், பிளாசிஸ் ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்களையும், அம்லா 132 ஓட்டங்களையும், எல்கர் 113 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் றோய் 3 இலக்குகளையும், ரூபல் ஹொஸைன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 147 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது.
அதிகபட்சமாக, டாஸ் 70 ஓட்டங்களையும், கையிஸ் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ரபாடா 5 இலக்குகளையும், ஒலிவர் 3 இலக்குகளையும், பார்நெல், மகாராஜ் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
தொடர்ந்து துடுப்பெடுத்தாடத் தகுதியற்ற நிலையில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடியது பங்களாதேஷ் அணி. இரண்டாவது இன்னிங்ஸிலும் அந்த அணி 172 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து இன்னிங்ஸாலும் 254 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று தொடரை 2:0 என்று கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி. அதிகபட்சமாக மகமதுல்லா 43 ஓட்டங்களையும், கையிஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ரபாடா 5 இலக்குகளையும், பிளுக்வையோ 3 இலக்குகளையும், ஒலிவர், பார்நெல் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம)





## கேலப் முதலிடம்

சீன ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப். இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றதன் மூலம் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்துக்கும் அவர் முன்னேறினார்.
பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், கேலப்பை எதிர்த்து லத்விய வீராங்கனை ஒஸ்டபென்கோவ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் முறையே 6:2, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார் கேலப்.
சீன ரென்னிஸ் தொடரில், இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றதன் மூலம், பெண்களுக்கான பன்னாட்டு ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் கேலப் முதல் இடத்துக்கு முன்னேறினார். இந்த பட்டியலில் இதுவரை ஸ்பெய்னின் கார்பைன் முகுருசா முதல் இடத்தில் இருந்தார். 4 வார காலங்கள் மட்டுமே அவரால் முதலிடத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்தது. 26 வயதான சிமோனா கேலப், பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணங்கள் எதையும் கைப்பற்றாமல் முதலிடத்துக்குச் சென்றுள்ளார். பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்துக்குத் தகுதி பெற்ற முதலாவது ருமேனிய வீராங்கனை என்ற பெயரையும் கேலப் பெற்றார். (ம)


## மே.இ.தீவுகள் அணி அறிவிப்பு



சிம்பாப்வே - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.
மேற்கிந்தியத் தீவுகள் அணி சிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது.
முதலாவது ஆட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் இந்தத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.
*மேற்கிந்தியத் தீவுகள் அணி–*
ஜேஸன் கோல்டர் (அணித்தலைவர்), பிரீத்வைட், தேவேந்திர பிஸ்சூ, ஜெர்மைன் பிளக்வூட், றொஸ்டன் சேஸ், மைக்கல் கமின்ஸ், டவ்ரிச் (இலக்குக் காப்பாளர்), சனோன் கபிரியேல், ஹெட்மயர், கைல் ஹோப், அல்ஸாரி ஜோசப், கிரண் பவல், றேமன் றீபியர், றோச். (ம)

# முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆஷஸ் தொடரில் இருந்து பற்றின்சன் விலகல்

முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் இருந்து விலகியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் பற்றின்சன்.
மினி உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கினார் பற்றின்சன். அதன் பின்னர் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில் இருந்து விலகினார். இந்த நிலையில் காயம் குணமடைந்து பயிற்சிக்குத் திரும்பியபோது, காயம் மேலும் பெரிதானதை அடுத்து ஆஷஸ் தொடரில் இருந்து பற்றின்சன் விடுவிக்கப்பட்டார்.
27 வயதான பற்றின்சனுக்கு, முன்னரே பல தடவைகள் முதுகுப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் பற்றின்சனின் கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்கு உட்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



பற்றின்சன் ஆஷஸ் தொடரில் இருந்து விலகியுள்ள நிலையில், கட்டர் நீல் பதில் வீரராக அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

**சாரதி தேவை**

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சாரதி தேவை. பொருத்தமான தகைமையும் ஆர்வமும் உடைய விண்ணப்பதாரர்கள் நேரில் சமுகம் தரவும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**உடனடி வேலைவாய்ப்பு**

எமது சர்வதேச நிறுவனத்தின் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கைக் கிளைகளில் O/L, A/L கற்ற மாணவர்களுக்கான சிறந்த வேலைவாய்ப்பு.

- பயிற்சியுடன்கூடிய வேலைவாய்ப்பு
- எதிர்காலத்திற்கான திட்டமிடல்
- சிறந்த சம்பளத்துடன்கூடிய பதவியுயர்வு
- வடக்கு, கிழக்கு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை
- திறமையானவர்களுக்கு எமது வெளிநாட்டுக்கிளைகளிலும் வேலைவாய்ப்பு.
- பயிற்சியின்போது 15000/= - 25000/= பயிற்சியின்பின் 45000/= - 60000/= EPF, ETF, Medical உள்ளடங்கலாக தங்குமிட வசதி இலவசம்.

**தொடர்பு - 077 408 3273, 021 567 9002**

**Immediate Vacancy**

யாழ் நகரில் இயங்கும் பிரபல பல்பொருள் அங்காடிக்கு (Food City) முகாமையாளர் (Supermarket - Manager) உடன் தேவை. ஆக குறைந்தது உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ இரண்டு வருட முன் அனுபவம் தேவை. சுயவிவரக்கோவையை பின்வரும் மின்அஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.

afccolombo@sltnet.lk மேலதிக தகவல்களுக்கு

**077 477 3481**

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931362
follow us : cnrworldwideexpress


# அன்டோராவை வீழ்த்தி போர்த்துக்கல் அபாரம்




ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களில், ஐரோப்பிய நாடுகளின் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி அபார வெற்றிபெற்றது.

போர்த்துக்கலை எதிர்த்து அன்டோரா மோதியது. இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 63ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 87ஆவது நிமிடத்தில் ஆந்ரே மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது போர்த்துக்கல் அணி.

ஏனைய ஆட்டங்களில் நெதர்லாந்து 3:1 என்ற கோல் கணக்கில் பெலாரஸையும், சுவீடன் 8:0 என்ற கோல் கணக்கில் லக்ஸசம்பொர்க்கையும், பெல்ஜியம் 4:3 என்ற கோல் கணக்கில் பொஸ்னியாவையும், கிரீஸ் 2:1 என்ற கோல் கணக்கில் சைப்பிரஸையும் வீழ்த்தின. (ம)


**இரசாயனவியல்**
குழு / தனி வகுப்புக்கள்
2019 / 2018 பிரிவுகள்
யாழ்.நகரில்
N.Vakeesan
077 977 1936


## மரண அறிவித்தல்



### கலைச்சுடர் நாகராசா இராமச்சந்திரா
(சிரேஸ்ட ஊடகவியலாளர், J.P)

பருத்தித்துறை அல்வாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி மற்றும் மண்டைதீவை வசிப்பிடமாகவும் தற்போது கலைமணி வீதி, கட்டைப்பிராயை வதிவிடமாகவும் கொண்ட நாகராசா இராமச்சந்திரா (07.10.2017) மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் நவரத்தினராசா (முன்னாள் கிராம அதிகாரி மண்டைதீவு) தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீரங்கராணி (ஓய்வு நிலை அழகியற் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர், தீவக வலயம்) அவர்களின் அன்புக்கணவரும் பரமேஸ்வரி, சுசிலாதேவி, நாகேஸ்வரநாதன், யசோதா (கனடா) ஆகியோரின் சகோதரரும் சிதம்பரராணி காலஞ்சென்ற மதுரராணி மற்றும் மங்களராணி, நவபாலகோபால் (ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர்), ஜெயகோபால் (பிரான்ஸ்), இராசகோபால் (கனடா), காலஞ்சென்ற முத்துராணி (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் பிருந்தகுமாரி (சுவிஸ்), விநோதராஜ் (ஆசிரியர், யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலன் (சுவிஸ்), சாம்பவி (காப்புறுதி உத்தியோகத்தர் HNB ASSURANCE, மானிப்பாய்) ஆகியோரின் அன்புமாமனாரும் அரங்கன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"பிருந்தாவனம்"**
**கலைமணி வீதி, கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். 077 9025 712**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### முருகேசு கார்த்திகேசு



நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கார்த்திகேசு நேற்று (08.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு இராமாசி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும் சுமதியின் (கருணா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தங்கம்மா மற்றும் கணபதிப்பிள்ளை, குஞ்சுமணி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாலாம்பிகை, தங்கமலர், வேலாயுதம், பரமலிங்கம், பலசாலி, மயில்வாகனம், தேசோவதி (வாணி) மற்றும் சாந்தா (கிளி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகாலட்சுமி (சாந்தி, ஊற்றுபுலம், கிளிநொச்சி) காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பாஸ்கரன் (நந்தினி பேக்கரி,கொக்குவில்), சுதாமதி, தண்மதி (சாரதா,ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), ரவீந்திரன் (யாழினி ரான்ஸ்போட்), செந்தில்குமார் (மாவீரர் நல்லமுத்து), விக்கினேஸ்வரன் (நிவேதினி வெதுப்பகம், முல்லைத்தீவு), சிவகுமார் (அண்ணா வேக் கவுஸ், முள்ளியவளை), இந்துமதி (முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரன், ஜெஸ்மின் சுதா, சந்திரகுமார், கிருஸ்ணவேணி, றஜிதா, சுதா, ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் யசோதினி, சுதர்சன் (முகிலன் வெதுப்பகம், ஊற்றுப்புலம்), சுகந்தினி, யசோதரன் (மாவீரன் முகிலன்), ஜெயந்தினி, விஜோதினி, கங்காதரன், நிவேதினி, நிவேதிகா (யாழ். பல்கலைக்கழகம், மருத்துவ பீட மாணவி), நிவே திகன் (யா\புனித பத்திரசியார் கல்லூரி,உயர்தர மாணவன்), நித்திலன் (யா \கொக்குவில் இந்து கல்லூரி .உயர்தரமாணவன்),சிந்துயன்,துவாரகன்,யாழினி,நிதுஷன், தர்மிளன்,புகழினி,கம்சாயினி,கிருசாளினி,டிலானி,விதுரன், சுவிசிகா,யதுசா,சஞ்சயன் ஆகியோரின் அன்பு பேரனும் கயூரி,ஐஸ்ணவி,கண்ணாளன், அரவிந்தன், ஐங்கரன், தமிழினி, கஸ்மிகா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 43, முதலாம் குறுக்குத்தெரு மணியந்தோட்டத்தில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (09.10.2017) பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முதலாம் குறுக்குத்தெரு,**
**மணியந்தோட்டம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.